Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 ஆனி 24 திங்கட்கிழமை (08.07.2013) பக்கங்கள் 20 ஓசை – 281



3 அறிமுகமாகிறது (04)



சம்பியன் (08)



சாதனை (09)



வலம் வருகிறது (13)



பொலிஸில் புகார் (18)

# '13' திருத்தங்கள் குறித்து மக்களுக்கு அறிவிக்கப்படும்

## அமைச்சர் பசில் தெரிவிப்பு



(கொழும்பு)

13 ஆவது திருத்தச் சட்டத்தில் மேற் கொள்ளப்படும் திருத்தங்கள் தொடர்பாக பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுமெனவும், இந்தியாவுடன் நடத்தப்பட்ட பேச்சுக்கள் தொடர்பில் அனைத்து விடயங்களையும் பகிரங்கமாகத் தெரிவிக்க முடியாதெனவும் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

13 ஆவது திருத்தச் சட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்கள் தொடர்பில் பொது மக்களுடன் கலந்துரையாடுவதென்ற முடிவில் நாம் அனைவரும் ஒரே நிலைப்பாட்டில் உள்ளோம். இதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு சிறந்த தெரிவாக உள்ளது.

இந்தியப் பிரதமரின் அலுவலக துணை அமைச்சர் நாராயணசுவாமி, இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் படி ஏற்படுத்தப் பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தை இலங்கை தன்னிச்சையாக செயற்படுத்த முடியாதெனத் தெரிவித்தமை தொடர்பாக கருத்துத் தெரிவித்த அமைச்சர் பசில், அந்தத் தகவலை நானும் ஊடகங்களில் பார்வையிட்டேன். எனினும் சில விடயங்களை வெளிப்படையாகப் பேசலாம். சில விடயங்களைப் பற்றி பகிரங்கமாக பேசமுடியாது. இது கணவன், மனைவி இடையிலான இரகசியம் போன்று காக்கப்படவேண்டும். இராஜதந்திர விவகாரங்களில் இது மிகவும் முக்கியமான அம்சம். நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைத்துள்ளதனை இந்தியா முழுமையாக வரவேற்றுள்ளது.

(19) ஆம் பக்கம் பார்க்க

## அரசாங்கம் அழைத்தவுடன் செல்ல மடையர்கள் அல்ல கூட்டமைப்பு

### என்கிறார் சுமந்திரன் எம்.பி.




அரசாங்கத்துடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப் பாட்டை நிறைவேற்றாது அழைத்தவுடன் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் சென்று சேர்வதற்கு நாங்கள் மடையர்கள் அல்ல என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சிகளின் எதிரப்பு இயக்கம் நேற்று கொழும்பில் ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய போதே சுமந்திரன் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

2011 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தெரிவுக்குழு குறித்து அரசாங்கம் பேசியது. ஏற்கனவே அரசாங்கத்துடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் எடுக்கப் பட்ட தீர்மானத்தின்படி அந்த யோசனைகளை கொண்டு நாடாளுமன்றத தெரிவுக்குழுவில்

(19) ஆம் பக்கம் பார்க்க

## புத்தகாயாவில் குண்டுவெடிப்பு ஜனாதிபதி மகிந்த அதிர்ச்சி



இந்தியாவின் பீஹார் மாநிலத்தில் அமைந்துள்ள புத்தகாயா பௌத்த வழிபாட்டிடத்தில் நேற்று அதிகாலை 8 குண்டுகள் வெடித்துள்ளன.

(19) ஆம் பக்கம் பார்க்க

## சீனாவின் மூலோபாயத் திட்டத்தை முறியடிக்கும் முயற்சியில் இந்தியா

### இலங்கை, மாலைதீவுடன் கடல்சார் ஒப்பந்தம்

இந்தியப் பெருங்கடற் பிராந்தியத்தில், கால்பதிக்கும் சீனாவின் மூலோபாயத் திட்டத்தை முறியடிக்கும் நடவடிக்கையாக, மாலைதீவு மற்றும் இலங்கையுடன் இந்தியா, முத்தரப்பு கடல் சார் ஒத்துழைப்பு உடன்பாடு ஒன்றைச் செய்து கொள்ளவுள்ளதாக புதுடில்லியில் இருந்து வெளியாகும் டெக்கன் ஹெரால்ட் நாளிதழ் தகவல் .


(19) ஆம் பக்கம் பார்க்க

## 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக இரத்துச்செய்ய வேண்டும்

### மீண்டும் வலியுறுத்துகிறார் கோத்தா

(கொழும்பு)

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவாக்கப் பட்ட அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக இரத்துச் செய்வதையே தான் விரும்புவதாக படைத்துறைச் செயலாளர் கோதாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அத்துடன், 13 ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பில் இந்தியாவுடன் எதுவும் பேசக்கூடாது.



(19) ஆம் பக்கம் பார்க்க

## அதிகாரப் பகிர்வின் மூலமே தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு

### கூறுகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

அதிகாரப் பகிர்வின் மூலமே தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வினை எட்டமுடியுமென்பதுடன் அதிகாரப் பகிர்வின் மூலமாக நாடு ஐக்கியப்படுமே ஒழிய பிரியப்போவதில்லை என்பதனை அரசாங்கம் புரிந்து கொள்ளவேண்டும். எனினும் தேசிய பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பில் அரசாங்கத் திடம் உறுதியான கொள்கை எதுவும் இல்லையெனவும் ஐ.தே.க. குற்றம் சுமத்தியுள்ளது.

13 ஆம் திருத்தத்துக்கு அப்பால் சென்று தேசியப் பிரச்சினைக்கான தீர்வொன்றினை முன்வைப்பதாக அரசாங்கம் உறுதியளித்தது. ஆனால் இன்று மாகாணசபைகளுக்கு உள்ள அதிகாரங்களையும் நீக்குவதற்கு

(19) ஆம் பக்கம் பார்க்க


## சுன்னாகம் நகர மத்தியிலிருந்து மாத இறுதியில் இராணுவம் வெளியேறும்


(சுன்னாகம்)

சுன்னாகம் நகர மத்தியிலுள்ள இராணுவத்தினர் தாம் தங்கியுள்ள பொதுமக்களின் வீடுகளிலிருந்து இம்மாத இறுதியில் வெளியேறவுள்ளதுடன், பொது மக்களது வீடுகளையும், உரிமையாளர்களிடம் கையளிக்கவுள்ளதாகத் தெரிவித்தனர். சுன்னாகம

(19) ஆம் பக்கம் பார்க்க

# நெற்பயிர்களில் சிற்றுண்ணித் தாக்கம் கிளிநொச்சியில் கட்டுப்படுத்த நடவடிக்கை





கிளிநொச்சி மாவட்ட சிறுபோக நெல் வயல்களில் சிற்றுண்ணித்தாக்கம் பரவலாக அவதானிக்கப்பட்டுள்ளதாகவும் இவற்றை அவதானித்து விவசாயிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிளிநொச்சி மாவட்ட விவசாயத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் விடுத்துள்ள செய்திக்குறிப்பில்,

கிளிநொச்சி மாவட்ட சிறுபோக நெல் வயல்களில் சிற்றுண்ணித்தாக்கம் பரவலாக அவதானிக்கப்பட்டுள்ளது. முரசுமோட்டை, ஊரியான், பன்னங்கண்டி, சின்னக்காடு, இராமநாதபுரம், வட்டக்கச்சி, கண்டாவளை, உருத்திரபுரம் ஆகிய பிரதேசங்களில் தாக்கம் கூடியளவாகக் காணப்படுகின்றது.

அக்கராயன்குளம், கரியாலை நாகபடுவான், சின்னபல்லவராயன்கட்டு போன்ற பிரதேசங்களிலும் தாக்கம் குறைந்தளவில் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

தற்போது நிலவுகின்ற கூடிய வெப்பநிலையும், ஈரப்பதனும் இதன் பெருக்கத்திற்கு சாதகமாக அமைகின்றது. சிற்றுண்ணியின் பாதிப்பினால் நெல்வயல்களில் 5-95 வீதம் வரையான இழப்பு ஏற்படுகின்றது.

சிற்றுண்ணிகள் மிகச் சிறியவையாகையால் வெற்றுக் கண்ணால் இவற்றைப் பார்க்க முடியாதுள்ளது. உருப்பெருக்கும் கண்ணாடி மூலம் பார்க்கும் போது முட்டை, குடம்பி, கூட்டுப்புழு என்பவற்றை வெண்ணிறத்தில் காணலாம். நெல் இலைகளை கைகளில் தட்டும்போது இச்சிற்றுண்ணிகள் ஊர்வதனை உணர முடியும்.

இதன் மூலம் இவற்றை இலகுவாக அடையாளங்காண முடியும் எனக் குறிப்பிடப்பட்டுள்ள அச்செய்திகுறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இவை இலை மடலுக்குள் இருந்து கொண்டு நெற்தாவரச் சாற்றை உறிஞ்சிக்குடிப்பதுடன் குடலைப் பருவத்தில் கதிர் முளையத்தின் சாற்றையும் உறிஞ்சிக் குடிப்பதனால் விவசாயிகளால் இதனை இனங்கண்டு கொள்ள முடியாதுள்ளது.

தாக்கத்தினால் நெற்தாவர இலையின் நுனியும் நுனியிலிருந்து இரு பக்க விளிம்புகளும் மஞ்சளாகி பின்னர் கருகுவதை அவதானிக்கலாம். இதனைக்கட்டுப்படுத்த புறொபினோபொஸ் (கல்குறோன், சொல்குறோன், செலிக்குறோன், சுபர்குறோன்) பீடைநாசினியை 16 லீற்றர் தாங்கிக்கு 30 மில்லிலீற்றர் என்ற அளவில் ஏக்கரிற்கு 300 மில்லி லீற்றர் விசிறுவதன் மூலம் கட்டுப்படுத்தலாம் எனவும் விவசாயத் திணைக்களத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (29)

# அரியாலையில் மணல் கடத்தல் சந்தேகநபர்கள் கைது



அரியாலைப் பகுதியில் சட்டவிரோத மணல் கடத்தலில் ஈடுபட்டவர்கள் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுதலையாகியுள்ளனர்.

அரியாலைப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் கடத்தலில் ஈடுபட்ட 3 உழவு இயந்திரங்கள் யாழ். பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அதில் வந்தவர்களும் கைதுசெய்யப்பட்டு பின்னர் பொலிஸார் பிணையில் செல்ல அனுமதித்துள்ளனர்.

இவர்கள் இன்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படுவார்கள் என்றும் சாதாரணமான அளவில் அல்லாது கூடுதலான மணல் ஒவ்வொரு உழவு இயந்திரத்திலும் ஏற்றப்பட்டு வந்த வேளையில் பொலிஸார் இவர்களை மடக்கிப் பிடித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# முகாமைத்துவ உதவியாளர் வகுப்பு III ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

மாகாண முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு III இல் ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைவாக மாவட்ட அடிப்படையில் நேர்முகத்தேர்விற்கு தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு அவர்களின் செல்லிடத் தொலைபேசிக்கு குறுஞ்செய்தி மூலம் தகவல்கள் பரிமாறப்பட்டுள்ளன.

இவர்கள் அம்மாவட்டங்களின் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகங்களிற்கு எதிர்வரும் 10 ஆம் திகதி புதன் கிழமை காலை 9.00 மணியிலிருந்து நேர்முகத்தேர்விற்காக பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் (புகைப்படப் பிரதியுடன்), திருமணமான பெண் நேர்முகதாரியாயின் விவாகச்சான்றிதழ் (புகைப்படப் பிரதியுடன்), தேசிய அடையாள அட்டை (புகைப்படப் பிரதியுடன்), கல்விச் சான்றிதழ் - க.பொ.த (உ/த), க.பொ.த (சா/த) (புகைப்படப் பிரதியுடன்), கிராம சேவை உத்தியோகத்தரினால் வழங்கப்பட்டு பிரதேச செயலரால் உறுதிப்படுத்தப்பட்ட நற்சான்றிதழ்/வதிவிடச் சான்றிதழ் (2013.04.12 ஆம் திகதிக்கு முன்னர் உள்ள 6 ஆண்டு காலப்பகுதியில் ஆகக்குறைந்தது 3 ஆண்டுகளாயினும் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்தமை உறுதிப்படுத்தப்பட வேண்டும்), மாற்றுத்திறனாளியாயின் அது பற்றிய மருத்துவச் சான்றிதழ், வாக்காளர் இடாப்பின் மூலப்பிரதி, குடும்ப அட்டை மூலப்பிரதியுடன் சமுகமளிக்குமாறு வடமாகாண பிரதி பிரதம செயலாளர் (நிர்வாகம்) கேட்டுக் கொண்டுள்ளார்.

தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர் 'விபரம் வருமாறு,

குமாரவேலு காண்டீபன் (842792770V), செந்தூரன் சிந்துஜா (846513060V), கந்தசாமி கிரிசாந்தி (897301717V), இ.ஜெ.லோறா ஜெறோஜினி (937233078V), தியாகராஜா மயூரதி (907981606V), கிருபானந்தகிருஷ்ணன் பிரியங்கா (907452476V), சரவணபவானந்தன் மதியழகி (896390040V), தியாகராசா வேணிகா (918011315V), சிறிகரன் இனியாள் (918421033V), குகராசா தேனுஜா (928553280V), முகுந்தன் வினோகா (857903153V), கனகலிங்கம் பிருந்தன் (923511610V), வீரசிங்கம் தனுஜியா (856020746V), வேலாயுதபிள்ளை வானதி (935891337V), கணேசு நிலானி (927882861V), இருதயதாஸ் நிருபன் (881860350V), குகனேசன் கஜானி (907842215V), தவராசா பவித்திரா (925973971V), சக்திதாசன் சோபிகா (915153038V), மகேஸ்வரன் விஜிதா (866592071V), தேவராசா மனோசாந்தன் (901512833V), கணேசமூர்த்தி மாலினி (915431178V), சிவபாக்கியநாதன் சிவரூபி (897631628V), விஜயகுமார் சகிலா (878061489V), இராசநாயகம் அனோஜிதா (945060115V), சின்னத்துரை [illegible]வதனி (926282867V), தேவராசா தர்ஷினி (885953344V), குணராசா ஜெய்சினி (937723113V), வசந்தசந்திரன் மேரிடயனிகா (898430227V), சதானந்தன் யுனிற்றன் (932392631V), சர்வேந்திரன் தர்சனன் (841734254V), யுகதர்சன் சுபிதா (865091869V), தர்மலிங்கம் மதுரா (905140140V), தர்மராசா கிருத்திகா (915442757V), நடராஜசுந்தரம் சங்கீதா (927542412V), தேவராசா சியாமினி (928041506V), தர்மலிங்கம் சர்னியா (898252370V), தவராசசேகரன் சுகன்யா (937472919V), நாகேஸ்வரநாதன் கஜலக்சுமி (898520471V), தவலதன் சிவசக்தி (928120716V), ஜெயச்சந்திரா ஜெய[illegible]தி (906722992V)

(மிகுதி நாளை தொடரும்)

# வருடாந்த உற்சவம்

(யாழ் நிருபர்)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தைமலை ஸ்ரீமுருகன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று காலை பூசையுடன் ஆரம்பமாகவுள்ளதாக ஆலய வண்ணக்கர் பி.முத்துபண்டா தெரிவித்துள்ளார்.

திருவிழா தொடர்ந்து 15 தினங்கள் சிறப்பாக நடைபெற்று எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையுடன் நிறைவடையும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (10)


சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2441 திகதி 06-07-2013

ஆங்கில எழுத்து: H

வெற்றி எண்கள்: 01 15 43 48

போனஸ் இல: 25

ஜக்பொட் பரிசு ரூ.13,957,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 253052 | 20/- | 5,061,040/- |
| 2 இல | 18038 | 100/- | 1,803,800/- |
| 3 இல | 363 | 1,000/- | 363,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 10007 | 40/- | 400,280/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 687 | 1,000/- | 687,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 23 | 10,000/- | 230,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 13,957,000/- | - |
| 1 இல + போனஸ் இல | 12056 | 100/- | 1,205,600/- |
| 2 இல + போனஸ் இல | 555 | 500/- | 277,500/- |
| 3 இல + போனஸ் இல | 07 | 100,000/- | 700,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 499 | 200/- | 99,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 26 | 1,500/- | 39,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 295315 | | 12,867,020/- |

ஊதா நிற டிக்கட்டுகள் 2013 ஜுலை 10 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 14,646,825/-

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

C/2927



# சேவைநயப்பும் பிரிவுபசாரமும்

கடந்த ஆண்டில் வலிகாமம் கல்வி வலயத்தில் சேவையாற்றி ஓய்வுபெற்றும் இடமாற்றம் பெற்றும் சென்றுள்ள 21 உத்தியோகத்தர்களுக்கான சேவைநயப்பும் பிரிவுபசார வைபவமும் நடைபெறவுள்ளதாக வலிகாமம் கல்வி வலய நலன்புரிக் கழகம் அறிவித்துள்ளது.

இந்த வைபவம் நாளை பி.ப. 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களாக சேவையாற்றி ஓய்வுபெற்றவர்கள், முகாமைத்துவ உதவியாளர்களாக இருந்து இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளவர்கள், வலயக் கல்விப் பணிப்பாளராக, பிரதிக் கல்விப் பணிப்பாளராக இருந்து பதவியுயர்வும் இடமாற்றமும் பெற்றுச் சென்றவர்கள் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இவர்கள் மாலை அணிவித்தும், பண அன்பளிப்பு வழங்கப்பட்டும் நினைவுச்சின்னம் வழங்கப்பட்டும் கௌரவிக்கப்படவுள்ளனர். (06)





14 பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கில் கலந்துகொண்ட இந்து அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அறிமுகம் செய்து வைக்கப்படுவதையும் இந்து சமய கலாசார பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் உரையாற்றுவதையும் காணலாம். (130)

# யுத்தத்தால் பாதிக்கப்பட்டோருக்கு ஜனாதிபதியால் நட்டஈட்டுக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடந்த கால யுத்த சூழ்நிலை காரணமாக பாதிப்புக்குள்ளானவர்கள் சமர்ப்பித்த விண்ணப்பங்களுக்கு அமைய 591 பயனாளிகளுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவுகள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை அலரிமாளிகையில் நடைபெறவுள்ளது.

பயனாளிகளுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவுகள் அலரி மாளிகையில் வைத்து ஜனாதிபதியினால் வழங்கப்படவுளளது.

நட்டஈட்டுக் கொடுபபனவுக்கு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் அனைவருக்கும் அவர்களது முகவரிக்கு புனர்வாழ்வு அதிகார சபையின்ால் கடிதங்கள் அனுபபி வைக்கப்பட்டுள்ளது.

பய்னாளிகள் அனைவருக்குமான பயண ஒழுங்குகள் தங்குமிட வசதிகள், உணவு என்பவற்றை புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சு ஒழுங்கு செய்துள்ளதுடன், பயனாளிகள் அனைவரையும் எதிர்வரும் 10 ஆம் திகதி புதன்கிழமை பி.ப 4.30 மணிக்கு முன்னதாக பயண ஒழுங்குகளுடன் யாழ். மாவட்ட செயலகத்திற்கு சமுகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

நிகழ்வில் கலந்துகொள்வதற்கான ஏற்பாடுகள் தொடர்பாக மேலதிக விபரம் தேவைப்படுவோர் தமது பிரிவுக்குரிய கிராம சேவையாளரிடமோ அல்லது பிரதேசசெயலாளருடனோ தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளமுடியுமென யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அறிவித்துள்ளார்.

# மருத்துவ உபகரண தொழில்நுட்ப டிப்ளோமா புதிய கற்கை நெறி முதன்முதலாக ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

சுகாதார கல்விக்கான பல்கலைக்கழகக் கல்லூரி, உயிரியல் மருத்துவ உபகரண தொழில்நுட்பத்தில் டிப்ளோமா கற்கை நெறிக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

ஆங்கிலமொழி மூலம் நடைபெறும் மூன்று வருட முழுநேர இக்கற்கை நெறிக்கு க.பொ.த உயர்தரத்தில் விஞ்ஞான பாடங்களில் சித்திபெற்ற 18-29 வயதுக்கிடைப்பட்ட இளைஞர், யுவதிகள் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்ப முடிவு திகதி ஆகஸ்ட் 7 ஆகும். உள்ளூர் சர்வதேச சுகாதாரத் துறையில் வேலைவாய்ப்புக்குப் பொருத்தமான இந்தக்கற்கை நெறிக்கான சகல விரிவுரைகளும ஸ்ரீ ஜெயவர்த்தனபுர வைத்திய சாலை வளாகத்தில் அமைந்துள்ள சுகாதாரக் கல்விக்கான பல்கலைக்கழகக் கல்லூரியில் நடத்தப்படும்.

பணிப்பாளர், சுகாதாரக் கல்விக்கான பல்கலைக்கழகக் கல்லூரி, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர அரசினர் வைத்தியசாலை, தலப்பிட்டிய நுகேகொடை என்ற முகவரியில் விண்ணப்பப்படிவங்களையும், விபரங்களையும் பெற்றுக் கொள்ள முடியும். info@uchs.lk என்ற மின்னஞ்சல் மூலமும் தொடரபு கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (10)

# கல்வி அதிகாரிகள் மூவருக்கு இடமாற்றம்

யாழ்.மாவட்டத்தில் இலங்கை கல்வி நிர்வாகசேவை உத்தியோகத்தர் மூவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக வடமாகாணக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

நல்லூர்க் கோட்டக்கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி வந்த எஸ்.மாணிக்கராஜா, யாழ்.வலயக் கல்வித்திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் (கல்வி அபிவிருத்தி) யாழ். கல்வி வலயக் கல்வித் திணைக்களத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக (கல்வி அபிவிருத்தி) கடமையாற்றிய எஸ்.சற்குணராசா கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளராகவும், கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய வி.பாலசுப்பிரமணியம் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளராகவும் (நிர்வாகம்) இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (10)

# வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் உறுப்பினர்கள் பதவியேற்பு

(வடமராட்சி)

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் 19 ஆவது பதவியேற்பு விழா கரவெட்டிப் பிரதேசசபை கேட்போர் கூட மண்டபத்தில் வடமராட்சி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் எஸ்.பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது.

இவ் விழாவிலே லயன்ஸ் கழக முன்னாள் மாவட்ட ஆளுநர் லயன் எஸ்.இராகவன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். லயன்ஸ் கழகத்தின் புதிய தலைவராக லயன். வீ.எஸ்.தங்கராஜாவும், முதலாவது உபதலைவராக லயன் வி.சிவமேனனும், இரண்டாவது உப தலைவராக லயன் சேதுராஜாவும், மூன்றாவது உப தலைவராக லயன் ஏ.செந்தில்லிங்கமும், செயலாள் லயன் எஸ. முரளிதரனும் பொருளாளராக லயன் கே.மகிந்தனும், இயக்குநர் சபை உறுப்பினர்களாக லயன் பி.கதிரமலை லயன் என.சோமசுந்தரம், லயன் கே.எஸ்.தவச்செல்வன், லயன் வீ.எஸ்.சிவநாதன், லயன் கே.கமலேஸ்வரன், லயன் ஏ.சிவசுவாமி, லயன் வி.சிவராஜ லிங்கம், லயன் கே.தங்கராஜா, லயன். எஸ்.நற்குணலிங்கம், லயன் எஸ்.சிவம் ஆகியோரும் பதவியேற்றுக்கொண்டனர். (01)

---

# வீதி விபத்துக்கான காரணம் என்ன?

## காபெற் வீதியா? சாரதிகளா? பாதசாரிகளா?

துரித அபிவிருத்தி திட்டத்தின் கீழ் நாட்டின் நாலாபுறமும் உள்ள பல வீதிகள் காப்பெற் வீதிகளாக மாற்றப்பட்டுள்ளதால் அதிகளவான விபத்துக்கள் அரங்கேறி வருகின்றன.

இந்த விபத்துக்களால் சொத்துக்கள் அழிவடைவது ஒருபக்கம் இருக்க மறுபக்கம் மனித உயிர்களும் அல்லவா அழிகின்றது. போகும் உயிர் ஒரேயடியாக போகுது என்று பார்த்தால் இல்லை உடல் ஊனமுற்று மாதக்கணக்கில் வைத்திய சாலையிலும், எலும்பு முறிவு நிலையங்களிலும் இருப்பவர்களை பார்த்தால் வீதியில் பயணம் செய்யலாம் என்றால் உயிர் போய் விடுமோ என்ற எண்ணமே தோன்றுகிறது.


2003 ஆம் ஆண்டுடன் இன்றைய நிலையையும் வைத்து வடமாகாணத்தை பார்த்தால் வீதியில் போனால் வாகனமே காணக்கிடைக்காது எங்கேனும் ஒரு வாகனம்தான் வரும் ஆனால் இன்று பாருங்கள் எந்தப்பக்கம் பார்த்தாலும் வாகனங்களாக காணப்படுவதுடன் நாளுக்கு நாள் வாகனங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன.

காப்பெற் வீதிகள் மட்டுமல்லாது தார் வீதிகள், கொங்கிறீட்பாதைகள், மேம் பாலங்கள் அதிவேக நெடுஞ்சாலைகள் என அமைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு பாதைகள் அமைத்துள்ள போதும் நாளாந்தம் பாவனைக்கு வருகின்ற வாகனங்களுக்கு இப்பாதைகள் போதுமானதாக இருக்கின்றதா என்றால் போதாது.

துரித அபிவிருத்தித் திட்டத்தில் அண்மைக்காலம் மேற்கொள்ளப்பட்ட பாதைகளின் சீராக்கம் வாகனங்களின் வேகத்தை அதிகரித்துச் செல்லவும், மிக விரைவாக பயணத்தை மேற்கொள்ள உதவியாக இருக்கிறது என்பதுடன் விபத்துக்களை அதிகரிக்கச் செய்துள்ளது என்பதும் உண்மையே.

பாதைகள் சீராக்கப்பட்டுள்ளது அல்லது காப்பெற் வீதிகள் என்பதற்காக விரைவாக செல்லவேண்டும் என்பது என்ன கட்டாயமா? அண்மையில் திறக்கப்பட்ட தென்பகுதி அதிவேகப் பாதையிலும் சரி வடபகுதியையும் தென்பகுதியையும் இணைக்கும் ஏ-9 பாதையிலும் சரி அடிக்கடி வீதி விபத்துக்கள் நடைபெறுவதுடன் அகலப்படுத்தி சீரமைக்கப்பட்டதன் பின்புதான் அதிகமாக விபத்துக்கள் ஏற்படுவதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

சாரதிகள் மட்டுமல்ல வீதியால் செல்கின்ற அல்லது வீதியைக் கடக்கின்ற



போதுகூட பொதுமக்களாகிய எம்மவரும் அவ தானமாக கடந்து செல்ல வேண்டும். ஏன் எனில் தற்போதைய காலகட்டத்தில் வீதிவிபத்துக்கள் என்ன வடிவில் வருகின்றன என்பதை எங்களால் தீர்மானிக்க முடியாது.

குறிப்பாக பாருங்கள் வீதியில் சைக்கிளில் பயணம் செய்பவர்கள் ஒருவர் பின் ஒருவராக செல்லாது ஒரே நேரில் இருவர் மூவர் என செல்வார்கள் பினனால் வரும் வாகனங்கள் கோண் அடித தாலும் கேட்டும் கேட் காததும் போல் செல் வார்கள் அதற்கு வீதியால் பய ணிக்கும் வாகன சாரதி ஏதும் சொல்லிவிட்டால் போதும் சண்டைக்கே வந்து விடுவார்கள். இவவாறு பயணிப்பவர்களில் அதிலும் பாடசாலை மாணவர்களே.

இப்படியான சந்தர்ப்பத்திலும் விபத்துக்கள் ஏற்படுகின்றன. எனவே இவ்வாறு நாட்டில் ஏற்படும் வாகனவிபத்துக்களால் ஊனமுற்ற சமுகக் கட்டமைப்பை நாமே உருவாக்கிக் கொண்டு வருகின்றோமா? என்ற எண்ணமும் தோன்று கிறது.

அப்படியானால் விபத்துக்களிலிருந்து எம்மை தவிர்த்துக் கொள்வதற்கு பயணஙகளைத் தடுக்கலாம் எப்படி யென்றால் வீதிகளிலுள்ள குறியீடுகள், சமிக்ஞைகள் போன்றவற்றை அவதானித்து வாகனத்தை செலுத்துதல் அவசியமாகும்.

இது மட்டுமல்லாது பழுதடைந்த வாகனங்கள், புகைவிடும் வாகனங்களின் பரிசோதனைகள் அதிகரித்துள்ள நிலையிலும் இலங்கை போக்குவரத்துச் சபைக் குச் சொந்தமான பல பஸ் வண்டிகள் புகைபோக் கும் பஸ்களாக வீதியில் வலம்வந்து கொண்டிருப்பதனால் பின்னால் செல்கின்ற வாகனச் சாரதிக்கு பாதை தெரியாது சடுதியாக விபத்துக்களை ஏற்படுத்தி விடுகிறது.

இவற்றையெல்லாம் விட முக்கியமானது சாரதிகளுக்கு நித்திரை மயக்கம், கையடக்கத் தொலைபேசியில் உரையாடிக் கொண்டு வாகனம் செலுத்துதல், நீர் அருந்துதல் போன்ற செய்கைகளாலும் வாகன விபத்துக்கள் ஏற்பட்டு விடுகின்றன. எனவேதான் வாகனச்சாரதி எந்தச் சந்தர்ப்பத்திலும் விபத்து ஏற்படலாம் என்பதை அவதானித்து, கவனித்து வாகனத்தைச் செலுத்த வேண்டும் என்பதுடன் வீதியில் பயணிப்பவர்களும் சற்று நிமிர்ந்து பாதைகளை பார்த்துச் செல்ல வேண்டும்.

தற்போது பார்த்தால் யாழ்.வீதிகள் மட்டுமல்லாது ஏனைய வீதிகளிலும் பொலிஸார் நிற்கின்றனர். பொலிஸார் வேகத்தைக் காண்பிக்கும் உபகரணத்துடன் நிற்கின்றனர் என்பதற்காக அந்த இடத்தில் மட்டும் வேகத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதும் பின்னர் வேகமாக செலுத்தும் நிலையும் காணப்படுகிறது எனவே வாகனம் செலுத்துவோர் மனநிலை மாறவேண்டும்.

வீதி விபத்துக்களுக்கு வாகன ஓட்டிகள் மட் டுமல்லாது பாதசாரிகளும் ஒரு காரணமாகின்றனர் காரணம் வீதிகளை கடப்பதற்கு மஞ்சள் கடவைகள் இருக்கும் போது அவற்றை பயன்படுத்தாமல் நிற்கும் இடத்திலேயே அவசர அவசரமாக கடந்து செல்ல எத்தனப்பவர்கள் பெரும் விபத்துக்களில் சிக்கி மரணிக்கிறார்கள்.

இதனை தடுப்பதற்காக வீதி ஒழுங்கை மீறி நடந்து செல்லும் பாதசாரிகளுக்கு எதிராக பொலிஸார் இப்போது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன் மஞ்சள் கடவையை உதாசீனம் செய்து விட்டு செல்லும் வாகன ஓட்டிகளுக்கு எதிராகவும் பொலிஸார் தற்போது வழக்குத் தாக்கல் செய்கின்றனர் இது அதிகரிக்கப் பட வேண்டும்.

சாரதிகள் அனைவரும் கவனத்தில் எடுக்க வேண்டிய விடையம் என்னவெனில் எம்மை நம்பி இலட்சக்கணக்கான பணப் பெறுமதியான வாகனம், பயனிக்கும் மக்களின் உயிர் போன்றவைகள் இருக்கிறது என்பதனை மனக்கண்முன் கொண்டு வருதல் சாரதிகளின் கட்டாயக் கடமையாகும். இவ்வாறு சாரதிகள் கொண்டு வருவார்கள் என்றால் விபத்துக்களை தவிர்க்கமுடியும்.

(கிருசானந்-சிகரம்)

கடுமையாக முயற்சி செய், வெற்றி உன்னைத் தேடிவரும் நாள் வெகு தொலைவில் இல்லை. - வெஸ்மல்.

தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## தொலைபேசியபடி ஓட்டம்!

நம் தெருக்களில் வாகன நெரிசல் அதிகரித்துக் கொண்டே போவதில் பயம்தான் உண்டாகிறது. வேகமும் விபத்துக்களும் ஒருபுறம் என்றால் தங்களுக்குள் ஏதோ பேசிக்கொண்டே காரையோ மோட்டார் சைக்கிளையோ ஓட்டிக்கொண்டு போகிறவர்களைப் பார்த்தால் பயப்படாமல் இருக்க முடியவில்லை.

அவர்கள் பேசிக் கொண்டிருப்பது கைத்தொலைபேசியில். காதில் தொலைபேசி இல்லாமல் தெருவில் யாரும் நடந்து போவதையோ வாகனங்களில் செல்வதையோ காணமுடியாமல் இருக்கிறது. 1960களில் இன்றைய செல்போனின் தாத்தாவைக் கண்டுபிடித்த மார்ட்டின் கூப்பரிடம் அன்றே தீர்க்கதரிசனமாக ஒரு கேள்வி கேட்டார்கள். 'இந்தக் கம்பியில்லாத கைத்தொலைபேசியில் அபாயம் ஏதாவது இருக்கிறதா?'

ஆமாம் என்று ஒத்துக்கொண்டார் கூப்பர். 'கார் ஓட்டுபவர்களின் கவனம் சாலையில் இல்லாமல் போன் பேசுவதிலேயே இருப்பதால் விபத்து நடக்கலாம், இது நடக்க கூடியதுதான்' என்று அப்போதே சொல்லியிருக்கிறார். இப்போதைய கணக்குப்படி செல்போன் பேசிக்கொண்டே கார் ஓட்டுபவர்களால் அமெரிக்காவில் மட்டும் வருடத்துக்கு 2600 பேர் உயிரிழக்கின்றனர்.

அந்தக்கால கம்பியில்லா தொழினுட்பத்தைக் கொண்டு முதல் நடமாடும் தொலைபேசியைக் கண்டுபிடித்துச் செய்த வருடம் 1946. நீண்ட தூரத்திற்கு லொறி ஓட்டிச் செல்பவர்கள் தலைமையகத்துடன் தொடர்பு கொள்வதற்காக இது முதலில் பயன்படுத்தப்பட்டது. அதாவது இதன் உருவாக்கமே வாகன ஓட்டுனர்களை மனதில் வைத்துச் செய்யப்பட்டதுதான்.

ஊரெங்கும் தொலைத்தொடர்புக் கோபுரங்களை எழுப்பும் போதே வாகனங்களையும் ஓட்டுனர்களையுமே முக்கியமாக கவனத்தில் கொள்கிறார்கள். அமெரிக்கா போன்ற நாடுகளில் செல்போன் கம்பனிகளுக்கான முக்கால்வாசி லாபமும் வாகன ஓட்டுனர்களிடமிருந்தே கிடைப்பதாக புள்ளிவிபரம் கூறுகிறது.

1960களில் எல்லாம் உலகில் கைத்தொலைபேசி என்பது ஒரு விலையுயர்ந்த விளையாட்டுப்பொருளாக இருந்தது அவ்வளவுதான். ஆனால் தொழினுட்பம் வளர்ந்து, மிகக்குறைந்த விலைகளில் தொலைபேசி உபகரணமும் பேசும் கட்டணமும் வந்தபிறகு வீதிவிபத்துக்கள் மிக அதிகரித்து விட்டன.

2007இல் அமெரிக்க அரசாங்கம் செய்த ஆய்வில் 11 சதவீத வாகன ஓட்டுனர்கள் தொலைபேசிக் கொண்டேதான் ஓட்டுகிறார்கள் என்பது வெளிவந்தது. வீதிவிபத்துக்கள் ஐந்தரை லட்சம், 2600 மரணங்கள். கடந்த பத்து வருடத்தில் இதைப்பற்றி எவ்வளவோ ஆராய்ச்சிகள் வெளிவந்துவிட்டன. அவற்றின் சாரம் என்னவென்றால், செல்போனில் பேசிக்கொண்டே வாகனம் ஓட்டும் போது விபத்துக்கான வாய்ப்பு 400 சதவீதம் அதிகரிக்கிறது என்பதுதான்.

ஆனால் எத்தனை எச்சரிக்கைகள் வந்த போதும் விபத்துகள் குறையவில்லை; சாரதிகள் பேசிக்கொண்டே ஓட்டுவதையும் நிறுத்தவில்லை. ப்ளூடூத், இயர்போன் பயன்படுத்துவதால் கைகள் ஸ்டியரிங்கை கவனமாகப் பிடித்திருக்கிறது என்று சமாதானம் சொல்ல முடியாது. வாகன ஓட்டுதலில் கை அல்ல முக்கியம் மனம் அதில் குவிந்திருப்பதே முக்கியம்.

மேலும் ஒரு பல்கலைக்கழக ஆய்வின்படி, குடித்துவிட்டு கார் ஓட்டுவதை விட செல்போன் பேசிக்கொண்டே ஓட்டுவதில்தான் விபத்துக்களும் ஆபத்துக்களும் அதிகம் நிகழ்கின்றன என்று தெரிவிக்கிறது. இன்றைய தொழினுட்ப வேகம், பேசுவதற்கு மட்டுமல்லாது ஜி.பி.ஆர்.எஸ்., டிஜிட்டல் வரைபடம், வண்டி ஓட்ட வழி சொல்லித் தருதல், செய்திகள் தருதல், மின்னஞ்சல், இணைய வசதி என்று எதையெதையோ புதிது புதிதாகத் தந்துகொண்டே இருக்கிறது.

மனிதன் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் வழிகளுக்குத் தொழினுட்பத்தை நம்ப முடியாது. தன்னைத் திருத்திக் கொள்வதற்கான தனது அறிவைத்தான் அவன் நம்பவேண்டும். - ஆசிரியர்

# ஆசைகாட்டி மோசம் செய்த கில்லாடியை பொதுமக்கள் கூடி மடக்கிப் பிடித்தனர்

அரசாங்க வேலைவாய்ப்புகளை பெற்றுத் தருவதாகக் கூறி இளம் பெண்களை ஏமாற்றி வந்த நபர் ஒருவர் இளைஞர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸில் ஒப்படைக்கப்பட்ட சம்பவம் வட்டுக்கோட்டைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மேற்படி நபர், அராலி சித்தன்கேணிப் பகுதியில் வறுமைக்கோட்டின் கீழ் படித்துவிட்டு வேலையற்று இருக்கும் யுவதிகளின் வீடுகளுக்குச் சென்று, தான் அரசாங்கத்தில் செல்வாக்கு மிக்கவர் எனவும் அரசாங்க வேலை வாய்ப்புகளை தன்னால் பெற்றுத் தர முடியும் என்றும் கூறி யுவதிகளை ஏமாற்றி வந்துள்ளார்.

இந்நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை வட்டுக்கோட்டைப் பகுதியில் உள்ள வீடொன்றிற்குச் சென்று உடனடியாக வேலை பெற்றுத் தருவதாகக் கூறி இளம் யுவதி ஒருவரை தான் வந்த முச்சக்கர வண்டியில் அழைத்துச் சென்றுள்ளார்.

குறித்த யுவதியை மாதகல் உட்பட பல இடங்களுக்கு அழைத்துச் சென்றுவிட்டு இறுதியாக சித்தன்கேணிச் சந்தியில் இறக்கிவிட்டு மேற்படி நபர் தப்பிச் சென்றுள்ளார்.

இதேவேளை, கடந்த சனிக்கிழமை காலை வேறொரு முச்சக்கர வண்டியில் வந்த குறித்த நபர் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி மற்றுமொரு பெண்ணை அழைத்துச்செல்ல முயன்றுள்ளார்.

இந்நிலையில் மேற்படி நபரின் செயற்பாடுகள் தொடர்பில் ஏற்கனவே கதை பரவிய நிலையில் குறித்த நபரை மடக்கிப் பிடித்த இளைஞர்கள் அவருக்கு நன்கு பாடம் புகட்டியதுடன் வட்டுக்கோட்டைப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்நபர் தென்மராட்சி மீசாலைப் பகுதியைச் சேர்ந்தவரென்றும் தற்போது அவர் யாழ்ப்பாணத்தில் வசித்து வருவதாகவும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ். மின்சார நிலைய வீதியில் போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மின்சார நிலைய வீதியில் நிரந்தர போக்குவரத்து கண்காணிப்பு பிரிவு விரைவில் அமைக்கப்படவுள்ளதாக யாழ். தலைமையகப் பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி கே.சமிந்த டி சில்வா தெரிவித்தார்.

யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இவ் ஊடகவியலாளர் சந்திப்பில், "யாழ். மின்சார நிலைய வீதியில் தனியார் பேருந்துகள் மற்றும் ஏனைய வாகனங்களினால், போக்குவரத்து நெரிசல் இடம்பெறுகின்றது. போக்குவரத்துப் பொலிஸாரை இப் பகுதியில் நிறுத்தி போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளவில்லை என ஊடகவியலாளர் ஒருவர் கேட்டதற்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்தும் தெரிவித்த அவர்,

குறித்த பகுதியில் குறிபபிட்ட நேரத்தில் மாத்திரம் போககுவரத்து பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அப்போது போக்குவரத்து நெரிசல் குறைவாக காணப்படுகின்றது. எதிர்வரும் காலங்களில் மின்சார நிலைய வீதியில் நிரந்தர போக்குவரத்து பொலிஸ கண்காணிப்புப் பிரிவு நிறுவப்படும் என்று அவர் மேலும் கூறினார். (25)

# நவம்பரிலிருந்து அறிமுகமாகிறது மும்மொழியிலும் அடையாளஅட்டை

(கொழும்பு)

ஆட்பதிவுத் திணைக்களம் எதிர்வரும் நவம்பர் மாதத்திலிருந்து தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழியிலும் தேசிய அடையாள அட்டைகளை வழங்கவிருப்பதாகவும் இவ்வாறு வழங்கப்படும் அடையாள அட்டையில் ஒருவருடைய பெயர் மாத்திரம் பதிவு செய்யப்படுவதுடன், அவர் செய்யும் தொழில் பற்றிய விபரம் சேர்க்கப்படமாட்டாதென்று ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் ஆர்.எம்.எஸ். சரத்குமார தெரிவித்தார்.

தற்போதைய நவீன இயந்திரங்களின் உதவியுடன் அடையாள அட்டைகளை ஒரு மணித்தியாலயத்திற்குள் தங்களால் வெளியிட முடியுமென்றும், ஒருவருக்கு இரண்டு தேசிய அடையாள அட்டைகளை வைத்திருப்பதற்கோ ஒரே இலக்கத்தில் இரண்டு அடையாள அட்டைகள் வழங்கப்படுவதையோ முற்றாகத் தடை செய்வதற்கான ஒழுங்குகளும் செய்யப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

கைவிரல் அடையாளமும் அடையாள அட்டையில்' சேர்த்துக்கொள்ளப்படுவதனால், ஒருவர் எங்காவது குற்றம் புரிந்திருந்தால் அவரை இலகுவில் இனங்காண்பதற்கு உதவியாக இருக்குமென்றும், ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

# கலப்புத் திருமணத்தால் விபரீதம் மகளின் கணவன் மீது தாக்குதல்

மகளின் காதல் திருமணத்தினை ஏற்க மறுத்த குடும்பத்தினரினால், குறித்த பெண்ணின் கணவர் கடுமையாக தாக்கப்பட்ட சம்பவமொன்று யாழ். நகரப் பகுதியில் நேற்று இடம்பெற்றது. யாழ். குருநகர் பகுதியில் நேற்று மதியம் 12.30 மணியளவில் மேற்படி சம்பவம் இடம்பெற்றது. கிறிஸ்தவ மதத்தினைச் சேர்ந்த 22 வயதுடைய பெண்ணும், முஸ்லிம் மதத்தைச் சேர்ந்த 34 வயதுடைய முஸ்லிம் இளைஞரும் கடந்த 2 வருடங்களாக காதலித்துள்ளனர். இவர்களின் காதலை இரு வீட்டாரும் ஏற்காத நிலையில், அவ்விருவரும் வீட்டை விட்டு வெளியேறி கடந்த மாதம் பதிவுத் திருமணம் செய்துகொண்டனர்.

முச்சக்கரவண்டி சாரதியான கணவருடன், குறித்த பெண் குருநகர், பாங்சால் வீதியில் வாடகை வீட்டில் வசித்து வந்துள்ளார். இதனை அறிந்த பெண் வீட்டார் குறித்த பெண்ணின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து பல தடவைகள் அடித்து கொடுமைப் படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், நேற்று மதியம், பெண்ணின் தாயார் மற்றும் சகோதரன், சகோதரி ஆகியோரால் தனது கணவன் மிகக் கடுமையாக தாக்கப்பட்டதாக அப்பெண் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

தாக்குதலுக்கு உள்ளான நிலையில் அவர்கள் இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் பலத்த காயங்களுக்கு உள்ளான கணவர், அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (25)

# தீர்வை எதிர்க்கும் போட்டியில் தென்னிலங்கை கட்சிகள்!

இலங்கையின் இனப் பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் மிகச் சிக்கலான ஒரு நிலையை எட்டியுள்ளது. இலங்கையின் அரசாங்கம் மட்டுமின்றி, எதிர்க் கட்சிகளும் தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் இதுவரை காலமும் இழுத்தடிப்புகளைச் செய்து வந்தது போய், இப்பொழுது தீர்வு காண்பதை வெளிப்படையாக எதிர்க்கும் அளவுக்கு நிலைமைகள் எதிர்த் திசையில் பயணிக்க ஆரம்பித்துள்ளன.

வேதனையான விடயம் என்னவென்றால், இத்தகைய சிங்களப்பேரினவாதத் தலைமையுடன்தான், அன்றிலிருந்து இன்றுவரை எமது தமிழ்த் தலைமைகள் கூடிக்குலாவி வந்திருக்கின்றன. கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது, இந்த இனவாத பொன்சேகாவைத்தான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆதரித்தது. அதேபோல இதே இனவாத ஐ.தே.கவுடன் இணைந்துதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிங்கக் கொடியை ஏந்தி கூட்டாக மேதினம் கொண்டாடியது.

எந்த இனப்பிரச்சினைக்காக தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடினார்களோ, அந்த ஆயுத எதிர்ப்பு 2009 மே மாதத்துடன் முள்ளி வாய்க்காலில் வைத்து முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. நியாயமான கோரிக்கைகளுக்காக எழுந்த அந்தப் போராட்டம் புலிகளின் அதிகார வெறிக்கு இரையாக்கப்பட்ட போது, தமிழ் மக்கள் சந்தித்த வரலாறு காணாத அழிவு காரணமாக, "பிச்சை வேண்டாம், நாயைப் பிடி" என்ற நிலையில் அந்த கோர யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்ததை தமிழ் மக்கள் மனப்பூர்வமாக ஆதரித்தனர்.

யுத்தம் முடிந்த கையோடு நாட்டின் நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, 13ஆவது திருத்தத்துக்கும் அப்பால் சென்று இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்போவதாக அறிவித்தார். அவரது அறிவிப்பைக் கேட்டு தமிழ் பேசும் மக்கள் பெரும் எதிர்பார்ப்புடன் காத்திருந்தனர்.

சிங்கள இனவாதக் கட்சியான ஹெல உருமய 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராக நாடாளுமன்றத்தில் கொண்டு வரவுள்ள சட்ட மூல வாக்கெடுப்பில் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் விருப்பம் போல் வாக்களிக்கலாம் என்று கூறியதின் மூலம், ஜனாதிபதி தனது அரசாங்கத்துக்கு உள்ள பாரிய கடப்பாடொன்றைத் தட்டிக் கழித்துள்ளார். இனவாத சக்திகளின் இந்த எதிர்ப்புரட்சிகரத் திட்டத்தை துணிந்து நின்று முறியடித்து, நாட்டின் ஜனநாயக விழுமியங்களையும், பன்முகத் தன்மையையும், இனங்களின் சமத்துவம் மற்றும் ஐக்கியத்தையும் பாதுகாக்க வேண்டிய ஜனாதிபதி, குறுகிய இன வெறியர்களுக்குத் துணை போயிருப்பது, எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாதது.

அதே வேளையில் தென்னிலங்கையில் உள்ள ஏனைய பிரதான கட்சிகளை எடுத்துக் கொண்டால், அவை அரசாங்கத்தை விட மிக மோசமான இனவாத நிலைப்பாட்டில் இருப்பதைக் காண முடிகிறது. அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளிலாவது, இடதுசாரிக்கட்சிகள், தமிழ் - முஸ்லிம் கட்சிகள், சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு பிரிவினர் ஆகியோர் இனப் பிரச்சினைக்கு நியாயமான ஒரு தீர்வு காணப்பட வேண்டும், அந்த வகையில் தற்பொழுது இருக்கும் 13ஆவது திருத்தத்தை மாற்றம் ஏதுமின்றி அப்படியே அமுல்படுத்த வேண்டும் என்று கோரி வருகின்றனர்.

ஆனால் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி (ஐ.தே.க) ஒரு பக்கத்தில் தமிழ் மக்களின் இனப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று தேனொழுகச் சொல்லிக் கொண்டு, மறுபக்கத்தில் ஒற்றையாட்சி அடிப்படையிலான புதிய அரசியல் திட்டமொன்றை வெளியிட்டுள்ளது. இந்த ஒற்றையாட்சி முறைதான் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு வித்திட்டது என்பது அனைவராலும் ஏற்றுக்கொண்ட உண்மை என்ற போதிலும், ஐ.தே.க. மீண்டும் விசமத்தனமாக அதையே முன் வைத்துள்ளது.


1947இல் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதியான சோல்பரி வகுத்த அரசியல் சட்டமும், 1972இல் இடதுசாரிகளையும் கொண்ட சிறீமாவோ பண்டாரநாயக்கவின் மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் வகுத்த குடியரசு அரசியல் சட்டமும், 1978இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஐ.தே.க அரசாங்கம் வகுத்த நிறைவேற்று ஜனாதிபதி முறைமையைக் கொண்ட அரசியல் சட்டமும், சாராம்சத்தில் ஒற்றையாட்சியையே அடிப்படயாகக் கொண்டவை.

இந்த ஒற்றையாட்சி இருக்கும் வரை தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவோ, நாட்டில் இன ஒற்றுமையை உருவாக்கவோ முடியாது என்றபடியால்தான், 1957இல் எஸ். டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க, தமிழரசுக் கட்சியுடன் பேச்சுவார்த்தை நடாத்தி, அதை மாற்றி அமைக்கும் வகையில் "பண்டா - செல்வா உடன்படிக்கை"யை உருவாக்கினார். ஆனால் அதை நிறைவேற்ற விடாமல் ஐ.தே.க இனவாதப் பிக்குமாரைத் தூண்டிவிட்டு, நாட்டில் குழப்பங்களை உருவாக்கி அதைக் கிழித்தெறிய வைத்தது.

அதன் பின்னர் தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் உச்சக் கட்டத்தை அடைந்த நிலையில், 1987இல் இந்தியா தலையிட்டு ராஜீவ் காந்தி - ஜெயவர்த்தன ஆகியோருக்கிடையில் "இந்திய - இலங்கை ஒப்பந்தம்" என்ற ஒன்றை உருவாக்கி 13ஆவது திருத்தத்தை இலங்கையின் அரசியல் சாசனத்தில் இணைத்தனர். அதன் அடிப்படையில் உருவான மாகாண-சபைகள் முறைமை முறையான ஒரு அதிகாரப் பகிர்வு இல்லையெனினும், அதை நோக்கிய ஒரு முன்னகர்வாக இருந்தது. ஆனால் பின்னர் பதவிக்கு வந்த ஐ.தே.கவின் இனவாத ஜனாதி-பதி ஆர்.பிரேமதாச புலிகளின் உதவியுடன் ஒன்றிணைந்த வடக்கு கிழக்கு மாகாணசபையைக் கலைத்தார். அதன் மூலம் ஐ.தே.க இரண்டாவது தடவையாகவும் அதிகாரப் பகிர்வைத் தடுத்து நிறுத்தியது.

அதன் பின்னர் 2000 ஆண்டில், சந்திரிகா குமாரதுங்க சமஸ்டி அடிப்படையிலான "பிராந்திய சபைகள்" என்ற முறையைப் பாராளுமன்றத்தில் முன்மொழிந்தார்.அந்தச்சட்ட நகல்வரைவை ஐ.தே.க பாராளுமன்றத்திலேயே தீயிட்டுக் கொளுத்தி அதை நிறைவேற்றாமல் செய்தது. ஐ.தே.கவின் இந்த இனவெறிச் செயலுக்கு புலிகளால் வழி நடாத்தப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியும், சொல்லில் சோசலிசமும் செயலில் இனவாதமும் செயல்படுத்தும் ஜே.வி.பியும் துணை போயின. அதன் மூலம் மூன்றாவது தடவையாகவும் அதிகாரப் பகிர்வை ஐ.தே.க எதிர்த்து முறியடித்தது.

அதே நேரத்தில் இந்த ஒற்றையாட்சி முறையை மாற்றியமைப்பதில் அரசியல் ரீதியான போராட்டங்கள் தோல்வியடைந்த நிலையில் தான், தமிழ் இளைஞர்கள் தமிழர்களுக்கு "தனித் தமிழ்நாடு" ஒன்றை அமைப்பதற்கான ஆயுதப் போராட்டத்தில் குதித்திருந் தனர். 1977இல் பதவிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐ.தே.க அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினைகளை அரசியல் ரீதியாகத் தீர்ப்பதற்குப் பதிலாக, இராணுவ ரீதியாகத் தீர்க்க முற்பட்டதாலேயே, தமிழ் இளைஞர்கள் தனித்தமிழ்நாடு கோஷத்தை முன்வைக்கவும், அதற்காக ஆயுதம் ஏந்திப் போராடவும் நிர்ப்பந்திக்கப்பட்டனர் என்பதை எவரும் மறுக்க முடியாது.



இத்தகைய ஒரு சூழ்நிலையில், ஐ.தே.க வரலாற்றிலிருந்து எந்தவொரு பாடங்களையும் கற்றுக் கொள்ளாமல், மீண்டும் ஒற்றையாட்சி முறையை முன்வைத்திருப்பதானது, அதன் சிங்களப் பேரினவாத நிலைப்பாட்டில் எதுவித மாற்றமும் ஏற்படவில்லை என்பதையே எடுத்துக் காட்டுகிறது. அத்துடன் தமிழ் மக்களின் பிரச்சினையை அரசாங்கம் தீர்க்க வேண்டும் என போலி நாடகம் ஆடும் அக்கட்சி, 13ஆவது திருத்தத்தை திருத்தியமைக்கும் மசோதா நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் போது, அதை எதிர்ப்பதற்குப் பதிலாக, தனது நாடாளுமன்ற உறுப்பினர்களை மனச்சாட்சிப்படி வாக்களிக்க அனுமதிக்கப் போவதாகவும் தெரிய வருகிறது.

இது ஒருபுறமிருக்க, ஜே.வி.பி கட்சி 13ஆவது சட்டத்தில் திருத்தம் செய்வதைவிட, அதை முற்றுமுழுதாக இல்லாதொழிக்க வேண்டும் எனக்கூறி, தமது அசிங்கமான இனவாத முகத்தை மீண்டும் காட்டியுள்ளனர். ஆனால் கபடதாரிகளும்கூட தமிழ் மக்களின் பிரச்சினையை அரசாங்கம் தீர்க்க வேண்டும் என வாய் ஓயாமல் கூறி வருகின்றனர்.

இவர்களைத் தவிர, அண்மைக் காலமாக தமிழ் மக்களுக்காகப் பரிந்து பேசும் இன்னொருவராக அவதாரம் எடுத்திருக்கும் முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா, யுத்த காலத்தில் செய்யப்பட்ட மனித உரிமை மீறல்களை வெளிக்கொணர்ந்ததும், தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வை வலியுறுத்தியதுமான "கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு"வின் அறிக்கையை நிராகரித்திருப்பதுடன், அந்த ஆணைக்குழுவை நியமித்ததே தவறு எனக்கண்டித்திருக்கிறார். அதிலிருந்து தெரிவது என்னவென்றால், முன்பொருமுறை கனடிய ஊடகம் ஒன்றுக்கு இராணுவத்தளபதியாக இருந்துகொண்டு வழங்கிய பேட்டியில் அவர் கூறிய, "இலங்கையில் தமிழ் மக்கள் வாழ்ந்துவிட்டுப் போகலாம், ஆனால் உரிமை கிரிமை என்று எதுவும் கோரக்கூடாது" என்ற அவரது இனவாத நிலைப்பாட்டில் மாற்றம் எதுவும் இல்லை என்பதைத்தான்.

இதில் வேதனையான விடயம் என்னவென்றால், இத்தகைய சிங்களப் பேரினவாதத் தலைமையுடன்தான், அன்றிலிருந்து இன்றுவரை எமது தமிழ் தலைமைகள் கூடிக்குலாவி வந்திருக்கின்றன. கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது, இந்த இனவாத பொன்சேகாவைத்தான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆதரித்தது. அதேபோல இதே இனவாத ஐ.தே.கவுடன் இணைந்துதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிங்கக்கொடியை ஏந்தி கூட்டாக மேதினம் கொண்டாடியது.

இன்று இலங்கையில் உள்ள நிலைமையில், தீவிர சிங்கள இனவாதக் கட்சிகள் மற்றும் அரசாங்கத்தின் ஒரு பகுதியினர் மட்டுமின்றி, பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க மற்றும் ஜே.வி.பி, பொன்சேகா போன்றவர்களும் ஏட்டிக்குப் போட்டியாக தமிழ் பேசும் மக்களின் நியாயமான உரிமைகளை வழங்குவதை போட்டிபோட்டு எதிர்த்து வருகின்றனர்.

இந்த நிலைமை நீடிக்குமானால், அதாவது தமிழ் மக்களுக்கான எல்லாக்கதவுகளும் அடைக்கப்படுமானால், அவர்கள் மீண்டும் பிரிவினையை நோக்கித் தள்ளப்படுவதும், அதை அடைவதற்காக வழி முறைகளையும் நாடுவதும் திரும்பவும் நிகழக்கூடிய வாய்ப்புத்தான் அதிகமாக உண்டு. அத்தகைய ஒரு சூழலை அரசாங்கம் இலகுவாக எதிர்கொள்ள முடியாத நிலைமையும் உருவாகும்.

(நன்றி: வானவில் 29)

# மாறிவிட்டது அரசியல் சூழல் நிச்சயம் "13" ஐயும் மாற்றவேண்டும்

## ஜி.எல்.பீரிஸ் பிடிவாதம் •

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தினை காலத்திற்கு ஏற்றவாறு மாற்றியமைக்க வேண்டும் என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அரசியல் யாப்பின் 13ஆவது திருத்தம் 25 வருடங்கள் பழைமையானது. இதனால் கால்த்திற்கு ஏற்றவாறு இதில் மாற்றங்கள் செய்வது அவசியமாகும் என அவர் குறிப்பிட்டார்.

அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடாதிபதிகளை நேற்று முன்தினம சனிக்கிழமை சந்தித்த பின் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். ஊடகவியலாளர்கள் மத்தியில் மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்,

எமது அரசியல் யாப்பில் 13ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன.

அன்றைக்கு பொருத்தமானவை இன்றைக்கு பொருத்தமற்றவையாக இருக்கலாம். எனவே 13ஆவது திருத்தத்தை காலத்திற்கு ஏற்றவாறு மாற்றி




அமைப்பது அவசியமாகும்.

இதற்கு சிறந்த வழி எம் மத்தியில பரந்த கலந்துரையாடலாகும். இதற்காகவே நாம் நாடாளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை அமைத்துள்ளோம் அதில அனைத்து எதிர் கட்சிகளும் கலந்துகொள்வது நல்லது என்பதே அரசாங்கத்தின் கருத்தாகும்.

இது சம்பந்தமாக தமிழ் தேசியக் கூட்டமைப்புடனும் கலந்தாலோசித்துள்ளோம். அவர்கள் சில ஆலோசனைகளை முன்வைத்தனர். அதில் நாம் ஏற்றுக்கொள்ள கூடியவற்றை ஏற்றுக்கொண்டுள்ளோம். எனினும் எதிர்க் கட்சிகள் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளாவிட்டால் எம்மால் ஒன்றும் செய்ய முடியாது. அவர்களுக்காக நாம் காத்திருந்தால் மக்களுக்கு செய்யும் பாரிய குற்றமாகும் என்றார்.

இதன்போது, அஸ்கிரியா பீடத்தின் மாநாயக்க தேரரான வண. உடுகம் ஸ்ரீ புத்தரக்கித்த தேரரரையும் மல்வத்த பீடத்தின் மகாநாயக்க தேரர் வண திப்படுவாவே ஸ்ரீ சுமங்கள தேரரையும் அமைச்சர் சந்தித்து ஆசி பெற்றுக்கொண்டார்.

## கிராம அலுவலர்களுக்கு மடிக் கனனி வழங்க ஏற்பாடு



(யாழ்.நிருபர்)

நாட்டில் உள்ள கிராமசேவையாளர்களின் கடமைகளை எளிதாக மேற்கொள்வதற்கு வசதியாக எதிர்வரும் செப்டெம்பர் மாதத்திற்கு முன்னர் மடிக்கணனிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி குறைந்த நேரத்தில் மக்களுக்கு நிறைந்த சேவையைப் பெற்றுக்கொடுக்கும் நோக்குடனேயே கிராம சேவையாளர்களுக்கான மடிக்கணினி வழங்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் பொதுநிர்வாக அமைச்சர் ஜோனசெனவிரத்னா தெரிவித்துள்ளார். (10)


# அதிகார பரவலின் 13 பிளஸ் இந்தியாவிற்கு உறுதியளிப்பு

## நினைவூட்டுகிறார் அமைச்சர் திஸ்ஸ

ஜனாதிபதி மகிந்த ராஜபக்' 13ஆவது அரசியல் அமைப்புத் திருத்ததிற்கு அப்பால் சென்று 13 பிளஸ் என்ற அதிகார பரவலாக்கத்தை வழங்குவதாக இந்தியாவுக்கு உறுதியளித்திருந்தாக சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான செய்திகள் பல ஊடகங்களிலும் பத்திரிகைகளிலும் வெளியாகியதாகவும் அதனை ஜனாதிபதி மறுக்கவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தனியார் தொலைக்காட்சி ஒன்றில் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

சர்வகட்சி குழுவில் தாம் பணியாற்றிய போது, அதிகாரப் பரவலாக்கம் தொடர்பாக



தற்காலிக அறிக்கை ஒன்றை வழங்குமாறு ஜனாதிபதி தம்மிடம் கூறியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதன் போது 13 பிளஸ் என்ற அதிகாரத்தை பரவலாக்கும் யோசனைகளை முன்வைக்குமாறு ஜனாதிபதி இதன் போது கூறியதாகவும் திஸ்ஸ வித்தாரண மேலும் தெரிவித்துள்ளார்.

# வடமத்திய மாகாணத்தில் ஐ.தே.கட்சியில் பலம் சிதைகிறது

## கட்சி தாவ உறுப்பினர்கள் பலர் தயார்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் ஐந்து முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், இம்முறை தேர்தலில் தனித்து போட்டியிட தீர்மானித்துள்ளனர்.

கலைக்கப்பட்ட வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களில் ஐக்கிய தேசியக்கட்சிக்கு 13 உறுப்பினர்கள் இருந்தனர்.

இந்த ஐந்து பேரும், சரத் பொன்சேகாவின் ஜனநாயக கட்சியில் அல்லது ஐக்கிய தேசியக்கட்சியின் மாற்று அணி என்ற பெயரில் போட்டியிடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர ரணில் விக்ரமசிங்கவுடன் இணைந்து தொடர்ந்தும் அரசியலில் ஈடுபடமுடியாது என்பதால், தாம் இந்த தீர்மானத்தை எடுத் துள்ளதாக சம்பந்தப்பட்ட முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் கூறினர்.

அதேவேளை ஆளும்கட்சி அமைச்சர் எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் இரகசிய பேச்சுவார்த்தை?

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சிறுபான்மையின கட்சியொன்றைச் சேர்ந்த அமைச்சர் ஒருவர், எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் இரகசிய பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

கொழும்பில் உள்ள நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் இந்த சந்திப்பு நடைபெற்றுள்ளது.

குறித்த அமைச்சரின் மீது புலனாய்வுப் பிரிவினர் கண்காணிப்பு நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. அவர்களின கண்களில் மண்ணைத் தூவி நண்பர் ஒருவரின் வாகனத்தில் சென்று இந்த பேச்சுவார்த்தையை நடத்தியுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டமொன்றில ஜனாதிபதி பெயரைக் குறிப்பிடாது குறித்த அமைச்சரை கடுமையாக சாடியதாக இரகசியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பொதுநலவாய நாடுகள் அமைப்பு சர்வாதிகாரத்துக்கு துணை போகிறது

## நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர



பொதுநலவாய நாடுகள் அமைப்பு சர்வாதிகாரத்தை அங்கீகரிக்கின்றதா என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர கேள்வி எழுப்பியுள்ளார். இலங்கையில் பொதுநலவாய நாடுகள் கொள்கைகளும் கோட்பாடுகளும் பின்பற்றப்படுவதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சர்வாதிகார முறைமையிலான ஆட்சியை நோக்கி நாடு நகர்ந்து கொண்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான ஓர் பின்னணியில் எதிர்வரும் நவம்பர் மாதம் கொழும்பில் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வு நடைபெற்றால் அது சர்வாதிகாரத்தை பொதுநலவாய நாடுகள் அமைப்பு அங்கீகரிப்பதாகவே அர்த்தப்படும என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நடைமுறைச் சாத்தியமான மாற்றங்களையே பொதுநலவாய நாடுகள் அமைப்பு இலங்கையிடமிருந்து எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படாத நிலைமை நீடிப்பதுடன் ஜனநாயக விழுமியங்கள் பேணிப் பாதுகாக்கப்படுவதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விடயங்கள் குறித்து பொதுநலவாய நாடுகள் அமைப்பு கவனம செலுத்த வேண்டுமென அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் கமலேஷ் சர்மாவிற்கு, மங்கள சமரவீர கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

நீதித்துறைச் சார் நியமனங்களும், இடமாற்றங்களும் அலரி மாளிகையின் உத்தரவின் அடிப்படையில் மேற்கொள் ளப்படுவதாகத் தெரிவித் துள்ளார். ஊடகவியலாளர்கள் ஆபத்துக்களை சந்திக்கும் மிக மோசமான நாடுகளின் பட்டியலில் இலங்கை நான்காம் இடத்தை வகிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

சீன உதவியுடன் இணைய தளங்கள் முடக்கப்படுவதுடன் உளவு பார்க்கப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். கிறிஸ்தவ மத வழிபாட்டுத் தலங்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவதாகவும் தாக்குதல் நடத்துவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் ஒரு சில பரிந்துரைகளை அமுல்படுத்த கால அவகாசம் அவசியம் என்பதில் மாற்றுக்கருத்து கிடையாது என்ற போதிலும், பரிந்துரைகளை அமுல்படுத்துவதில் அரசாங்கத்திற்கு காணப்படும் அர்ப்பணிப்பு சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது என மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

# தேர்தலுக்கு வேட்பாளர்கள் தெரிவு ஐக்கிய தேசியக் கட்சி மும்முரம்

மாகாணசபைகளின் தேர்தல்களுக்கு வேட்பாளர்களைத தெரிவு செய்யும் பணி இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

அண்மையில் கலைக்கப்பட்ட மத்திய வடமேல் மாகாணப் பாடசாலைகளுக்கும் மற்றும் வட மாகாண சபைக்கும் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள தேர்தல்களில் போட்டியிடுவதற்கு இதுவரை பத்தாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் விண்ணப்பித்துள்ளதாகவும் இவர்களுக்கான நேர்முகப்பரீட்சைகள் இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள் ளது.

ஐக்கியதேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்காக மூன்று குழுகளை அமைததுள்ளார். கலைக்கப்பட்டுள்ள மாகாணசபை உறுப்பினர்களும் வேட்பாளர் தெரிவுக்கான நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (10)

# தாதியர் பயிற்சிக் கல்லூரிகளுக்கு வசதிகளை ஏற்படுத்த நடவடிக்கை

நாடுமுழுவதுமுள்ள தாதியர் பயிற்சிக் கல்லூரிகளை சுகாதார அமைச்சின் இரண்டு பிரதி பணிப்பாளர் நாயகங்க ளின் கீழ்க் கொண்டு வருமாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அமைச்சின் செயலாளருக்கு பணித்துள்ளார்.


நாடுமுழுவதும் தற்போது 18 தாதியர் பயிற்சிக்கல்லூரிகள் இயங்கிவரும் நிலையில் அவற்றை மாகாண போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர நிர்வகிக்கின்றனர்.

எனினும் பயிற்சி பெறும் தாதியர்களுக்கு போதிய வசதி செய்து கொடுக்கப்படுவதில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையை ஆராய்ந்து பார்க்க அண்மையில் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அம்பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ள தாதியர் பயிற்சிக் கல்லூரிக்கு விஜயம் செய்திருந்ததார்.

அதன் பின்னரே மேற்கண்ட முடிவை அமைச்சர் விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# வேலணையில் புனரமைக்கப்பட்ட வீதிகள் மக்கள் பாவனைக்குத் திறந்து வைப்பு



(வேலணை)

வேலணை பிரதேசசபை எல்லைக்குட்பட்ட புனரமைப்புச் செய்யப்பட்ட வீதிகள் ஈ.பி.டி.பி யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரினால் (உதயன்) திறந்து வைக்கப்பட்டது.

குறித்தொதுக்கப்பட்ட மாகாண நன்கொடை நிதி மூலம் புனரமைப்புச் செய்யப்பட்ட வேலணை அம்பிகைநகர் குமாரசாமிப் பிள்ளை வீதி, மீள் எழுச்சித்திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட்ட வேலணை கண்ணபுரம் சுடலை வீதி, நேதாஜி பிள்ளையான் வீதி, செட்டிபுலம் ஐயனார் வீதி என்பன புனரமைப்புச் செய்யபட்டு மக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வேலணை பிரதேச சபைத் தவிசாளர் சி.சிவராசா (போல்), பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கொன்ஸ்சன்ரைன் ஜக்சில் வேலணை பிரதேசசபை உப தவிசாளர் சின்னத்தம்பி கார்த்திகேசன், வேலணை பிரதேச சபை செயலாளர் முத்துலிங்கம் இராஜகோபால், வேலணை பிரதேசசபை உறுப்பினர்கள் பாலசிங்கம் தவபாலன், ஜெயநாயகம் ஜெயரஞ்சன், தீவகம் தெற்கு பிரதேசசெயலக திட்டமிடல் பிரிவின் அபிவிருத்தித் திட்ட உத்தியோகத்தர் ஜெகன் மற்றும் மீள் எழுச்சித்திட்ட பொறியியலாளரும் பொதுமக்களும் கலந்து சிறப்பித்தனர்.

# ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் விசேட பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் கிளிநொச்சி மாவட்டக்கிளையின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. நிதியத்தின் கிளிநொச்சி மாவட்ட தலைவர் அ.கனகரத்தினம தலைமையில நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கிளிநொச்சி நகரில் பான் ஏசியா என்னும் பெயரில் இயங்கி வரும் வங்கி, அரச ஓய்வூதியர்களின் நன்மை கருதி, 70 வயதிற்கு உட்பட்ட ஓய்வூதியர்களுக்கு ஆகக்கூடிய தொகையான ஐந்து இலட்சம் ரூபாவை எவ்வித பிணையாள ரும் இன்றி வழங்க முன்வந்துள்ளது.

இது சம்பந்தமாக விளக்கமளிக்கும் பொருட்டு பான் ஏசியா வங்கி, கிளிநொச்சிக் கிளையின் முகாமையாளர் வருகைதர இருக்கின்றார். ஆர்வமுள்ள ஓய்வூதியர்கள் அனைவரும் வருகை தந்து வங்கி முகாமையாளர் மூலம் சகல விபரங்களையும் அறிந்து தங்களுக்குத் தேவையான கடன் வசதியைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

புதிதாக இந்நிதியத்தில் அங்கத்தவர்களாக இணைய விரும்பும் ஓய்வூதியர்கள் இலவசமாகப் படிவங்களைப் பெற்று அங்கத்துவத்தைப் பெற்று அங்கத்தவர்களாகச் சேர்ந்து கொள்ளமுடியும் .

அங்கத்தவர்களாகச் சேர்ந்தவாகளுக்கான அடையாள அட்டை எம்மிடம் உள்ளது.

தயவு செய்து நேரடியாக வருகை தந்து கையொப்பம் இட்டுப் பெற்றுக்கொள்ளுமாறும் அங்கத்தவர்களாக இணைய விரும்புபவர்கள் தங்களின் அடையாள அட்டை, ஓய்வூதியர்களுக்கான அட்டை என்பவற்றைக் கொண்டு வருமாறும் நிதியசெயலாளர் அறிவித்துள்ளார். (112)

# ஆண்டு விழாவையொட்டி நடாத்தப்பட்ட போட்டி முடிவுகள் வெளியீடு

(வடமராட்சி)

பருத்தித்துறை ஹாட்லிக் கலலூரியின் 175 ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடாத்தப்பட்ட கட்டுரை, கவிதைப்போட்டிகளின் முடிவுகள் கல்லூரியினால் அறிவிக்கப்பட்டுள்ளது. 1 ஆம், 2 ஆம், 3 ஆம் இடங்களைப்பெற்ற மாணவர்கள் விபரம் பின்வருமாறு

கட்டுரைப்போட்டி

(மேற்பிரிவு)

கே.சரண்யா (கரவெட்டி ஞானசாரியார் கல்லூரி), வி.கிருஷ்ணவி (யா.புனித தெரேசாள் கல்லூரி), யா.இமெல்டா (யா.திருக்குடும்பக் கன்னியர் மடம).

கவிதைப்போட்டி

(கீழ்ப்பிரிவு)

பா.பிரவீனா(வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி), சு.கிருத்திகா (தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்), சூ.விதுஷன் (வேலாயுதம் மகாவித்தியாலயம்).

கவிதைப்போட்டி)

(மேற்பிரிவு)

எஸ்.இமாஜினி (யாழ்ப்பாணக் கல்லூரி), எஸ்.துஷாந்தி (பருமெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை), ஆர்.லுசாயினி (மானிப்பாய் மகளிர் கல்லூரி).

முற்றும்.(01)

# வீட்டுத்திட்டத்திற்கு பயனாளிகள் தெரிவு

(அச்சுவேலி)

அச்சுவேலி வளலாய்ப் பகுதியிலே இந்தியன் உதவியுடன் வழங்கப்பட்ட வீட்டுத் திட்ட முதற்கட்ட நிர்மாணப் பணிகள் ஓரளவு பூர்த்தியடைந்து வரும் நிலையில் இரண்டாங் கட்டத்திற்கு 18 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கான நிதி உதவிகள் கட்டங்கட்டமாக வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் இரண்டாம் கட்டம் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான ஆரம்ப வேலைத் திட்டங்கள் வெகுவிரைவில் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (85)

## பஸ் பயணத்தின்போது ஆவணங்களை இழந்தார் யுவதி

(மல்லாவி)

மாங்குளத்தில் இருந்து யாழ்.நோக்கி பயணித்த யுவதி ஒருவரின் பணமும் முக்கிய ஆவணங்கள் சிலவும் சூறையாடப்பட்டுள்ளன.

மல்லாவி இலங்கைவங்கி கிளையில் பணிபுரியும் த.பிரியாஞ்சலி என்பவரே இவ்வாறு தனது ஆவணங்களை இழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 7.00 மணியளவில் பஸ்வண்டியில் பயணித்துக் கொண்டிருந்த சமயமே இது சூறையாடப்பட்டிருக்கிறது. (140)

# முரசின் இன்றைய பலன்



(08.07.2013 -திங்கட்கிழமை)

விஜய வருஷம் ஆனி மாதம் 24ஆம் திகதி.திருவாதிரை நட்சத்திரம் மு.ப 08.59வரை பின் புனர்பூசம் அமாவாசை,சித்தாமிர்தம். இராகுகாலம் 07.28-08.58வரை. சுபநேரம் 11.58-01.28 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** புதிய ஒப்பந்தம் கைச்சாத்திடல்,கருத்து வேற்றுமை சுமுகமடைதல், விவாகப்பேச்சு ஆரம்பித்தல், பயண முயற்சி இடைத்தங்கல் நாட்டில் சேர்த்துவிடல், வங்கித்தொடர்பால் நன்மை, செய்தொழில் இலாபந்தரல், பதவி முன்னேற்றத்திற்கான பதில் கிடைத்தல், சுவீப்பில் அதிர்ஷ்டம்.

**ரிஷபம்** சுபகாரியத்திற்காக கடன்படுதல், குழந்தைப்பேறு, சமரசம் பேசி பிரச்சினை தீர்த்தல்,பயணம் பற்றிய சுபசெய்தி, இழுபட்ட விவாகப்பேச்சு வெற்றி தரல், காதல் உறவு,மூத்த சகோதரத்தால் வசந்தம், வங்கிக்கடன் பெறுதல்,பரீட்சை முடிவினால் தொழிலில் உயர்ச்சி.

**மிதுனம்** வாகனயோகம்,மக்களினால் புகழ்,மனைவியின் தேகநிலை தைரியத்தைக்கொடுத்தல்,காலாவதியான பொருளைப் பெற்றுக் கவலை,நீண்டநாள் பகை மறைதல்,நீதிமன்ற முடிவு சாதகமாக இருத்தல்,நோய் நீங்குதல்,தோஷம் கழிக்க ஆலயதரிசனம் விளையாட்டுத்துறையில் ஈடுபாடு

**கடகம்** விசாகிட்டல், தாயாரின் நோய் பற்றிய கவலை, பணமுடையினால் காசோலைகள் திரும்புதல், சொத்துப் பற்றிய பிணக்கு, சந்தேகத்தால் சந்தோஷக்கேடு, தான தர்ம சிந்தனை,கடன்பட்டதால் கலக்கம்,தொலைந்தது பற்றிய தகவல்,நண்பர் உதவி,நோய் கட்டுப்பாட்டில், காவல் துறையால் எச்சரிக்கை.

**சிம்மம்** உறவினர் வருகை,இடமாற்றம் நீக்கம்,சுவீப் அதிர்ஷ்டம், வாகனம் செலுத்திப் பழக ஆரம்பம், கன்னியர் தொடர்பு, கைவிட்ட பொருள் கிடைத்தல், கண்டகனவு நிஜமாகுதல், கௌரவப்பதவி, மனை கோலுந்திட்டம், மக்களின் உயர்வால் மகிழ்ச்சி, தம்பதியர் மத்தியில் கருத்து வேற்றமை நீங்குதல்.

**கன்னி** தரகர்,புரோக்கரை நம்பி கலக்கம்,இடமாற்றம் பற்றிய செய்தி, தொழிலாளர் தொடர்பில் திருப்தி, வெற்றுக் காசோலையில் கையொப்பமிட்டதால் மோசடி, பயணம் இடைத்தங்கல் நாட்டில் சேர்த்தல், மனைவியின் நோய்க்கு சத்திரசிகிச்சை, பணப்பற்றாமையினால் மங்கள நிகழ்வு ஒத்திவைத்தல்.

**துலாம்** பயணத்திற்கு ஏற்பாடு, குடும்பத்தில் நிலவிய மனத்தாங்கல் நீங்குதல்,பங்குப்பிரச்சினை சட்ட ஆலோசனைக்கு கொண்டு செல்லல், புதிய கல்வி நெறி கற்க முயலல்,அரசு,தனியார் துறையில் வேலைவாய்ப்பு, பங்குத்தொழிலை கைவிடல், வாகன யோகம், ஞாபக இழப்பினால் பொருள் தொலைந்து போதல்.

**விருச்சிகம்** பிரமுகர் சந்திப்பால் புகழுக்கு அடிகோலல், வங்கித்தொடர்பால் வசந்தம்,மனை பூமி விலைக்கு வாங்கும் திட்டம், பிதாவின் நோய் நீக்கம், பயணம் பற்றிய இனிப்பான செய்தி, குழந்தைப்பேறு, நீர்தத்தில் உயிர்தப்புதல், தத்தெடுக்கும் சிந்தனை, வைத்திய பரிசோதனை.


**தனுசு** வியாழ சுகத்தினால் ஈடுபடும் செயலால் வெற்றி, மாணவர் விசா கிடைத்தல்,அரசியல் பிரமுகரால் வேலை பற்றிய உறுதி மொழி, மார்புச்சளி நோய் குணமாதல், தொழில் பயணத்தால் குடும்பப்பிரிவு, மொழிப் பிரச்சினையால் கருத்தினை எடுத்துரைப்பதற்கு கஸ்டப்படல், புகைப்பரிசோதனை, மத்தியஸ்த்தர்சபை தீர்ப்பை வழங்கல்

**மகரம்** தெளிவில்லாமை, முடிவினால் பதகளிப்பு, ஆயுத பயம், திருடர்பற்றிய பயப்பீதி, தனித்திருப்பதால் கெடுதி, பயணம் கைவிடல்,மாதாவின் தேகசுக முன்னேற்றம், போக்குவரத்து விதி மீறுவதால் தண்டம், இடமாற்றம் இரத்துச்செய்தல், உணவினால் ஒவ்வாமை, கோபப் பேச்சினால் நன்மதிப்பை இழத்தல், கள்ளநோட்டு சேரல்.

**கும்பம்** கொடுத்தகடன் வசூலிக்க முறைப்பாடுசெய்தல், பெண்பிள்ளையின் நடத்தைக்கோலத்தினால் வேதனை, அங்கத்துவப்பதவி கிடைத்தல், பங்குத் தொழிலில் சேரும் யோசனை, வாகனயோகம், சுவீப்பால் பணம், தொலைந்தது பற்றிய செய்தியறிதல், பிதாவின் உடல் நிலை தேறுதல்,பில்லி சூனியம் பற்றிய அச்சம்,இழுபட்ட விவாகம் சம்மதிப்பு, வெளியூரின்றும் பணவரவு.


**மீனம்** பழுதடைவதால் மனத்துன்பம், சுபகாரியச்செலவு, சளிநோய் வருத்தல்,நீர்க்கண்டம் பற்றிய எச்சரிக்கை, மேலதிகாரிகளின் கருணை,சகோதர உதவியால் பிரச்சினை தீர்வு,அதிரடி முடிவினால் பயணத்திற்கான ஏற்பாடு,பணமுடையினால் புதிய ஒப்பந்தங்களைத் தவிர்த்தல்,காலாவதியான பொருட்களை கையேந்திக் கவலை.





மூளாய் இந்து இளைஞர் மன்ற விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டி அண்மையில் சிறப்புற இடம்பெற்றது. இதில் ஆண், பெண்களுக்கான சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம் மற்றும் தடகளப் போட்டிகள், பாரம்பரிய விளையாட்டுகள் எனப் பல விளையாட்டு நிகழ்வுகள் நடாத்தப்பட்டது. இதில் வெற்றியீட்டியோருக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்களும் வழங்கப்பட்டன. இந்து இளைஞர் மன்றத் தலைவர் க. துளசிதாசன் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வில், யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சிறீபவானந்தராஜா, இந்து இளைஞர் மன்ற முன்னாள் தலைவரும், பிரபல பொருளியல் ஆசிரியருமான வே. கருணாகரன் உட்பட பலர் கலந்து கொண்டு வெற்றியீட்டியோருக்குப் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தனர். இப்போட்டி நிகழ்வில் ஊர் பெரியோர், விளையாட்டு ஆர்வலர்கள், நலன் விரும்பிகள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## ஜடேஜா, ரெய்னா மோதல்



(போர்ட் ஓப் ஸ்பெயின்)

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான இரண்டாவது லீக் போட்டியில் சுரேஷ் ரெய்னா மற்றும் ரவீந்திர ஜடேஜா ஆகியோர் வாய் தர்க்கத்தில் ஈடுபட்டமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

முத்தரப்பு கிரிக்கெட் போட்டி மேற்கிந்தியத் தீவில் நடைபெற்று வருகிறது. கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற போட்டியில் இந்தியா- மேற்கிந்தியத்தீவுகள் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. இதில், இந்திய அணி 102 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

ஆனால், இந்திய வீரர்களான சுரேஷ் ரெய்னாவும், ரவீந்திர ஜடேஜாவும் மைதானத்தில் நடந்து கொண்ட விதம் இந்த வெற்றியில் கறை படிந்ததைப் போல் நிகழ்ந்தது.


ஆட்டத்தின் 34ஆவது ஓவரை ஜடேஜா வீசினார். அந்த ஓவரின் 5ஆவது பந்தில் மேற்கிந்தியத்தீவு அணி வீரர் சுனில் நரைன் இசாந்த் சர்மாவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். அதன்பின்னர், சுரேஷ் ரெய்னாவின் அருகில்சென்ற ஜடேஜா அவரிடம் ஏதோ கூறினார். அதற்கு ரெய்னாவும் பதிலுக்கு திரும்பக்கூற, அதற்குள் இவர்கள் அருகில் வந்த கப்டன் வீராட் ஹோலி ரெய்னாவை அமைதிப்படுத்தினார்.

இதற்கு முந்தைய ஜடேஜாவின் ஓவரில் நரைனின் பிடியை ரெய்னா தவறவிட்டார். இதனால் கோபமடைந்த ஜடேஜா ஏதோ கூறியதால் ரெய்னாவும் பதிலளித்தார். இதனால் இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இருவருடைய மோதலால் மைதானத்தில சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

தனது அடுத்த பந்திலேயே கடைசி வீரரையும் ஜடேஜா ஆட்டமிழக்கச் செய்தபின், ரெய்னா அவரருகில் சென்று தோள் மீது கையைப் போட்டுக் கொண்டு பொறுமையாக ஏதோ சொன்னார். பின்னர், அவர்கள் இருவரும் சிரித்தபடி பேசிக்கொண்டே ஆடுகளத்தை விட்டு வெளியே வந்தனர்.

# விம்பிள்டன் ரென்னிஸ்; பிரான்ஸ் வீராங்கனை சம்பியன்

(லண்டன்)



விம்பிள்டன் ரென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில், பிரான்ஸ் வீராங்கனை மரியோன் பர்டோலி (15ஆவது தரவரிசை) சம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்தார். இறுதிப் போட்டியில் ஜேர்மனி வீராங்கனை சேபைன் லிசிக்கியுடன் (23தரவரிசை) நேற்று முன்தினம் மோதிய பர்டோலி, தொடக்கம் முதலே அதிரடியாக விளையாடி நெருக்கடி கொடுத்தார். லிசிக்கியின் சேர்வீஸ் ஆட்டங்களை எளிதாக முறியடித்து புள்ளிகளைக் குவித்த அவர் 6-1 என்ற கணக்கில் முதல் செட்டை கைப்பற்றி முன்னிலை பெற்றார். முதல் செட் ஆட்டம் 30 நிமிடம் மட்டுமே நீடித்தது.

இரண்டாவது செட்டிலும் 1-4 என பின்தங்கிய லிசிக்கி, பின்னர் சுதாகரித்துக் கொண்டு கடுமையாகப் போராடினார். எனினும், உறுதியுடன் விளையாடிய பர்டோலி 6-1, 6-4 என்ற நேர் செட்களில் எளிதாக வென்று சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றார். கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் அவர் பெறும் முதலாவது பட்டம் இது. புதிய சம்பியனாகும் கனவுடன் களமிறங்கிய லிசிக்கி 2ஆவது இடத்துடன் திருப்தியடைந்தார். மூத்த வயதில் முதலாவது கிராண்ட் ஸ்லாம் பட்டம் வென்ற வீராங்கனைகள் பட்டியலில் மரியோன் பர்டோலிக்கு (வயது-28) 5ஆவது இடம் கிடைத்துள்ளது. அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்சிடம் 6 ஆண்டுகளுக்கு முன்பாக விம்பிள்டன் இறுதிப் போட்டியில் தோற்று பட்டம் வெல்லும் வாய்ப்பை நழுவவிட்ட, பர்டோலி நீண்ட இடைவெளிக்குப் பிறகு சாதித்து காட்டியுள்ளார்.

6 வயதில் இருந்தே இந்த பட்டத்தை வெல்ல வேண்டும் என்பது எனது கனவாக இருந்தது. உண்மையை சொல்ல வேண்டும் என்றால் இந்த வெற்றியை இன்னும் என்னால் நம்ப முடியவில்லை. அதிலும் சேர்வீசுடன் ஆட்டத்தை முடித்ததை கற்பனை செய்து கூட பார்க்க முடியவில்லை என்று வெற்றின் பின்னர் பார்டோலி தெரிவித்தார்.

## மீண்டும் பீற்றரர்சன், ஒனியன்ஸ்

(லண்டன்)

ஆஷஸ் முதல் டெஸ்ட் போட்டிக்கான இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டது. இதில் ஒனியன்ஸ், கெவின் பீற்றர்சன் ஆகியோர் அணியில் இடம்பிடித்துள்ளனர்.


இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணிகள் மோதும் வரலாற்று சிறப்புமிக்க ஆஷஸ் டெஸ்ட் தொடர், எதிர்வரும் 10ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 25ஆம் திகதி வரை இங்கிலாந்தில் நடைபெறவுள்ளது. முதல் டெஸ்ட், எதிர்வரும் 10ஆம் திகதி நொட்டிங்கொமில் ஆரம்பமாகவுள்ளது. இப்போட்டிக்கான 13 பேர் கொண்ட அணியை, இங்கிலாந்து கிரிக்கெட் சபை நேற்று முன்தினம் அறிவித்தது.

இதில், வேகப்பந்துவீச்சில் பலத்தை அதிகரிக்க கிரகாம் ஒனியன்ஸ் தேர்வு செய்யப்பட்டுள்ளார். ஒரு ஆண்டுக்கு பின் அணியில் இடம் பிடித்த இவர், கடைசியாக கடந்த ஆண்டு ஜூன் மாதம் பெர்மிங்கொமில் நடந்த மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிரான டெஸ்டில் விளையாடினார். முழங்கை காயத்தில் இருந்து மீண்ட, டிம் பிரஸ்னன் அணியில் இடம் பிடித்துள்ளார். ஜேம்ஸ் ஆண்டர்சன், ஸ்டுவர்ட் பிராட், ஸ்டீவன் பின் உள்ளிட்ட வேகங்களும் தங்களது இடத்தை தக்கவைத்துக் கொண்டனர்.

கப்டன் குக்குடன், ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்க ஜோ ரூட் தேர்வு செய்யப்பட்டுள்ளார். கடந்த மார்ச் மாதம் முழங்கால் காயத்தால் பாதிக்கப்பட்ட நட்சத்திர வீரர் கெவின் பீற்றர்சன், மீண்டும் அணியில் இடம் பிடித்துள்ளார். சுழலில் அசத்த ஸ்வான் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இங்கிலாந்து அணி: குக் (கப்டன்), ஜோ ரூட், ஜோனாதன் ட்ரொட், கெவின் பீற்றர்சன், இயன் பெல், ஜொனி பேர்ஸ்டோவ், மட் பிரையர் (விக்கெட் காப்பாளர்), ஸ்டுவர்ட் புரொட், ஸ்வான், ஸ்டீவன் பின், ஜேம்ஸ் அண்டர்சன், பிரஸ்னன், கிரகாம் ஒனியன்ஸ்.

## டயமன்ஸ் லீக் தடகளம் உசைன் போல் தங்கம்



200 மீற்றர் தடகள ஓட்டத்தில் இவ்வாண்டின் சிறந்த காலப் பெறுதியை உலகில் அதிக வேக வீரரான ஜமேக்காவின் உசைன் போல்ட் பதிவுசெய்துள்ளார்.

பரிசில் நடைபெற்ற டயமன் லீக் 200 மீற்றர் ஓட்டத் தூரத்தை உசைன் போல்ட் 19.73 செக்கன்களில் கடந்தார்.

இந்த போட்டித் தூரத்தை 19.92 செக்கன்களில் கடந்த சக வீரரான ஜமைக்காவின் வோரன் வெயர் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார். பிரான்ஸ்சின் கிறிஸ்தோபர் லிமைய்ரி மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

இது குறித்து மகிழ்ச்சி வெளியிட்டுள்ள 26 வயதான உசைன் போல்ட், தனது சில தவறுகளை சரி செய்ய வேண்டியுள்ளதாக கூறியுள்ளார். உசைன் போல்ட்டிற்கு பிரதான சவாலாக விளங்கும் அமெரிக்காவின் டைசன் கே கடந்த மாதம் 200 மீற்றர் ஓட்டத் தூரத்தை 19.74 செக்கன்களில் கடந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தீவுகளின் சிறந்தவன்

(போர்ட் ஓப் ஸ்பெயின்)

சிறந்த மேற்கிந்தியத்தீவுகள் அணி வீரருக்கான விருதை, சகலதுறை வீரர் மர்லான் சாமுவேல்ஸ் வென்றார். மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் சபை (டபிள்யு.ஐ.சி.பி.,) மற்றும் மேற்கிந்தியத்தீவுகள் வீரர்கள் சங்கம் (டபிள்யு.ஐ.பி.ஏ.,) சார்பில், கடந்த ஆண்டு கிரிக்கெட் போட்டியில் சாதித்த மேற்கிந்தியத்தீவுகள் வீரர்களுக்கு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.


இதன்படி, சிறந்த வீரருக்கான விருதை மர்லான் சாமுவேல்ஸ் வென்றார். தவிர இவருக்கு, சிறந்த ஒருநாள் போட்டி வீரருக்கான விருதும் வழங்கப்பட்டது. கடந்த ஆண்டு நடந்த ஒருநாள் போட்டியில் அசத்திய இவர், 2 சதம் உட்பட 482 ஓட்டங்கள் எடுத்தார். சிறந்த டெஸ்ட் போட்டி வீரருக்கான விருதை சந்தர்போல் தட்டிச்சென்றார். கடந்த ஆண்டு நடந்த டெஸ்ட் போட்டியில் அசத்திய இவர், 3 சதம், 5 அரைசதம் உட்பட 987 ஓட்டங்கள் எடுத்தார். இளம் சுழற்பந்துவீச்சாளர் சுனில் நரைனுக்கு, சிறந்த ருவென்ரி-20“ போட்டி வீரருக்கான விருது கிடைத்தது. தவிர இவருக்கு, ”ஏ“ போட்டியில் சிறந்து விளங்கிய வீரருக்கான விருதும் வழங்கப்பட்டது. சிறந்த வளரும் வீரருக்கான விருதை பாவல் வென்றார். சிறந்த வீராங்கனைக்கான விருதை ஸ்டபானி டெய்லர் வென்றார்.






# வடக்கின் மாகாண மட்ட தடகளம்
# இன்று இறுதி நாள்







படப்பிடிப்பு : சுரேஷ், இராஜகுமார்









(யாழ்ப்பாணம்)

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட தடகளப் போட்டியின் இறுதி நாள் இன்றைய தினம் சிறப்புற இடம்பெறவுள்ளது.

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட தடகளப் போட்டி கடந்த நான்காம் திகதி முதல் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்று வருகின்றது. இதில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 12 கல்வி வலய பாடசாலை வீர,வீராங்கனைகள் பங்குபற்றி வருகின்றனது.

இதில் நேற்று வரையான நடைபெற்ற போட்டிகளில் நீள் தூரம் மற்றும் மத்திய தூர ஓட்டங்களில் முல்லைத்தீவு, கிளிநொச்சி வலய பாடசாலைகள் வீர,வீராங்கனைகளே அதிகளவில் முதலிடங்களைப் பிடித்துள்ளன.

குறுந்தூரம் மற்றும் கள நிகழ்ச்சிகளில் யாழ். மாவட்ட வலிகாமம், யாழ்ப்பாண வலயங்கள் முதலிடங்களைப் பிடித்து வருகின்றன. தடளட போட்டிகளில் நேற்று வரை வலிகாமம் மற்றும் யாழ்ப்பாண கல்வி வலய வீர,வீராங்களிகளுக்கிடையில் கடும் போட்டி இடம்பெற்று வருகின்றன. முதலிரு இடங்களிற்கு இரு வலயங்களும் மாறி மாறி பிடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நேற்றைய தினம் பல சாதனைகள் முறியடிக்கப்பட்டன. இதில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி வீராங்கனை ஜெ. அனித்தா புதிய சாதனை ஒன்றை நிலைநாட்டினார். 17 வயதுப் பிரிவு பெண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் 30.09 மீற்றர் எறிந்து புதிய சாதனை படைத்தார். இதற்கு முன்னார் 29.32 மீற்றர் தூரமே வடமாகாண சாதனையாகப் பதிவாகியிருந்தது. கோலூன்றின் பாய்தலில் உடுவில் மகளிர் கல்லூரி வீராங்கனை சாதனை முறியடித்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இவ்வருடப் போட்டிகளில் நகரப் பாடசாலைகள் மட்டுமின்றி கிராமப்புறப் பாடசாலை வீர,வீராங்கனைகளும் பதக்கங்களைக் கைப்பற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தடகளப் போட்டியின் இறுதி நாளாகும். இன்று மாலை 4.00 மணிக்கு இடம்பெறவுள்ள பரிசளிப்பு விழாவுக்கு கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளனர். இப்போட்டி நிகழ்வில் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், வீர, வீராங்கனைகள், விளையாட்டு ஆர்வலர்கள், நலன் விரும்பிகள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (42, 20, இ)

# ஆ... ஆபத்து..!

ஆபத்து வரப்போகிறது என்று மிருகங்கள் அறிந்து கொள்ள வேண்டுமானால் பிற பொருள் அல்லது உயிரினங்களிடமிருந்து வரும் தூண்டுதல்கள் அல்லது சமிக்ஞைகளைப் பகுத்துப் புரிந்து கொள்ள, தெரிந்து கொள்ள வேண்டும். வெவ்வேறு விதமான ஆபத்துகளுக்கு வெவ்வேறு விதமான பதில்-செயலை செய்ய வேண்டியிருக்கிறது. வெவ்வேறு விதமான ஆபத்துகளுக்கு வெவ்வேறு விதமான தப்பிக்கும் வழியை யோசிக்க வேண்டுமே!


முதல் செயல், அந்த இடத்தை விட்டு அகன்றுவிடுவதுதான். அடுத்தபடியாக மட்டுமே, புதிய பொருள் அல்லது மற்ற உயிரினத்தை நெருங்குவது. பின்னர், புதியதைப் பற்றிய ஆராய்ச்சி செய்வது.

அந்தச் சூழலில் புதிதாக வந்துள்ள பொருளோ மற்றொரு உயிரினமோ எவ்வளவு புதுமையாக இருக்கிறது என்பது மிக முக்கியம். அதைப் பொறுத்துத்தான் பதில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

ஓரளவு புதுமையாக இருக்கும் விஷயத்தைக் குறித்து, இது என்ன என்கிற ஆர்வம் எழுந்து நெருங்கத் தோன்றுவது. எதிர்கொள்ளும் பொருளோ உயிரினமோ முற்றிலும் புதுசாக இருந்துவிட்டால், அசையாமல் உறைந்துவிடுவது, ஓட்டம் பிடிப்பது, எச்சரிக்கை ஒலி எழுப்புவது ஆகியவற்றைச் செய்வது. இவை யாவும் அச்சத்தின் வெளிப்பாடுகளே!

பறந்து வந்து கொண்டிருக்கும் ஆபத்து குறித்து அல்லது தரையிலிருக்கும் ஆபத்து குறித்து வேறுபடுத்தி எச்சரிக்கை ஒலி எழுப்பும் பல பறவைகள் உள்ளன. ஒவ்வொரு எச்சரிக்கை ஒலி வகைக்கும் ஒவ்வொரு விதமான தப்பிக்கும் வழி இருக்கிறது.

கிழக்கு ஆபிரிக்காவில் காணப்படும் ஒரு வகைக் குரங்கை, சிறுத்தை மற்றும் இரண்டு வகையான பருந்துகள் இரைக்காக



வேட்டையாடுகின்றன. சிறுத்தை அந்தக் குரங்கை வேட்டையாட வரும்போது அந்தக் குரங்கு எழுப்பும் எச்சரிக்கை ஒலியைக் கேட்டுப் பிற குரங்குகள் மரங்களில் ஏறித் தப்பிக்கின்றன. பருந்துகள் அந்தக் குரங்கை வேட்டையாட வரும்போது அந்தக் குரங்கு வானைப் பார்த்துக் கொண்டே ஓடி, புதர்களுக்குள் சென்று ஒளிந்து கொள்கின்றது. இதனால் மற்ற குரங்குகள் சிறுத்தைக்கும் பருந்துக்கும் வேறுபாட்டை உணர்ந்து கொள்கின்றன.


இதே வகையில் மனித இனமும் பல வித ஆபத்துகளுக்குப் பல்வேறு வகையான பதில் தருகிறது.

ஒரு புதிய பொருளைக் காணும் உயிரினம், முதலில் அச்சம் கொள்கிறது. பின்னர் அதில் ஆர்வம் காட்டுகிறது. அதன் பிறகு ஆராய்ச்சி செய்கிறது. அதற்கும் பின்னர் தான் அதை அலட்சியம் செய்வதா அல்லது எதிர்த்து நிற்பதா என்பதை முடிவு செய்கின்றன.

குழந்தைகளும் பல விதத் தூண்டுதல்களுக்கு பல விதமான எதிர்வினைகளைச் செய்கின்றனர். பெரும் இரைச்சல், அதிக வெளிச்சம், தனியாக விடப்படுவது, மிகவும் வேண்டப்பட்டவர் விட்டுவிட்டுச் செல்வது ஆகியவை குழந்தையிடத்தில் ஒரு வித அச்சத்தை தோன்றச் செய்கிறது.

ஆனால் நாளாக நாளாக புதிய சூழலுக்கு அந்தக் குழந்தை பழகிக் கொள்கிறது. அச்சம் விலகுகிறது.

## கண்கள்



- ஒரு நொடியில் 40-இல் ஒரு பங்கு நேரத்தைத்தான் ஒருமுறை இமைப்பதற்கு கண்கள் எடுத்துக் கொள்கின்றன.
- சராசரி ஆயுளுள்ள மனிதன் தன் வாழ்நாளில் 250 மில்லியன் முறை தனது கண்களை இமைக்கிறான்.
- கண்ணீருக்கு பற்றீரியா போன்ற நச்சுக் கிருமிகளைக் கொல்லும் கிருமிநாசினிக் குணம் உண்டு.
- ஒரு மனிதனின் கண்ணீர் சுரப்பிகளை அகற்றிவிட்டால் நாளடைவில் அவனது கண்கள் வறண்டு போய் இறுதியில் அவன் குருடாகி விடுவான்.
- கண்தானம் செய்யும்போது சிலர் நினைப்பது போல கண்களையே அகற்றி எடுக்க மாட்டார்கள். மாறாக "கார்னியா" எனப்படும் பார்வைப் படலத்தைத்தான் பிரித்தெடுத்துக் கொள்வார்கள். அதுவும் ஒருவர் இறந்த சில மணி நேரங்களுக்குள் இதைச் செய்ய வேண்டும்.

# பிழையின்றித் தமிழ் 30

– ஞானச்செல்வன் –

### இலக்கணச் செய்தியொன்று பார்ப்போமா?

நேற்று வந்தவன் இன்றும் வந்தான்.

இத்தொடரில் வந்தவன் என்பது வினையாலணையும் பெயர். வந்தான் என்பது வினைமுற்று. வருதல் என்பது தொழிற்பெயர்.

பெயர்ச்சொல் என்னவென்று உங்களுக்குத் தெரியும். இந்தப் பெயர்ச்சொல்லில் ஆறுவகை தெரியுமோ? எடுத்துக்காட்டுகளை நோக்குக.

ஏடு, எழுதுகோல், உணவு - பொருட்பெயர்

கொழும்பு, யாழ்ப்பாணம், வீடு - இடப்பெயர்


காலை, மாலை, ஆவணி - காலப் பெயர்

இலை, கிளை, கழுத்து - சினைப் பெயர்

செம்மை, பசுமை, நன்மை - பண்புப் பெயர்

ஆடல், பாடல், முயற்சி - தொழிற் பெயர்

ஆகப் பெயர்ச்சொல் பொருள், இடம், காலம், சினை (உறுப்பு), குணம், தொழில் என அறுவகைப்படும். இவற்றுள் தொழிற் பெயர் என்று ஒரு பெயர் வருகிறது. அஃது என்ன?



வந்தான் - வினைச்சொல் (வினை முற்று) இவன் வருதல் ஆகிய வினையைச் செய்தவன். இப்படிக் குறிக்க வேண்டுமாயின் வந்தவன் என்போம். இந்த வந்தவன் என்ற சொல் வினையால் அணையும் பெயர். அவன் என்ன செய்தான்? வந்தான் என்னும் போது வினைச் சொல். வருதல் அவன் செய்த தொழிலுக்கு (வினைக்கு)ப் பெயர். ஆதலின் அது தொழிற்பெயர். ஆக வினைச் சொல் வேறு, தொழில் பெயர் வேறு எனப் புரிந்து கொள்ள வேண்டும்.

அடுத்து வந்தவன் எனும் சொல் வருதல் என்ற தொழிலைக் (வினையைக்) குறிக்காமல் வருதலைச் செய்த ஆளைக் குறிக்கிறது. வருதல் எனும் வினையால் தழுவப் பெற்ற பெயர் ஆதலின் இது வினையாலணையும் பெயராயிற்று.

மீண்டும் எடுத்துக்காட்டுகள் காண்போம்.

பாடினாள் - வினைமுற்று, பாடுதல் - தொழிற்பெயர், பாடியவள் - வினையாலணையும் பெயர்.

ஒரு தொழிலுக்கு (செயலுக்கு)ப் பெயராக வருவது தொழிற்பெயர். அத்தொழிலைச் செய்தவர்க்குப் பெயராக வருவது வினையாலணையும் பெயர். தொழிற் பெயர் காலம் காட்டாது. வினையாலணையும் பெயர் காலம் காட்டும். தொழிற்பெயரில் ஒருமை, பன்மை, பால் (ஆண், பெண், பலர்) பாகுபாடுகள் இரா. வினையாலணையும் பெயரில் இவையுண்டு.

தேடியவன் - ஆண்பால் வினையாலணையும் பெயர்.

நாடியவள் - பெண்பால் வினையாலணையும் பெயர்.

வந்தவர்கள் - பலர்பால் வினையாலணையும் பெயர்.

தேடுதல்- தொழிற்பெயரில் ஒருமை, பன்மை, ஆண், பெண், பலர் எனும் பாகுபாடு காண முடியாது.

### வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம்

ஒருவினை (செயல்) முற்றுப் பெற்ற சொல்லாயின் அது வினைமுற்று. (எடுத்துக்காட்டு) கற்றான், நின்றாள், சென்றார், வந்தது, வந்தன. ஐம்பால் வினைமுற்றுகள் இவை.

இவ்வாறு வினைமுற்றி நில்லாமல் எஞ்சி நிற்பது (முடியாமல் இருப்பது) எச்சம் எனப்படும். முற்றுப் பெறாத ஒருவினைச் சொல். ஒரு பெயரைக் கொண்டு முடியுமானால் அது பெயரெச்சம். படித்த எனும் சொல் முற்றுப் பெறவில்லை. பையன் என்ற பெயர்ச் சொல்லைச் சேர்த்தால் படித்த பையன் என்று முற்றுப் பெறுகிறது. ஆதலின் படித்த என்பது பெயரெச்சம். (படித்த என்ற சொல்லோடு, பையன் எனும் பெயர் எஞ்சியுள்ளது) படித்த என்பதைப் படித்து என்று மாற்றினால் அதுவும் முற்றுப் பெறவில்லை. வந்தான் என்றொரு வினைச் சொல்லைச் சேர்த்தால் அது முற்றுப்பெறும். அஃதாவது படித்து வந்தான் என்றாகும். ஆதலின் இது வினை எஞ்சிநின்ற சொல் ஆதலின் வினையெச்சம் எனப்படும். (படித்து என்ற சொல்லுடன் வந்தான் எனும் வினை எஞ்சியுள்ளது) ஓரளவு புரிந்திருக்க வேண்டுமே!

# சீனாவில் சினிமா

- அரவிந்த் சச்சிதானந்தம் -

உலகிலேயே அதிகப் படங்கள் தயாரிக்கும் நாடுகளின் பட்டியலில் மூன்றாவது இடத்தில் இருக்கும் நாடு சீனா. அமெரிக்காவும் இந்தியாவும் முறையே முதல் மற்றும் இரண்டாம் இடத்தில் இருக்கின்றன. சீனாவில் படைப்பு சுதந்திரம் குறைவு என்பதால், சீன ரசிகர்களின் எதிர்பார்ப்பைச் சீனப் படைப்பாளிகளால் பூர்த்திசெய்ய முடியவில்லை. அதனால் சீனர்கள் ஹொலிவுட்டை ஆதரிக்கத் தொடங்கிவிட்டனர். விளைவு, சீனாவில் ஆண்டுக்கு பல நூறு படங்கள் தயாரிக்கப்பட்டாலும், சீனா அதிகம் வருமானம் ஈட்டுவது ஹொலிவுட் படங்களின் மூலமே.

அறுபதுகளில் சீனாவில் நடந்த கலாசாரப் புரட்சியின் விளைவாக வெளிநாட்டுப் படங்களைச் சீனாவில் திரையிட முடியாத நிலை ஏற்பட்டது. புதிதாக எடுக்கப்படும் படங்களுக்கும் நிறையக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. எண்பதுகளுக்குப் பின் இந்த நிலை கொஞ்சம் கொஞ்சமாக மாறியது. திரைப்படத்துறையின் மீது இருந்த கட்டுப்பாடுகள் தளர்ந்தன.

1994இல் ஹொலிவுட் படங்களுக்கு சீனாவின் கதவு மீண்டும் திறக்கப்பட, அன்று முதல் இன்று வரை Titanic, Avtar, Iron man, Life of Pi என்று பல பிரபலமான அமெரிக்கப் படங்கள் சீன மொழியில் வெளியாகியுள்ளன. இதன்மூலம் அமெரிக்கா, சீனா இரண்டுமே பல ஆயிரம் கோடி வருமானம் ஈட்டுகின்றன.

ஆண்டொன்றுக்கு சீனாவில் 34 அந்நியப் படங்கள் அனுமதிக்கப்படுகின்றன. அந்த 34 படங்களில் தங்கள் படமும் ஒன்றாக இருக்கவேண்டும் என்று பிரபல ஹொலிவுட் திரைப்பட நிறுவனங்கள் ஒவ்வொன்றும் போட்டி போடுகின்றன. ஆனால் எந்த வெளிநாட்டு படமாக இருந்தாலும், சீனத் திரைப்படத் தணிக்கைக் குழுவால் தணிக்கை செய்யப்பட்ட பிறகுதான் அங்கே வெளியிடமுடியும்.

மற்றொரு பக்கம், இன்றளவும் சீனர்களை வில்லன்களாகவும், சீனாவை சாத்தான்களின் பூமியாகவும் சித்தரிக்கும் ஹொலிவுட் படங்கள் வந்துகொண்டுதான் இருக்கின்றன. ஒரு சில காட்சிகள் என்றால் வெட்டி எறிந்துவிடலாம். முழுநீளப் படத்தில் முழுநீளமும் வரும் சீன வில்லனை என்ன செய்வது? அப்படிப்பட்ட படங்களைச் சீனாவில் எப்படி வெளியிடுவது? அதற்கும் வழி வந்துவிட்டது. இதற்கும் வழி கண்டுபிடித்துவிட்டார்கள்.

பல கோடிகளை இறைத்து, நவீன தொழில்நுட்பத்தின் உதவியுடன் படத்தில் இடம்பெறும் சீன வில்லன்களை கிரா∴பிக்ஸில் கொரியன் வில்லன்கள் போல் மாற்றிவிடுகின்றனர். கடந்த ஆண்டு வெளியான Red Dawn திரைப் படத்தில் ஹொலிவுட் இதனை செய்தது. சீனாவின் ஒப்புதலும் கிடைத்துவிட்டது.

உலகிலேயே அதிகமான படங்களைத் தயாரிக்கும் அமெரிக்கா, உலக வசூலில் முதல் இடம் வகிக்கும் அமெரிக்கா, ஏன் இவ்வளவு மெனக்கெட வேண்டும்? ஒரே வார்த்தையில் சொல்லவேண்டுமானால், லாபம். அமெரிக்காவில் எடுக்கப்படும் படங்களை வெறும் அமெரிக்காவில் மட்டுமே திரையிட்டால் லாபம் குறைவாகத்தான் கிடைக்கும். உலக வசூல் நாடுகளில் சீனா இரண்டாவது இடம் வகிக்கிறது. இதற்கு முன் இரண்டாம் இடம் வகித்த ஜப்பான், இப்போது




மூன்றாவது இடத்துக்கு தள்ளப்பட்டுவிட்டது. எனவே, அமெரிக்கா உட்பட உலகின் கவனம் சீனாவின் பக்கம் திரும்பியிருக்கிறது. அதிக மக்கள் தொகை கொண்ட சீனாவின் சந்தையைப் பயன்படுத்திக்கொள்ள உலகில் கடும் போட்டி நிலவுகிறது. திரைத்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. அந்த வகையில், 2.7 பில்லியன் டொலர் மதிப்புமிக்க சீன வசூலுக்காக சமரசங்கள் செய்து கொள்ள ஹொலிவுட் தயாராகவே இருக்கிறது.

விளைவு, பல ஹொலிவுட் படங்கள் அமெரிக்காவைவிட சீனாவில் அதிக வருமானம் ஈட்டுகின்றன. ஹொலிவுட் இயக்குனர் ஜேம்ஸ் கமரூனுக்கு சீனாவில் ரசிகர்கள் அதிகம். அவர் இயக்கத்தில் வெளிவந்து வெற்றிபெற்ற டைட்டானிக் முப்பரிமாண வடிவம்பெற்று கடந்த ஆண்டு சீனாவில் வெளியிடப்பட்டது. உலகளவில், இப்படம் ஈட்டிய இலாபத்தில் பெரும்பங்கு சீனாவில் இருந்துதான் வந்தது.

டைட்டானிக்கை விட அவதார் சீனர்களை சற்று அதிகமாகவே கவர்ந்துவிட்டது. சீனாவின் தேசிய பூங்காவில் உள்ள மலை ஒன்றுக்கு "அவதார் மலை" என்று பெயர் வைக்கும் அளவுக்கு அவதார் அங்கே சக்கை போடு போட்டுள்ளது.

சீனர்களின் இந்த ஹொலிவுட் மோகத்தை அமெரிக்கா பயன்படுத்திக்கொள்ள நினைக்கிறது. அதனால்தான் சீனர்களுக்கு எதிரான காட்சிகளை நீக்குவது மட்டுமல்லாமல், சீனர்களை கவர்வதற்கென்றே பிரத்தியேகமாக காட்சிகளை சேர்க்கவும் செய்கிறார்கள். சமீபத்தில் வெளியான Iron man 3, சீன வெளியீட்டில், பிரபல சீன நடிகை ∴பான் பிங்பிங்கை சிறு வேடத்தில் நடிக்க வைத்துள்ளனர். மேலும் சீன நடிகர் வாங் நடித்த காட்சிகளையும் நீட்டித்துள்ளனர். இவை முழுக்க முழுக்க சீன ரசிகர்களை கவர்வதற்காக செய்யப்பட்டவை. அமெரிக்க வடிவத்தில் ∴பான் பிங்பிங் நடித்த காட்சிகள் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஹொலிவுட் சீனாமீது அதிக கரிசனம் காட்டுவதற்கு லாபம் தவிர வேறொரு காரணமும் இருக்கிறது. சீனாவின் டி.வி.டி சந்தை. அங்கே எல்லா பிரபலமான ஹொலிவுட் படங்களும் சப்டைட்டில்களோடு கிடைக்கின்றன. அதை பல கோடி மக்கள் விரும்பி வாங்குகின்றனர். எவ்வளவு முயன்றும் இதனை தடுக்கமுடியவில்லை. திருட்டு டி.வி.டிக்களின் மூலம் யாரோ சிலர் லாபம் அடைவதைவிட, நாமே களத்தில் இறங்கினால் என்ன என்று ஹொலிவுட் முடிவு செய்தது. அதனால்தான் சீனச் சந்தைக்கு ஏற்ப இறங்கி வந்திருக்கிறது ஹொலிவுட். சீனாவின் தணிக்கைக் குழு என்ன சொன்னாலும் தலையாட்டுகிறது.

ஹொலிவுட் மட்டும் அல்ல, பொலிவுட் படங்களுக்கும் சீனாவில் மவுசு கூடியுள்ளது. 3 இடியட்ஸ் படம் அங்கே சூப்பர் ஹிட். றொக்ஸ்டார் திரைப்படம் தாய்வான் டி.வி.டி சந்தையில் மிகப்பிரபலம். இந்திய சீன அரசியல் காழ்ப்புணர்ச்சிகளைத் தாண்டி பொலிவுட் சீனாவில் எவ்வாறு ஜொலிக்கப் போகிறது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இவ்வளவு வேகமான வளர்ச்சியைப் பார்க்கும்போது, விரைவில் சீனாவுக்கென்றே பிரத்தியேகமாகப் படங்கள் தயாரிக்கும் காலம் வந்துவிடும் என்றே தோன்றுகிறது. உலகத் திரைப்படத்துறையை சீனாவே கட்டுப்படுத்தும் காலமும்கூட வரலாம். சீனத் தயாரிப்பு முத்திரையோடு படங்கள் இனி வந்தாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை.

சீனா, ஹொங்காங், தாய்வான் ஆகிய மூன்று நாடுகளின் சினிமாவையும் சேர்த்ததுதான் சீனத் திரைப்படத் துறை.

உலக அளவில் பிரபலமான புரூஸ் லீயும், ஜாக்கிசானும் ஹொங்காங் சினிமாவில்தான் தங்கள் வாழ்கையைத் தொடங்கினர்.

தாய்வானைச் சேர்ந்த ஆங் லீ, சீனாவை மையப்படுத்தி எடுக்கப்பட்ட பாயும் புலி, பதுங்கும் நாகம் என்ற படத்தின்மூலம் பிரபலமானார்.

ஹீரோ, பாயும் புலி பதுங்கும் நாகம், எண்டர் தி டிராகன் போன்றவை உலக அளவில் பெரிதும் பேசப்பட்ட சீனப் படங்கள்.

இப்படிச் சீன மொழியிலும் சில தரமான படங்கள் எடுக்கப்பட்டுள்ளன என்றாலும் அவை உலக அளவில் பெரிதாகக் கவனிக்கப்படவில்லை. சீனாவில் நிறைந்திருக்கும் கட்டுப்பாடுகளே அதற்கு முக்கிய காரணம். இப்போது சீனாவில் அமெரிக்கப் படங்கள் அனுமதிக்கப்பட்ட நிலையில், பதிலுக்கு அமெரிக்கா சீனாவின் படங்களை உலக அளவில் கொண்டு செல்லக்கூடும்.

# சிரித்து வாழுதல்!



கோபம் என்பது துயரத்தின் வெளிப்பாடு. துயரம் என்பது செயலிழந்த கோபம். கோபத்தின் பின்னே துயரம் மறைந்திருக்கிறது. புயலைச் சமாளிக்க வேண்டுமானால் அதை எதிர்த்து நிற்பதில் பயனில்லை. கோபத்திலிருப்பவரின் சூட்டைத் தணிக்க வேண்டுமானால் அமைதியுடன் காத்திடுங்கள்.

"ஆனால் எப்படி அமைதியாக இருப்பது?" ஓர் இளைஞர் கேட்டார்.

நீங்கள் கோபத்தில் இருக்கும்பொழுது உங்கள் எண்ணங்கள் உங்களைத் தாக்க விடாதீர்கள். கோபம் என்பது மறைந்துள்ள ஒரு துயரம் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். அந்தப் புரிதலில் மகிழ்ச்சி வரும்.

சந்தோஷமான மனிதர் எப்பொழுதும் எதையும் தேடிக் கண்டுபிடிப்பதில் வல்லவர். நகைச்சுவையுணர்வுடன் இருங்கள். கோபம் உண்டாக்கிய விஷயத்தை தமாஷாகப் பாருங்கள். உங்களின் மனதை அதற்குப் பழக்கப்படுத்துங்கள். முதலில் அது எதிர்க்கும். ஆனால் மெல்ல மெல்ல நீங்கள் வெற்றி பெறுவீர்கள்.

ஒரு வியாபாரி, மாலுமியிடம் கேட்டார், "உங்கள் தந்தை எப்படி இறந்தார்?"

"அவர் கடலில் மூழ்கி இறந்தார். என் பாட்டனாரும் அப்படித்தான்." என்றார் மாலுமி.

"உங்களுக்குக் கடலைக் கண்டால் பயமில்லையா?" என்று கேட்டார் வியாபாரி.

இதற்குப் பதிலாக மாலுமி கேட்டார்.

"உங்கள் தந்தை எங்கே இறந்தார்?"

"படுக்கையில்!"

"உங்களுக்குப் படுத்துக் கொள்ளப் பயமாயில்லையா?" என்று கேட்டார் மாலுமி! நகைச்சுவை உங்கள் வாழ்வின் துணையாகட்டும்.

('வார்த்தையில்லாத ஞானம்' என்ற புத்தகத்தில்)

# சங்கீத யோகம் நூலுக்கு கல்கியின் முகவுரை...

"சங்கீத யோகம்" முதலிய தமிழிசை இயக்கக் கட்டுரைகளை ஒரு புஸ்தகமாகப் போட்டால் என்ன?" என்று சின்ன அண்ணாமலை ஒரு போடு போட்டார்.

"போட்டால் என்ன? போடலாம்! அதனால் பூகம்பமோ யுகப் புரட்சியோ ஏற்பட்டுவிடாது. ஆனால் எதற்காகப் போடவேண்டும்?" என்று கேட்டேன்.

"உலகப் புரட்சியையும் உலக மகா யுத்தத்தையும் தடுப்பதற்காகத்தான்" என்று சொன்னார் சின்ன அண்ணாமலை.

"சங்கீத யோகத்துக்கும் உலகப் புரட்சிக்கும் என்ன சம்பந்தம்?" என்று கேட்டேன்.

"அது என்ன அப்படிச் சொல்கிறீர்கள்? அச்சகத் தொழிலாளர்களுக்கு வேலையில்லாமல் போனால் அவர்கள் ஸ்டிரைக் செய்வார்கள். அதன் மூலம் கம்யூனிஸ்ட்களின் செல்வாக்கும் பெருகும் உலகப் புரட்சி ஏற்படும் ருஷ்யாவின் தலையில் அணுகுண்டைப் போடுவார்கள் மூன்றாவது உலக மகாயுத்தம் ஆரம்பமாகும். இதையெல்லாம் தடுப்பதற்காகத்தான் சொல்கிறேன். சங்கீத யோகத்தைப் புத்தகமாகப் போட்டால் அச்சகத் தொழிலாளிகள் சிலருக்கு வேலை கிடைக்குமல்லவா? அதனால் அவர்கள் ஸ்டிரைக் செய்யாமல் இருப்பார்கள் அல்லவா? அதன்மூலம் உலகப்புரட்சி ஏற்படாமல் தவிர்க்கலாம் அல்லவா?" என்றார் சின்ன அண்ணாமலை.


"ரொம்பசரி அப்படியானால் அவசியம் சங்கீத யோகத்தைப் போடுங்கள்! உலகப் புரட்சியின் தலையிலேயே அதைப் போட்டுவிடுங்கள்" என்றேன்.



# பாடசாலை முகாமைத்துவத்தில் கூட்டுப் பங்கேற்பு அதிக அறுவடை தரும்

*(இலங்கை கல்வி நிர்வாக சேவை திறந்த , மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகள், ஏனைய போட்டிப்பரீட்சைகள், தடைதாண்டல் பரீட்சைகள் போன்றவற்றை எதிர்கொள்ளத் தயாராகிக் கொண்டிருக்கும் ஆசிரியர்களுக்காகவும், இலங்கையின் கல்வி அபிவிருத்தியில் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் சமகால மாற்றங்களை அறிய விரும்பும் ஆர்வலர்களுக்காகவும் இக் கட்டுரை பிரசுரமாகின்றது )*

சைவப்புலவர், சித்தாந்த பண்டிதர்
கடம்பேசுவரன் மணிமாரப்ன்
BSc, PGDE, MSc, MEd, SLEAS-111
உதவிக் கல்விப் பணிப்பாளர் ( திட்டமிடல்)
மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்



பாடசாலைகளில் முகாமைத்துவத்தில் ஒரு மாற்றத்தினை ஏற்படுத்துவதன் ஊடாக, பாடசாலைகளை வெற்றிகரமான பாடசாலைகளாக மாற்றியமைப்பதற்கான ஓர் செயற்பாட்டினை இலங்கையில் உள்ள பாடசாலைகளில் இன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதைக் காணலாம். பாடசாலை ஒன்றில் முக்கிய பங்காளிகளாக அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள், கல்விப் பணிப்பாளரின் பிரதிநிதி ஆகியோர் காணப்படுகின்றனர். இவர்களை அங்கத்தவர்களாகக் கொண்டு பாடசாலை அபிவிருத்திக் குழு ஒன்று நிறுவப்பட்டு அதனூடாக பாடசாலையின் அபிவிருத்திக்கான ஆண்டுத்திட்டம் , ஐந்தாண்டுத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டு பாடசாலையில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற முறைமையினை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இவ்வாறான முகாமைத்துவ முறைமையைக் கூட்டுப் பங்கேற்பு முகாமைத்துவ முறைமை என்று அழைக்கப்படுகின்றது.

இவ்வாறான முகாமைத்துவ முறைமையைக் கூட்டுப் பங்கேற்பு முகாமைத்துவ முறைமை என்று அழைக்கப்படுகின்றது.

இத்திட்டத்தினைப் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தும் பொழுது இரண்டு பிரதான குழுக்கள் பாடசாலைகளில் அமைக்கப்படுதல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

1. **பாடசாலை அபிவிருத்திக் குழு**
2. **பாடசாலை முகாமைத்துவ அணி**

இந்த இரு குழுக்களில் பாடசாலை அபிவிருத்திக் குழுவானது, பாடசாலைக்கான அபிவிருத்தித்திட்டங்களைத் தயாரிக்கும் குழுவாகக்காணப்படும் பொழுது அத்திட்டங்களைப் பாடசாலை வகுப்பறைகளில் நடைமுறைப்படுத்தும் அணியாக பாடசாலை முகாமைத்துவ அணியைக்காணலாம்.

பாடசாலை முகாமைத்துவ அணியின் அங்கத்தவர்களாக அதிபர், பிரதிஅதிபர், பகுதித்தலைவர்கள், பா.அ.குழுவின் ஆசிரியர் பிரதிநிதிகள் ஆகியோர் காணபடுவர். மேற்கூறிய பதவிகளை சேர்ந்தோர் பாடசாலையில் போதுமானளவு இல்லையாயின் பாடசாலையின் பல்வேறு தரங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் இக் குழுவில் சேர்த்துக் கொள்ளப் படுவார்கள்.


பாடசாலை முகாமைத்துவ அணியின் முக்கிய செயற்பாடுகளாக பாடசாலை அபிவிருத்திக் குழுவுடன் நெருங்கிச் செயலாற்றுதல், பாடசாலை அபிவிருத்திக குழுவிற்கு வேறு உப குழுக்களை வழங்கல், பாடசாலையின் தேவைக்கேற்ப உபகுழுக்களின் செயற்பாடுகளைத்தீர்மானித்தல், உபகுழுக்களுக்காக பாடசாலைச் சமூகத்திலிருந்து ஆசிரியர், பெற்றோர், பழைய மாணவர்களை தெரிவுசெய்து கொள்ளல், பாடசாலை அபிவிருத்திக் குழுவினால் எடுக்கப்படும் தீர்மானங்களைப் பாடசாலையில் நடைமுறைப்படுத்தல், கற்றல் கற்பித்தலை வழிகாட்டல், மதிப்பிடல், கண்காணித்தல் போன்றன எதிர்பார்க்கப்படுகின்றன.

இவ்வாறு பல்வேறு உப குழுக்கள் பாடசாலையின் தேவைகளைப் பொறுத்து அமைக்கப்படினும், பாடசாலையில் இக்குழுக்கள் ஏதாவது செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்த விரும்பின் தங்கள் முன்மொழிவுகளை பாடசாலை அபிவிருத்திக்குழுவிடம் சமர்ப்பித்து அனுமதியினைப் பெற்றே நடைமுறைப்படுத்த வேண்டும்.

**பாடசாலைக்கான திட்டம் தயாரித்தல**

ஒரு பாடசாலையின் வெற்றியானது, அப் பாடசாலையின் வருடாந்த அமுலாக்கல் திட்டம், பாடசாலைக்கான அபிவிருத்தித் திட்டம் என்பன சிறந்த முறையில் தயார்செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தலிலேயே பெரிதும் தங்கியுள்ளது. ஆதலினால் இக் கூட்டுப் பங்கேற்பு முகாமைத்துவ முறைமையில் பாடசாலையின் திட்டத்தினைத் தயாரித்தலிலும் நடைமுறைப்படுத்தலிலும் முக்கிய பங்கினை வகிக்கின்றது. பாடசாலைக்கான திட்டம் தயாரித்த லானது ஒரு சுழற்சி முறையிலான செயற்பாடாகவே காணப்படுகின்றது.

இத் திட்டத்தயாரிப்பில் பாடசாலை அபிவிருத்திக்குழு, பாடசாலை முகாமைத்துவ அணி என்பனவற்றின் பங்களிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ள வகையில் அமைவதைக் காணலாம்.




பாட சாலையில் மேற்கொள்ளப்படுகின்ற சுய மதிப்பீடுகள், தேவைப் பகுப்பாய்வுகள், பாடசாலை முகாமைத்துவ அணியினால் வழங்கப்படும் பாடசாலையின் தேவைகள் என்பனவற்றின் அடிப்படையில் பாடசாலை அபிவிருத்திக் குழுவினால் பாடசாலைக்கான அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்படுகின்றது.

அத் திட்டத்தின் அடிப்படையில் பாடசாலை முகாமைத்துவ அணியினால் அத் திட்டம் பாடசாலையில் நடைமுறைபடுத்தப்படுகின்றது. இத் திட்ட நடைமுறைக்காகத் தேவையேற்படின் உப குழுக்களை அமைத்துக் கொள்ளலாம். ஒழுங்கான மேற்பார்வையின் கீழ் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும்.

இம் மதிப்பீடுகளின் அடிப்படையில் பெறுபேறுகள் அறிக்கைப்படுத்தப்பட்டு, அந்த அறிக்கைகளின் அடிப்படையில் திட்டத்தின் பலம், பலவீனங்கள் ஆராயப்பட்டு திட்டமானது இற்றைப்படுத்தலுக்குள்ளாக்கப்படும். பின்னர் மீள இதே ஒழுங்கில் திட்டமானது நடைமுறைப் படுத்தப்படும்.

**மேம்பாட்டுத் திட்டச் சக்கரம்**

கூட்டுப் பங்கேற்பு முகாமைத்துவ முறைமையானது தொடர் செயற்பாடாகவே காணப்படுகின்றது. பாடசாலை அபிவிருத்திக் குழுவானது திட்டமொன்றினைத் தயாரித்து அதனை பாட்சாலை முகாமைத்துவ அணி நடைமுறைபடுத்தி, மேற்பார்வை செய்து அதன் விளைவுகளை மதிப்பீடு செய்து அறிக்கைப்படுத்தி அவ் அறிக்கைகளின் அடிப்படையில் திட்டத்தினை மறுசீரமைத்து அடுத்த திட்டத்தினைத் தயாரிக்க முனையும் வரையான காலப்பகுதி பாடசாலை மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு சுற்றுக்கான காலப்பகுதி ஆகும்.

**திட்டத்தில் நிதிப் பயன்பாடு**

இத் திட்ட நடைமுறைக்காக அரச வங்கியொன்றில் நடைமுறைக்கணக்கொன்றினை ஆரம்பிக்கவேண்டும். இக் கணக்கிற்கு பாடசாலை மேம்பாட்டுத் திட்டக்கணக்கு எனப் பெயரிடப்படும். பாடசாலையின் நிதிநிலைமையில் நடைமுறைக்கணக்கை ஆரம்பிப்பது கஷ்டமாயின் சேமிப்புக் கணக்கை ஆரம்பிக்கலாம்.

இக் கணக்கின் முதலாவது கையொப்பத்தை இடுபவராக அதிபர் காணப்படுவார். இரண்டாவது கையொப்பத்தை இடுபவராகப் பாடசாலை அபிவிருத்திக் குழுவின் பொருளாளர் அல்லது செயலாளர் காணப்படினும் பொருளாளர் விரும்பத்தக்கது. பாடசாலையின் வருடாந்த அமுலாக்கல் திட்டத்திற்கமைய வரவுசெலவுத்திட்டமொன்றைத் தயாரித்து வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதியை பெற்றுக் கொள்ள வேண்டும்.

பாடசாலையில் நடைபெறும் பல்வேறு திட்டங்களுக்காக நிதியைச் சேகரிக்கலாம் எனினும் குறித்த விடயங்களுக்கு வலயக் கல்விப் பணிப்பாளரது அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும். கட்டாயப்படுத்தியோ, தீயவழி களிலோ அன்றி எவ்வித இடையூறுகளும் இல்லாதவகையில் நிதி உதவியைப் பெற்றுக் கொள்ளலாம். பெறப்படும் சகல பண உதவிகளுக்கும் பற்றுச்சீட்டு வழங்கவேண்டும். பற்றுச் சீட்டில் வலயக் கல்விப் பணிப்பாளரது ஒப்பம் பெறபட்டிருக்கவேண்டும்.

**நிதி மூலங்கள்**

பாடசாலை மேம்பாட்டுத் திட்டக் கணக்கிற்கு வருமான நிதிமூலங்களாக அரசநிதி , பெற்றோரின் நன்கொடை, நலன் விரும்பிகளின் நன்கொடை, வாடகை வருமானம் (கட்டடம், உபகரணம்), விற்பனை வருமானம் (உற்பத்தி செய்த பொருள்), அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் மூலம் கிடைக்கும் வருமானம், வேறு அனுமதிக்கப்பட்ட வருமானங்கள் போன்றன காணப்படுகின்றன.

இவ்வாறு கிடைக்கும் வருமானங்கள் யாவும் பா.மே.திட்டக்கணக்கில் வைப்பு செய்யப்பட வேண்டும். பொருளாகக் கிடைக்கும் உதவிகள் யாவும் பொருட் பதிவேட்டில் பதிவுசெய்யப்பட வேண்டும். பணக்கொடுக்கல் வாங்கல்களை முறைப்படி பதிந்து கொள்வதற்காக முறையான காசுப்புத்தகம் ஒன்றைப் பேண வேண்டும்.

காசுவரவுக்கு ஆதாரமாகப் பற்றுச்சீட்டு வழங்கப்பட்வேண்டும் . கொடுப்பனவுகளுக்கு வவுச்சர்கள் பேணப்பட வேண்டும். காசேட்டின் படி வங்கி மீதியும், வங்கிக் கணக்கறிக்கையின் படியான மீதியினையும் சமன்செய்வதற்காக ஒவ்வொரு மாதமும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றைத் தயாரிக்கவேண்டும். பொருளாளர் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கையைச் சமர்பித்து அங்கீகாரம் பெறவேண்டும்.

இவ்வாறாகக் கணக்கு வைப்பு முறைகள் காணப்படினும், பொருத்தமான வகையில் நிதியை செலவு செய்யும் பொறுப்பு பாடசாலை அபிவிருத்திக் குழுவைச் சார்ந்ததாக உள்ளது. பாடசாலை அபிவிருத்திக் குழுவின் தீர்மானம் இல்லாமல் செலவுகளை மேற்கொள்ளக்கூடாது.

செலவுகளை மேற்கொள்ளும் போது அரசாங்கச் சட்டதிட்டங்கள், நிதிப் பிரமாணங்கள், சுற்றுநிருபங்களுக்கமைவாகச் செயற்படவேண்டும். பாடசாலை அபிவிருத்திக் குழுவானது வருடாந்த நிர்வாக அறிக்கைகளையும் நிதி அறிக்கைகளையும் ஒவ்வொரு வருடமும் மார்ச் 31 இற்கு முன் சகல பயனாளிகளுக்கும் அனுப்ப வேண்டும்.

இவ்வாறான முறைமையில் பாடசாலைகளில் முகாமைத்துவச் செயற்பாடுகள் நடைபெறுகின்றபொழுது பாடசாலையானது தமக்குரிய சொத்து என்ற உணர்வு பாடசாலைப் பயனாளிகளிடம் மேலோங்குகின்ற தன்மை காணப்படும்

அத்துடன் பாடசாலையின் உண்மையான பயனாளிகளிடமிருந்து திட்டம் உருப் பெற்று அவர்களினாலேயே நிறைவேற்றப் படுகின்ற காரணத்தினால் அத் திட்டம் வினைத்திறன் வாய்ந்ததாகவும் விளைதிறன் மிக்கதாகவும் அமையும். வெளிப்படைத் தன்மையும் அதிகமாகக் காணப்படும்.

பல நாடுகளில் இப்பாடசாலை மட்டக் கூட்டுப் பங்கேற்பு முகாமைத்துவ முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டு வெற்றி காணப்பட்டுள்ளது.

எனவே நாமும் நமது பாடசாலைகளில் இப் பாடசாலை மட்ட முகாமைத்துவ முறைமையை நடைமுறைப்படுத்தி வெற்றி காண்போம்.

# வடக்கில் வலம் வருகிறது ஆயிரம் ரூபா கள்ள நோட்டுகள்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் அண்மைக் காலமாக கள்ளநோட்டு புழக்கம் அதிகரித்திருப்பதாக வர்த்தகர்கள் கவலை தெரிவிக்கின்றனர். இவ்வாறான கள்ள நோட்டுக்களை இலகுவில் இனம்கண்டு கொள்ள முடியாதிருப்பதாகத் தெரிவித்த இவர்கள் சில வர்த்தக நிலையங்களில் வாடிக்கையாளர்கள் அதிகளவில் இருக்கின்ற சந்தர்ப்பங்களைப் பார்த்து கள்ள நோட்டுக்களைக் கொடுத்து சில ஆசாமிகள் பொருள்களைக் கொள்வனவு செய்து கொண்டு சென்று விடுவதாகவும் தெரிவித்தனர்.

ஒரு சில வர்த்தக நிலையங்களில் மட்டும் பணத்தைப் பரிசோதிக்கும் கருவிகள் இருப்பதனால் கள்ளநோட்டுக்களைக் கண்டு பிடிக்கமுடிகிறதென்றும் ஏனைய பெரும்பாலான வர்த்தக நிலையங்களில் கள்ளநோட்டு ஆசாமிகள் தமது கைவரிசையைக் காட்டிவிட்டுத் தலைமறைவாகி விடுகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை புளியங்குளம் எரிபொருள் நிரப்பு நிலையம், வவுனியா தபால் நிலையம் என்பவற்றில் ஆயிரம்ரூபா பெறுமதியான கள்ளநோட்டுக்களைச் சிலர் கொடுத்து தமது தேவைகளை நிறைவேற்றியிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ள போதிலும் அப்பணத்தினை வழங்கியவர்கள் யார் என்பது தெரியுவரவில்லை எனவும் கூறப்படுகிறது. (10)

## இந்திய மீனவர்கள் 21 பேர் கைது

இந்திய மீனவர்கள் 21 பேர் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கடற் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தலை மன்னார் கடற் பரப்பினுள் ஐந்து படகுகளில் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 21 இந்திய மீனவர்களும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## கிளிநொச்சி மாவட்டத்தில் டெங்கு ஒழிப்பு செயற்பாடு

(கிளிநொச்சி)

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் டெங்கு ஒழிப்பு மாதத்தை முன்னிட்டு கிளிநொச்சி நகரை அண்டிய பகுதிகளிலும் வர்த்தக நிலையங்கள் மற்றும் வளாகங்களில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது குப்பை கூழங்களை அகற்றாமல் இருந்தமை, டெங்கு பரவக்கூடிய இடங்களை வைத்திருந்தமை ஆகியவாகளுக்கு எதிராக கிளிநொச்சி சுகாதார பிரிவினர் சட்ட நடவடிககை எடுத்ததுடன் அறிவுறுத்தல்களையும் வழங்கியுள்ளனர். இச்செயற்பாடானது நேற்று முன்தினம் காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை கிளிநொச்சி பொலிஸாரால் கிளிநொச்சியை சூழவுள்ள பகுதிகளெங்கும் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது டெங்கு பரவக்கூடிய பல இடங்கள் இனங்காணப்பட்டு அவ்வாறு வைத்திருந்த உரிமையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன.

# புற்றுநோயாளர்களுக்கான நிதி சேகரிப்பு வந்தடைந்தது யாத்திரைக் குழு



புற்றுநோயாளர்களுக்கு உதவும் முகமாக நிதிசேகரிப்பில் ஈடுபட்ட தென்னிலங்கையிலிருந்து தெய்வேந்திர முனை வரை பாதயாத்திரையை ஆரம்பித்த மேயர் ரணதுங்கவும் குழுவினரும் நேற்றுக் காலை பருத்தித்துறை முனையை வந்தடைந்து பாத யாத்திரையை பூர்த்தி செய்தனர்.

இங்குவந்து சேர்ந்த மேயர் ரணதுங்க குழுவினரை வர்த்தக பிரமுகர்கள், பொலிஸார் இராணுவத்தினர், பொதுமக்கள் ஆகியோர் வரவேற்றனர்.

மக்கள் மத்தியில் உரையாற்றி மேயர் ரணதுங்க குறிப்பிட்டதாவது,

தெய்வேந்திரமுனையில் ஆரம்பிக்கப்பட்ட எங்கள் யாத்திரை 447 கிலோமீற்றரை 38 நாட்களில் மேற்கொண்டு நேற்று பருத்தித்துறை முனையில் முடிவடைந்துள்ளது.


புற்றுநோயாளர்களுடனான பாதயாத்திரையின் போது சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் வழங்கிய ஆதரவு மகிழ்ச்சிக்குரியன.

ஒவ்வொரு மனிதனும் மற்றவர்களுக்கு உதவும் மனப்பாங்குடன் வாழவேண்டும் அப்போது இருவரது வாழ்க்கையும் மகிழ்ச்சியடையும் இதனிடையில் நான் புற்றுநோயாளர்களுக்கு உதவும் முயற்சியில் ஈடுபட்டேன்.

இந் நிதி சேகரிப்பின் போது கிடைத்த நிதி வடக்கில் தெல்லிபபழை புற்றுநோய் வைத்திய சாலைக்கும் தெற்கில் மஹரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கும் வழங்கப்படவுள்ளது.

மேலும் தெற்கில் நீண்ட தூரங்களிலிருந்து வரும் நோயாளர்களின் நன்மை கருதி தங்குமிட வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறு நடவடிக்கைகள் தெற்கிற்கும் வடக்கிற்கும் உறவுப்பாலமாக அமைகின்றன என்றார். பருத்தித்துறையை வந்தடைந்த மேயர் ரணதுங்கவை நகரசபைத் தவிசாளர், வர்த்தகசங்கத் தலைவர் ஆகியோர் வரவேற்றனர். (01)



நேபாளத்தின் முன்னாள் பிரதம மந்திரியும் ,நேபாள கொம்யூனிஸ்ட் கட்சியின் தலைவருமான மாதேவ்குமார் வவுனியாவில் மக்கள் பிரதிநிதிகளை இந்திரன்ஸ் ரெஸ்டில் சந்தித்து கலந்துரையாடியபோது (10)

# நூல் அறிமுகவிழா

(கிளிநொச்சி)

புலம் பெயர்ந்து அவுஸ்ரேலியாவில் வசிக்கும் கிருஷ்ணமூர்த்தி “மறுவளம்” கட்டுரைகளும் விமர்சனங்களும் பதிவுகளும் நூல் அறிமுகவிழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கரைச்சி பிரதேச செயலக மண்டபத்தில் கரைச்சி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் கு.ரஜீவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நூல் அறிமுகவுரையை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல்,வழங்கவுள்ளதுடன் நூலின் முதல் பிரதியை பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் வழங்க கிளிநொச்சி மக்கள் வங்கி முகாமையாளர் இ.கந்தசாமி பெற்றுக் கொள்ளவுள்ளார். விமர்சனவுரைகளை கிளிநொச்சி பாரதி வித்தியாலய அதிபர் பெ.கணேசன் கிளிநொச்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் இயல்வாணன் ஆகியோரும் ஏற்புரையை நூலாசிரியரும் வழங்கவுள்ளனர்.



# வேலை வாய்ப்புச் செய்திகள்

- சாவகச்சேரியில் உள்ள பாற்பண்ணை ஒன்றில் வேலை செய்வதற்கு ஆண்,பெண் வேலையாட்கள் உடன் தேவை

  தொடர்புக்கு: 0777644799

  0212050400

- மானிப்பாயில் இயங்கிவரும் உதிரிப்பாக விற்பனை நிறுவனத்திற்கு கணனியில் இருப்பை பேணுவதற்கு கணனி அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் தேவை.மானிப்பாயை அண்டிய பகுதியில் வசிப்பவர் விரும்பத்தக்கது.

- உணவு விடுதி ஒன்றுக்கு ஆண்,உதவியாளர் தேவை ஆரம்பச்சம்பளம் 35,000 தொடர்புக்கு: 0774193321

- வடமராட்சி மாலு சந்தியில் மெடிக் கிளினிக்கிற்கு பெண் பிள்ளைகள் தேவை. தொடர்புக்கு: 0772094206

- கொழும்பில் புத்தக வெளியீட்டு நிறுவனம் ஒன்றை நிர்வகிப்பதற்கு இருவர் தேவை. தொடர்புக்கு: 0774752989

- வவுனியாவில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட உணவகத்துக்கும் விருந்தினர் விடுதிக்கும் இலங்கை, இந்திய உணவுத் தயாரிப்பாளர், கொத்து, மாஸ்ரர், வெயிட்டர், house keeping ஆகிய வேலை களுக்கு அனுபவமுள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை, தொடர்புக்கு, 0773405396

- வவுனியாவில் இயங்கும் பிரபல இந்தியன் சைனீஸ் ரெஸ்ரோரன்டுக்கு கிளீனர்ஸ் மற்றும் கிச்சின் கெல்பர் வெயிட்டர்ஸ் தேவை, தகுதிக்கும் அனுபவத்திற்கும் உங்களின் திறமைக்கும் ஏற்ப சம்பளம் தரப்படும். உணவு தங்குமிட வசதிகள் உண்டு.

  தேவையானவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். வயது18-50 இற்கும் உட்பட்டவர்கள் மட்டுமே தொடர்புகளுக்கு: 0777585913, 0242227300

- அலுவலக உதவியாளர் கணனி அறிவுள்ள O/L படித்தவர்கள் தேவை நாடு முழுவதும் விநியோகஸ்தர்கள் தேவை. காயத்திரி பப்ளிகேஷன் இல. 68 பீசில்வா றோட் தெஹிவளை 0777892028

- மேசன் பாஸ், உதவியாளர்கள் உடனடியாகத் தேவை. தொடர்புக்கு: 0717738036

- பாதணி உற்பத்தி நிறுவனத்துக்கு பயிற்சியுள்ள, அற்ற வேலையாட்கள் தேவை. உணவு தங்குமிடம் கூடிய வேதனம் தொடர்புக்கு: 0718144513

# அதிகாரங்களை அகற்றுவதா? இல்லையா?

## சர்வஜன வாக்கெடுப்புக்கு முஸ்தீபு

(கொழும்பு)

மாகாணசபைக்களுக்கான அதிகாரங்கள் தொடர்பில் சர்வஜனவாக்கெடுப்பு நடாத்துவதற்கு அரசு உயர் மட்டத்தில் ஆலோசிக்கப்பட்டுவருவதாகவும் அதற்கான சாத்தியங்கள் அதிகரித்துவருவதாகவும் ஜே.வி.பி தெரிவித்துள்ளது. எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல்களின் பின்னர் நாட்டில் சரவ்ஜன வாக்கெடுப்பு நடத்தப்படக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தள்ளார்.

கடந்த வாரம் ஆளும் கட்சி அமைச்சர் ஒருவரை சந்தித்த போது இந்தத் தகவல் கசிந்ததாக சோமவன்ச அமரசிங்க குறிப்பிட்டுள்ளார். சர்வஜன வாக்கெடுப்பு நடாத்துவது குறித்து அமைச்சரவையில் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த வாக்கெடுப்பு மூலம் ஜனாதிபதி அல்லது பொதுத் தேர்தலுக்கு வழி ஏற்படலாம் எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது. என்ன விடயம் தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது என்பது பற்றிய தகவல்கள் வெளியிடப்படவில்லை. பெரும்பாலும் மாகாணசபை அதிகாரங்கள் தொடர்பில் இந்த வாக்கெடுப்பு நடத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஐ.தே.க வுடன் கைகோர்த்து கண்டியில் களம் குதிக்கிறார் அசாத் சாலி

ஜனநாயக மக்கள் முன்னனியின் தலைவர் மனோ கணேசன் மற்றும் கொழும்பு மாநகர முன்னாள் பிரதி மேயர் அஸாத் சாலி ஆகியோர் மத்திய மாகாண சபை தேர்தலில் போட்டியிடவுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்கள் இருவரும் மத்திய மாகாண சபை தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி சார்பாக கண்டி மாவட்டத்தில் போட்டியிடவுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக அசாத் சாலியை தொடர்புகொண்டு வினவியபோது, இந்த செய்தியை உறுதிப்படுத்தினார். எனினும் மத்திய மாகாணத்தில் எந்த மாவட்டத்தில் போட்டியிடுவது என்பது தொடர்பில் இதுவரை தீர்மானிக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பிலான இறுதி முடிவு ஐக்கிய தேசிய கட்சி முக்கியஸ்தர்களுடன் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையினை அடுத்து தீர்மானிக்கப்படும் என அசாத் சாலி மேலும் தெரிவித்தார்.

2010ஆண்டு நடைபெற்ற மத்திய மாகாண சபை தேர்தலில் மனோ கணேசன் கண்டி மாவட்டத்தில் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பிரதமர் தி.மு.ஜயரட்னவின் மகனான அனுராத ஜயரட்னவும் மத்திய மாகாண சபை தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு சார்பாக போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நடந்து வந்த பாதையை மாணவர்கள் மறக்கக் கூடாது

வரலாற்றை மறந்து நவீனத்துவத்திற்குச் செல்ல முடியாது என்பதை அனைத்து மாணவர்களும் புரிந்து கொண்டு கல்வியில் தம்மை வளர்த்துக் கொள்வது அவசியமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ தெரிவித்தார்.

மாணவ பருவத்தில் ஒரு நிமிடத்தையேனும் வீணாக்காமல் பயனுள்ளதாக மாற்றிக் கொள்வதில் அதிக அக்கறை செலுத்த வேண்டும் எனத் தெரிவித்த ஜனாதிபதி நவீனத்துவம் என்பது வெளிநாட்டவர் போல் நடந்து கொள்வது என்பதல்ல எனவும் குறிப்பிட்டார்.

காலி பத்தேகம கிறிஸ்து தேவ மகளிர் கல்லூரியின் 125 வது வருட நிறைவும் பரிசளிப்பு விழாவும் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

சமாதானமாகவும் சுபீட்சமாகவும் எதிர்காலத்தை எதிர்கொள்வதற்கு மாணவப் பருவத்தின் செயற்பாடுகளே உறுதுணையாகின்றது. சிறு பராயத்தில் கிடைக்கும் அனுபவங்களே எமது எதிர்காலத்திற்கு சிறந்த படிப்பினையாகிறது. தனது வாழ்க்கையில் நாம் கற்றுக் கொண்ட பாடம் இது எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அமைச்சர் பந்துல குணவர்தன- குணரத்ன வீரக்கோன்- பியசேன கமகே உட்பட அமைச்சர்கள் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்ட இந்நிகழ்வில் ஜனாதிபதி தொடர்ந்து உரையாற்றுகையில்-

பிள்ளைகளின் நண்பர்கள் தொலைபேசியோ பேஸ்புக்கோ அல்ல. சிறந்த நண்பர்கள் பெற்றோர்களே அதிலும் அம்மா தான் சிறந்த நண்பி அம்மாவிடம் நாம் அனைத்தையும் பேச முடியும் பகிர்ந்து கொள்ள முடியும்.என்றும் 'அவர் தெரிவித்தார்.

# வேட்பாளர் தெரிவுக்கு கே.பி. விண்ணப்பிக்கவில்லை

## சுசில் பிரேமஜயந்த தகவல்

(கொழும்பு)

புலிகளின் முன்னாள் பிரமுகர் குமரன் பத்மநாதன் வடக்கு மாகாண தேர்தல் வேட்பாளர் தெரிவுக்கு இதுவரை விண்ணப்பிக்கவில்லை என்று அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். தமது கட்சி மாகாண தேர்தலிற்காக வேட்பாளர் விண்ணப்பங்களை கோரியுள்ளதாக தெரிவிக்கும் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இதுவரை கே.பி. என்ற குமரன் பத்மநாதனோ அல்லது புலிகளின் அரசியல் துறை மகளிரணித்தலைவியாகவிருந்த தமிழினியோ வேட்பாளர்களுக்காக விண்ணப்பிக்கவில்லை எனவும் தயாநிதி என்ற தயாமாஸ்டர் வேட்பாளருக்கான விண்ணப்ப த்தை அனுப்பி வைத்துள்ளதாகவும் தெரிவிக்கின்றார்.

வடமாகாணசபைத்தேர்தலை நடாத்துவதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வடமாகாணசபைத் தேர்தலை நடத்தும்படி தேர்தல் ஆணையாளருக்கு உத்தியோக பூர்வமாக கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்துள்ளார்.

வட மாகாணசபைத் தேர்தலுக்கான வேட்பாளர் தெரிவு இன்னும் ஒரு சில தினங்களில் முடிவடைந்துவிடுமெனவும் இது தொடர்பாக அமைச்சர்களான ரிஷாத் பதியூதீன் மற்றும் டக்ளஸ் தேவானந்தா உட்பட இடதுசாரிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும்வடமாகாணசபை வேட்பாளர்களை தெரிவு செய்யும் குழுவின் தலைவர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிக்கின்றார்.

# மின்னேரியாவில் விபத்து வெளிநாட்டவர்கள் காயம்

மின்னேரியா பொலிஸ் பிரிவின் பட்டு ஓயா பகுதியில் பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் பெல்ஜியத்தைச் சேர்ந்த ஒரே குடும்பத்தின் நால்வர் உள்ளிட்ட மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இவர்கள் பயணித்த பஸ் பாலமொன்றின் பாதுகாப்பு வேலியில் மோதியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் பெல்ஜியத்தைச் சேர்ந்த ஒரே குடும்பத்தில் தாய், மகள், இரண்டு மகன்மார்கள் மற்றும் இலங்கையரான பஸ் சாரதி ஆகியோரே காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த பெல்ஜியப் பிரஜைகள் பொலன்னறுவை வைத்தியசாலையிலும் சாரதி தம்புள்ளை வைத்தியசா லையிலும் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது

மேலதிக விசாரணைகளை மின்னேரியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மருந்துப்பொருட்கள் இறக்குமதி மீளாய்வு செய்ய நடவடிக்கை

வருடாந்தம் நாட்டிற்கு கொண்டு வரப்படவுள்ள மருந்துப்பொருட்கள் தொடர்பில் ஆய்வொன்றை மேற்கொள்ள சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது

வருடாந்தம் பல்வேறுபட்ட வர்த்தக நாமங்களில் மருந்துப் பொருட்கள் நாட்டிற்கு கொண்டு வரப்படுவதாக அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.எனினும், சில வர்த்தக நாமங்களிலான மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்ய அவசியமில்லையெனவும் அந்த அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த ஆய்வு மூலம், தரமான மருந்துப்பொருட்களை இறக்குமதி செய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.



# பரமர் சங்கமம்

'முதற்கோணல் முற்றுங் கோணல் என்பது தமிழர்களின் தாரக மந்திரம். அப்படி இருக்க 13 வதும் கோணலானது எப்படி?

13 ஆவது இலக்கம் துரதிஷ்ட மானதென மேற்கத்தய மக்கள் ஒதுக்கி வைத்துள்ளனர். என்பதை அறிவோம் அதற்கு 13 ஆம் திகதிகள் இலக்கங்களைக் கொண்டு தொடங்கிய பல காரண காரியங்கள் நிறைவேறாமல் பின்னடைவு ஏற்பட்டதைச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆங்கிலேயர் மூலமாக ஆரம்பிக்கப்பட்ட மருத்துவமனை களில் 13 ஆம் இலக்க நோயாளர் விடுதி இல்லாமை கல்லூரிகளில் 12ஆ[illegible] வகுப்புக்களுக்கு மேல் இல்லாமல் துறைசார் கூறுகளைக் கொண்டமை போன்ற இன்னும் சிலவற்றை எடுக்கலாம்.

இலங்கை வாழ் தமிழ் மக்களின்தார்மிக அரசியல் உரிமை விடயத்தில் 1987 ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்த்தனா, ராஜீவ்காந்தி ஆகியோர் செய்து கொண்ட உடன்படிக் கையில் உருவாக்கப்பட்ட 13 ஆவது அரசியல் திருத்தச் சட்டம் இதுவரை மழுங்கடிக்கப்பட்டுக்கொண்டே வரப்படுகிறது.

அந்தச் சட்டப்பிரகாரம் இணைக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணங்கள் நிரந்தரமாக தேர்தல் மூலம் குறிப்பிட்ட காலத்துள் அங்கீகாரம் பெறப்பட வேண்டுமெனும் சரத்தை இலங்கை அரசு கவனித்து இருந்து செல்லும்படி அற்றதாக் கியமை வரலாற்றுத் துரோகங்களில் மற்றுமொன்று

அப்போது பலமாக இருந்த புலிகள் உதாசீனப்படுத்தியது வழிகட்டிய முட்டாள் தனமெனலாம். அதைச் செய்திருந்தால் இலங்கை அரசின் மூச்சுப் பலவீனப்பட்டிருக்கும்.

இன்றைக்குப் பலதரப்புப் பேரினவாதிகளும் 13 ஆவது திருத்தச் சட்டம் வலிந்து திணிக்கப்பட்டதாக ஒரே குரலில் ஓங்காரிக்கின்றனர். அதன் பின்பாக 18-வதும் தாண்டி 19-வது திருத்தச்சட்டமும் நிறைவேற்றப்படும் காலங்கள் கனிந்துள்ள நிலைமையிலும் 13 ஆவது சட்டம் நீக்கப்படவும் திருத்தத்துக்கு உட்படுத்தவும் இலங்கை அர்சு துணிந்து விட்டது.

தனக்குத் தனக்கென்டால் நெஞ்சுபடகுக்படக்கென்னும் போன்று பேரினவாதிகள் 13 ஆவது திருத்தச் சட்டம் திணிக்கப்பட்டது. என்கிறார்கள். அவர்களால் தமிழ் மக்களுக்குத் திணிக்கப்பட் டவை எத்தனை?

இனவாதப் போராட்டங்களே திணிக்கப்பட்டவை என்பதை அவர்கள் மறப்பதென்ன மறைக்கலாம். தமிழ் மக்களோ வரலாறுகளோ எளிதில் மறந்து விடுமா?

அப்பொழுதெல்லாம் துணைக்கண்டமான பாரத தேசமே இலங்கை இனப்பிரச்சினையில் தலையிட்டுத்தீர்த்து வைக்க வேண்டுமெனக் குரலெழுப்பிய உள்ளூர் பேரினப் புத்தி ஜீவிகள், சர்வதேச அரசியல் சாணக்கியர் எல்லாம் வாய்மூடி மௌன மாகி இருப்பது ஏன்?

13 ஆவது துரதிஷ்ட இலக்கம் என்பதும் மேலுமொரு தடவை நிரூபணமாகப் போகிறதா என்ன?

29) கொழும்பு பண்டாரநாயக்க விமான நிலையத்திலிருந்து அதிகாலை 4.30 மணிக்குப் புறப்பட்டுச் சென்ற ஆகாய விமானம் 2 மணித்தியாலம் 35 நிமிடப் பயணத்தின் பின் தாய்லாந்தை வந்தடைந்தது. இலங்கை நேரப்படி விமானம் தாய்லாந்தைச் சென்றடைந்த நேரம் என்ன?

1. மு.ப 6.50 2. மு.ப. 6.55 3. மு.ப. 7.05

30) ஒரு பேனாவையும், அழிறப்பரையும் ரூபா 23.00 க்கு வாங்கினேன். அழிறப்பரை விட பேனாவின் விலை ரூபா 7.00 அதிகமாகும். அழிறப்பரின் விலை என்ன?

1. ரூபா 7.00 2. ரூபா 8.00 3. ரூபா 9.00

31) 2008 ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதம் 1 ஆம் திகதி திங்கட்கிழமை எனின், மார்ச் மாதம் 1 ஆம் திகதி என்ன கிழமை?

1. திங்கள் 2. செவ்வாய் 3. புதன்

32) 36kg சீனி மூடையிலிருந்து 4 kg 350g சீனி விற்கப்பட்டால், மூடையில் மீதியாகவுள்ள சீனியின் நிறை எவ்வளவு?

..............................................................................................

33) காலை 10.00 மணிக்கு குறிக்கப்பட்டிருந்த பேருந்து ஒன்று 20 நிமிடங்களின் பின்னர் பயணத்தை ஆரம்பித்தது. அப்பயணத்திற்கு 4 மணித்தியாலயம் 45 நிமிடங்கள் எடுத்தது. பேருந்து பயணத்தைப் பூர்த்தி செய்த நேரம் என்ன?

..............................................................................................

34) ஒரு குழந்தைக்கு நாளொன்றுக்கு இரண்டுவேளை உணவாக நான்கு பிஸ்கட்கள் வீதம் வழங்கப்படுகின்றது. 128 பிஸ்கட்கள் அடங்கிய பைக்கற்று எத்தனை தினத்திற்குப் போதும்?

..............................................................................................

35) குறிக்கப்பட்ட நேரத்திலிருந்து 35 நிமிடங்களின் பின்னர் புறப்பட்ட மகிழுந்து ஒன்று பி.ப 3.45 மணிக்குப் பயணத்தை நிறுத்தியது. மகிழுந்து பயணத்திற்காக 8 மணி 15 நிமிடங்கள் எடுத்திருப்பின் புறப்பட்ட நேரம் யாது?

..............................................................................................

36) 8 முயல்கள் 24 கரட்டை 3 உணவு வேளைகளில் உண்டு முடிக்குமாயின், ஒரு முயல் 24 கரட்டை உண்டு முடிப்பதற்கு எத்தனை உணவு வேளைகள் எடுக்கும்?

..............................................................................................

37) ஒரு தொன் நிறையுடைய சீனியிலிருந்து ஒவ்வொன்றும் 50 கிலோகிராம் கொண்டதான எத்தனை பைக்கெற்றுக்களில் அடைக்கலாம்?

..............................................................................................

38) வீட்டிற்கு வந்த சுட்டத்தவர் ஐம்பத்திரெண்டு பேருக்கு 75 மில்லிலீற்றர் வீதம் குளிர்பானம் பரிமாறப்பட்டது. அதற்காக எத்தனை போத்தல்கள் குளிர்பானம் தேவை?

..............................................................................................



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

1.30 மணி




# கல்வி முரசு

சரியான விடையின் கீழ்க் கோடிடுக

1) ஒரு தெருவில் 21 மின் கம்பங்கள் நடப்பட்டுள்ளன. இரு மின் கம்பங்களுக்கு இடையிலான தூரம் 15 m எனில், முதல் மின்கம்பத்திற்கும் கடைசி கம்பத்திற்கும் இடையிலான தூரம் எவ்வளவு?

1. 315 m 2. 300m 3. 285m

2) அருகிலுள்ள உருவின் நிழற்றப்படாத பகுதியின் தசம எண் யாது?



1. 0.3 2. 0.6 3. 0.7

3) ஒரு குளிர்பானப் போத்தல் 1 *l* 250ml நீரைக்கொள்ளும் இவ்வாறான 6 போத்தல்கள் கொள்ளும் நீரின் கனவளவு யாது?


1. 7*l* 750ml 2. 7*l* 500ml 3. 6 *l* 500ml

4) கடதாசித் தாள் ஒன்றில் கடதாசிக் கீலங்களை ஒட்டுவதன் மூலம் உருவில் காட்டப்பட்டுள்ள வடிவம் ஆக்கப்பட்டுள்ளது. இதில் ▶ பகுதியை ஆக்க 5 cm நீளமான கடதாசிக் கீலம் தேவைப்பட்டது எனில், இந்த உருவத்தை ஆக்க தேவைப்படும் கடதாசிக் கீலம் எவ்வளவு?



1. 25 cm 2. 30 cm 3. 35 cm

5) அருகிலுள்ள உருவானது 6cm x 5 cm x 4 cm அளவுடைய செங்கற்களால் அமைக்கப்பட்டது. இதன் உயரம் எவ்வளவு?



1. 20 cm 2. 12 cm 3. 16 cm

6) ஒரு வரிசையில் ரவிக்கு முன்னால் 9 மாணவர்கள் நின்றனர். அனைவரும் மறுபக்கம் திரும்பி நின்றபோது, ரவிக்கு முன்னால் 2 மாணவர்கள் நின்றனர் எனில், வரிசையிலுள்ள மாணவர்கள் தொகை எத்தனை?

1. 11 2. 12 3. 13

7) ஒரு கிலோகிராம் வாழைப்பழத்தின் விலை ரூபா 80.00 ஆகும். 2 கிலோகிராம் 350 கிராம் வாழைப்பழத்திற்கு எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும்?

1. ரூ. 180 2. ரூ. 188 3. ரூ.189

**பின்வரும் உருக்களைப் பயன்படுத்தி விடை தருக**

□ + ○ = 800g
□ - ○ = 200g

8) பின்வரும் தொடர்புகளில் சரியானது எது?

1)

□ + □ + □ = ○ + ○ + ○ + ○

2) □ + □ = ○ + ○ + ○

3) □ + □ + □ = ○ + ○ + ○ + ○ + ○

9) □ + □ + ○ என்பதன் பெறுமானம் யாது?
1. 1300g 2. 900 g 3. 700 g

10) ஒருவர் அமெரிக்க நாட்டில் பணிபுரிகின்றார். இவருக்கான மாதச் சம்பளம் 800 அமெரிக்க டொலர்களாகும். அமெரிக்க டொலர் ஒன்றின் இலங்கைப் பெறுமானம் ரூபா. 120.00 எனில், இலங்கை நாணயத்தின்படி அவரது மாதச்சம்பளம் எவ்வளவு?
1. ரூபா 86.000 2. ரூபா 92.000 3. ரூபா 96,000

11) ஒரு வியாபாரி தேயிலையை மொத்தமாக வாங்கி, அதனைச் சில்லறையில் விற்பனை செய்வார். இவர் 100 கிராம் கொண்ட தேயிலைப் பக்கற்றுக்களை பொதி செய்து விற்பனை செய்வார். 4 kg 500 g தேயிலையிலிருந்து பொதி செய்யக்கூடிய 100g தேயிலைப்பக்கற்றுக்கள் எத்தனை?
1. 50 2. 45 3. 40

12) மட்டுநகரில் ஒரு குறித்த நாளின் வெப்பநிலை தொடர்பான அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| நேரம் | வெப்பநிலை பாகை செல்சியஸ் |
|---|---|
| மு.ப 8.00 | $29^0$ C |
| மு.ப 10.00 | $32^0$ C |
| ந.ப 12.00 | $34^0$ C |
| பி.ப 4.00 | $31^0$ C |

உயர் வெப்பநிலைக்கும், தாழ் வெப்பநிலைக்கும் இடையேயுள்ள வித்தியாசம் எவ்வளவு?
1. $3^0$ C 2. $4^0$ C 3. $5^0$ C

**வீட்டுத்தோட்டமொன்றில் 10 மாங்கன்றுகள், 9 வாழைகள், 8 தென்னைமரம், 3 அவகாடோ மரம் என்பன உள்ளன.**

13) தாவரங்கள் ஒவ்வொன்றுக்கும் 500 கிராம் வளமாக்கி இட்டால், எல்லா மரங்களுக்கும் எவ்வளவு வளமாக்கி தேவை?
1. 20 கிலோ கிராம் 2. 18 கிலோ கிராம் 3. 15 கிலோ கிராம்

14) ஒரு கிலோகிராம் வளமாக்கி ரூபா 40.00 எனில், வளமாக்கியை கொள்வனவு செய்ய எவ்வளவு பணம் தேவை?
1. ரூபா 600 2. ரூபா 720 3. ரூபா 800

15) தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் தொகை 163. ஒரு வகுப்பறையில் 20 மாணவர்கள் மாத்திரமே பரீட்சை எழுதலாம். இம்மாணவர்களுக்கு எத்தனை வகுப்பறைகள் தேவை?
1. 8 2. 9 3. 10

16) எதிரே ஒரு சதுரமுகியின் வரிப்படம் தரப்பட்டுள்ளது. இதன் ஒருபக்க நீளம் 100 cm எனில், சதுரமுகியின் ஒரு பக்கத்தின் பரப்பளவு எவ்வளவு?
1. 800 $cm^2$ 2. 1000 $cm^2$ 3. 2800 $cm^2$




17) ஒரு மீற்றர் கம்பியை வாங்குவதற்கு ரூ. 40.00 தேவை. 4 மீற்றர் 25 சென்ரிமீற்றர் கம்பியை வாங்க எவ்வளவு பணம் தேவை?
1. ரூபா 160 2. ரூபா 170 3. ரூபா 180

18) தயா, தனது வீட்டிலிருந்து வடக்கு நோக்கி சிறிது தூரம் சென்றபின், வலதுகைப் பக்கம் திரும்பி சிறிது தூரம் சென்றான். பின்பு வலது கைப்பக்கம் திரும்பி சிறிது தூரம் சென்று, மீண்டும் வலதுகைப்பக்கம் திரும்பி சிறிது தூரம் சென்றபின், இறுதியில் இடது கைப்பக்கம் திரும்பினான், இப்போ தயா எந்தத் திசையை நோக்கி நிற்கின்றான்?
1. வடக்கு 2. தெற்கு 3. மேற்கு

19) இப்போ எனக்கு 11 வயது, எனது தம்பியின் வயது 3 ஆகும். இன்னும் எத்தனை வருடங்களில் எனது வயது, தம்பியின் வயதைவிட இருமடங்காகும்?
1. 3 வருடம் 2. 4 வருடம் 3. 8 வருடம்

20) 5 அ நீளமான கம்பித்துண்டு ஒன்றிலிருந்து 2m 85 cm நீளமுள்ள கம்பித்துண்டு வெட்டியெடுக்கப்பட்டது. மீதித்துண்டின் நீளம் எவ்வளவு?
1. 2m 15 cm 2. 3 m 15cm 3. 3m 25 cm


21) எதிரேயுள்ள சதுரத்தின் சுற்றளவு 280 cm எனின், அதன் ஒருபக்க நீளம் எவ்வளவு?
1. 75 cm 2. 70 cm 3. 65 cm



22) ஒரு பூந்தோட்டத்தில் ரோசா, மல்லிகை, லில்லி, சாமந்தி எனும் பூஞ்செடிகள் ஒழுங்கு முறைப்படி மாறிமாறி நடப்பட்டுள்ளன. இதில் 31 ஆவது பூஞ்செடியின் பெயர் என்ன?
1. மல்லிகை 2. சாமந்தி 3. லில்லி

23) தந்தையின் வயது மகனின் வயதின் மூன்று மடங்கு ஆகும். தந்தையின் வயது 42 எனின், மகனின் வயது என்ன?
1. 14 2. 15 3. 16

**பின்வரும் பொருட்களின் விலைகளின் கூட்டுத்தொகையை அவதானித்து விடை தருக.**




24) ஒரு அழிறப்பரின் விலை எவ்வளவு?
1. ரூபா 5.00 2. ரூபா 10.00 3. ரூபா 15.00

25) ஒரு புத்தகத்தின் விலை எவ்வளவு?
1. ரூபா 75.00 2. ரூபா 90.00 3. ரூபா 100.00

26) அருகிலுள்ள வரிப்படத்திலுள்ள மரக்குற்றியின் நீளம் எவ்வளவு?
1cm 2 3 4 5 6 7 8 9 10
1. 5 cm 2. 7 cm 3. 9 cm

27) ஒரு குவியலிலுள்ள தோடம்பழங்களை ஒருவருக்கு 4 வீதம் பங்கிட்டு 12 பேருக்கு கொடுக்கலாம். அதனை ஒருவருக்கு 6 வீதம் கொடுத்தால், எத்தனை பேருக்கு கொடுக்கலாம்?
1. 8 2. 7 3. 6


28) ஒரு பையினுள் இலக்கம் 2 உம், இலக்கம் 4 உம் 16 உம் உள்ளன. இந்த இலக்கங்களின் கூட்டுத்தொகை 56 ஆகும். எனவே பையிலுள்ள இலக்கம் 2 எத்தனை?
1. 4 2. 8 3. 16

# நிகழ்வுகளின் பதிவுகள்





தும்பளை கருணை உள்ளம் சமூக சேவை நிறுவனத்தால் நடாத்தப்பட்ட தையல் பயிற்சி கண்காட்சியும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வின் பதிவுகள்... ([illegible])




மல்லாகம் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் புனித சதாசகாய மாதா ஆலயத்தின் தோற்றம்... (66)



அளவெட்டிப் பகுதியில் உள்ள வயல் நிலங்களில் அமோகமாக விளைந்துள்ள சாமைப் பயிர்கள் (66)



நெடுந்தீவில் அமைக்கப்பட்டு பூர்த்தியாகும் நிலையில் உள்ள தேவானந்தா கலாசார மண்டபத்தின் தோற்றம் (இ)



நெடுந்தீவுக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் புராதன புறாக்கூடு இதுவாகும்... (இ)





கிளிநொச்சி மாவட்ட மக்கள் அமைப்பினால் கிளி. மாயவனூர் ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கும் நிகழ்வின் பதிவுகள்... (90)




இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் நெடுந்தீவுப் பிரிவினர் யாழ். போதனா வைத்தியசாலையில் இரத்ததானம் செய்தபோது... (பா)

# எண்ணெய் தாங்கி ரயில் விபத்து கனடாவில் 60 பேர் உயிரிழப்பு



கனடாவில் எண்ணெய் தாங்கிகளுடன் சென்ற ரயில் தடம்புரண்டு விபத்துக்குள்ளானதில் 60 பேர் பலியாகி இருக்கலாம் என அஞ்சப்ப டுகிறது.

அமெரிக்காவின் வடக்கு டோக்டா நகரில் இருந்து எண்ணெய் ஏற்றிக்கொண்டு 77 தாங்கிகளுடன் சென்ற ரயில், கனடாவின் கிழக்கே குயிக் பெக் மாகாணத்தின் லாமேக்னடிக் நகர் வந்த போது, திடீரென தடம்புரண்டு கட்டிட பகுதிக்குள் புகுந்து விபத்திற்குள்ளானது.இதனால் ஏற்பட்ட தீயிலும், கரும் புகையிலும் அருகில் இருந்த ஏராளமான கட்டிடங்களும், வீடுகளும் சேதமடைந்தன. பாதுகாப்புக் கருதி ஆயிரக் கணக்கான மக்கள் அங்கிருந்து வெளியேற்றப் புட்டனர்.


இதில் 60-க்கும் மேற்பட்டோர் தீயில் கருகி இருக்கலாம் என தகவல்கள் தெரிவிக்கி ன்றன. சம்பவ இடத்தில் 200-க்கும் மேற்பட்ட தீயணைப்பு வாகனங்களில் வீரர்கள் தீயை அணைக்க போராடி வருகின்றனர். அமெரிக்கா விலிருந்தும் வரவழைக்கப்பட்ட தீயணைப்பு துறையினரும் இவர்களுடன் இணைந்து தீயை கட்டுக்குள் கொண்டுவர முயன்று கொண்டிருக கின்றனர்.70 பெட்டிகள் இணைக்கப்பட்டிருந்த இந்த ரயிலில், பெற்றேலியம் பொருட்கள் ஏற்றப்பட்டிருந்த சில பெட்டிகள் வெடித்ததில் இந்த தீவிபத்து ஏற்பட்டுள்ளது தெரியவந்தது.அருகிலிருந்த சவுடியர் நதியிலும் இந்த ரயிலிலிருந்து கசிந்த எரிபொரு ட்கள் கலந்ததாக கியூபெக் மாகாணத்தின் சுற்றுச்சூழல் அமைப்பின் தகவல் அதிகாரி கிறிஸ்டியன் பிளாங்கெட் தெரிவித்துள்ளார்.

# ஏவுகணை சோதனை தோல்வி தொழில்நுட்பக் கோளாறு காரணமாம்!

எதிரி ஏவுகணையை வழிமறித்து தாக்கும் ஏவுகணை சோதனை தோல்வியில் முடிந்தது. இதுகுறித்து விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

எதிரி ஏவுகணைகளை வழிமறித்து அழிக்கும் அதி நவீன ஏவுகணையை அமெரிக்க இராணுவம் நேற்று முன்தினம் சோதனை செய்தது. மார்ஷல் தீவில் இருந்து ஏவப்பட்ட ஏவுகணையை, கலிபோர்னியாவின் வாண்டென்பெர்க் விமான படை தளத்தில் இருந்து ஏவப்பட்ட ஏவுகணை வழிமறித்து தாக்கும் சோதனை நடத்தப்பட்டது. பசிபிக் பெருங்கடல் பகுதியில் நடந்த இந்த சோதனை தோல்வி அடைந்தது.

தொழில்நுட்ப கோளாறு காரணமாக சோதனை தோல்வி அடைந்தது என்று இராணுவ தலைமையகம் பென்டகன்



தகவல் வெளியிட்டது.

தரையில் இருந்து நீண்ட தூரம் சென்று எதிரி ஏவுகணையை அழிக்கும் அதிநவீன ஏவுகணை சோதனை தொடர்ந்து தோல்வி அடைவது குறித்து தீவிர விசாரணை நடத்தப்படும் என்று ஏவுகணை பாதுகாப்பு ஏஜென்சி செய்தித் தொடர்பாளர் ரிச்சர்ட் லெனர் தெரிவித்துள்ளார்.

கடந்த 2008 மற்றும் 2010ம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட சோதனைகள் தோல்வி அடைந்தன. இப்போது மீண்டும் ஏவுகணை சோதனை தோல்வி அடைந்துள்ளதால் அதிகாரிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

# பாடசாலை மீது தாக்குதல் நைஜீரியாவில் 42 பேர் பலி



நைஜீரியாவின் வடக்கு பகுதியில் இஸ்லாமிய 'ரியத் சட்டத்தை நடைமுறைப்படுத்த கோரி போகோ ஹராம் என்ற தீவிரவாத அமைப்பு அரசுக்கு எதிராக சண்டையிட்டு வருகின்றது. இந்நிலையில் யோப் நகரில் உள்ள மமுடோ அரசுப் பள்ளியில் நேற்று முன்தினம் அவர்கள் தாக்குதல் நடத்தினர்.

இப்பகுதிக்குள் புகுந்த தீவிரவாதிகள் அங்கிருந்த அனைவரையும் ஓரிடத்தில் ஒன்று திரட்டி அவர்களின் நெற்றியில் சுட்டும், எரித்தும், தொந்தரவு செய்தும் கொன்று இருக்கின்றனர். இதில் சில மாணவர்களும், ஆசிரியர்களும் தப்பிய நிலையில், 42 பேரின் சடலங்களை வெளியே எடுத்துள்ளனர்.

அருகில் சுடப்பட்டு காயத்துடன் கிடந்த 6 மாணவர்கள் அருகிலுள்ள மருத்துவமனைக்கு எடுத்து செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது. மேலும் அருகில் உள்ள புதர்களில் யாரேனும் ஒளிந்திருக்கிறார்களா என பொலிஸார் தேடி வருகின்றனர்.மேல் நாட்டு கல்வி முறை நாட்டுக்கு தீங்கானது என்று கூறி வரும் போகோ ஹராம் தீவிரவாதிகள் 22 பேரை கடந்த வியாழன் அன்று இராணுவத்தினர் சுட்டுக்கொன்றனர். இதற்கு பழிக்குபழி வாங்கவே இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகிறது.

# கணவர் அடித்துக் கொடுமை; உலக அழகி பொலிஸில் புகார்



உலக அழகியும், பிரபல நடிகையுமான யுக்தா முகி தனது கணவர் மீது பொலிஸில் புகார் அளித்துள்ளார். இந்த புகாரில் கணவன் தன்னை அடித்து துன்புறுத்துவதாகவும், வரதட்சணை கேட்டு தொந்தரவு செய்வதாகவும் மும்பை அம்போலி போலீசில் புகார் அளித்துள்ளார். இது தொடர்பாக வழக்கு பதியப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறது. யுக்தா முகி 1999ல் நடந்த உலக அழகி போட்டியில் தேர்வு செய்யப்பட்டவர். இவர் பிரின்ஸ் துளி என்பவரை கடந்த 2008இல் திருமணம் செய்தார். 35 வயதான முகிக்கு ஒரு ஆண் குழந்தை உள்ளது.

இவர் பொலிஸில் அளித்துள்ள புகாரில்' எனது கணவர் என்னிடம் வரதட்சணை கேட்டு அடிக்கடி சண்டை போடுகிறார். . இயற்கைக்கு ஒவ்வாத செக்ஸ் புணர்ச்சிக்கு என்னை வற்புறுத்துகிறார், மேலும் என்னை அடித்து துன்புறுத்துகிறார்.

இது குறித்து பொலிஸார் விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் இவ்வாறு கூறியுள்ளார்.

உலக அழகியாக இருந்தவர் யுக்தா என்பதால் பொலிஸார் இந்த புகாரை அலட்சியம் செய்யாமல் முக்கியத்துவம் கொடுத்து விசாரித்து வருகின்றனர்.

# கலப்படமற்ற தாய்ப்பால் விற்பனை; வருமானம் ஈட்டும் சீனத் தாய்மார்

(பீஜிங்)

சீனாவின் தென்பகுதியில் உள்ள ஷென்சுன் நகரில் உள்ள திடீர் பணக்காரர்களிடம் ஒரு புதிய பழக்கம் தென்பட்டு வருகின்றது.

தாய்ப்பாலில் உள்ள ஊட்டச்சத்துகள் உடல் ஆரோக்கியத்திற்கு நன்மை செய்யும் என்றும், அதிலும் குறிப்பாக அறுவை சிகிச்சை மேற்கொண்டவர்களுக்கு இது நல்ல பலன்களை அளிக்கும் என்றும் இவர்கள் எண்ணுகின்றனர். இதனைப் பயன்படுத்திக் கொண்டு சின்சின்யூ என்ற தரகு நிறுவனம் பணத்திற்காக பல இளம் தாய்மார்களை இந்தத் தொழிலில் ஈடுபடுத்தி வருகின்றது. ஏழ்மை நிலையில் உள்ள இளம் தாய்மார்கள் பணத்தேவைக்காக தங்களின் தாய்ப்பாலை சில நாட்களில் இருந்து சில வாரங்களுக்கு 2000 முதல் 4000 டொலர் வரை விற்று வருகின்றனர்.

தங்களின் வாடிக்கையாளர்கள் நேரடியாகவோ அல்லது அவர்கள் பீய்ச்சும் கருவி மூலம் எடுத்துத் தரும் பாலையோ அருந்தலாம் என்று இந்த நிறுவனம் விளம்பரப்படுத்தியுள்ளது.

இது பொதுமக்களின் கோபத்தைத் தூண்டியுள்ளது. இது நெறிமுறையற்ற செயல் என்று தங்களின் கோபத்தை இணையதளத்தில் வெளிப்படுத்தியுள்ள மக்கள்,



பணக்காரர்கள் பெண்களிடம் காட்டும் அலட்சியமும், அகம்பாவமும் இதில் வெளிப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்கள்.

பொதுமக்கள் வெளியிட்டுள்ள கருத்துகளால், ஷென்சுன் நகர நிர்வாகம் இந்த நிறுவனத்தின் விற்பனை உரிமத்தைத் தடை செய்துள்ளது.ஆயினும், இதுபோல் பதிவு பெறாத எத்தனையோ நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன.

# காங்கிரஸ் கட்சி இந்தியாவின் பேரழிவு



ஒடிசா மாநிலம் புபனேஸ்வரில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொள்ள வந்த யோகா குரு பாபா ராம்தேவ் அங்கு உரையாற்றுகையில், காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு பல துறைகளில் அன்னிய முதலீட்டை வரவேற்கிறது. வெளிநாடுகளில், அவர்களால் பதுக்கி வைக்கப்பட்டுள்ள பணங்கள் இதன் மூலம் முதலீடுகளாக நாட்டில் இறங்கி விடப்படுகின்றன.நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்து பெரும்பான்மையாக நாட்டை ஆண்டுவரும் காங்கிரஸ் கட்சி, நாட்டில் ஊழல் பெருகுவதற்கு முக்கியக்காரணமாக இருந்து வருகிறது. எனவே காங்கிரஸ் நாட்டின் ஒரு தேசிய பேரழிவு ஆகும்.

உத்தரகாண்டில் பாதிக்கப்பட்டோருக்கு தேவையான உதவிகளையும், மீட்புப்பணிகளையும் செய்ய மத்திய, மாநில அரசுகள் தவறி விட்டன. நாடு தேசியப்பேரழிவை சந்தித்து உள்ள நிலையில் ராகுல் காந்தி கட்சிக்கூட்ட கொண்டாண் டங்களில் கலந்து வருகிறார்.நாட்டில் ஏற்பட்டுள்ள பணவீக்கம், ஏழ்மை, கொள்ளை, ஊழல் போன்ற பிரச்சினைகளிலிருந்து மக்களை திசை திருப்பவே அவர்கள் உணவு பாதுகாப்பு அவசரச்சட்டத்தை கொண்டு வருகிறார்கள்.

வரும் தேர்தலில் நரேந்திர மோடி காங்கிரஸை தோற்கடிக்கப்பார் என தெரிவித்துள்ளார்.

# முள்ளியவளை பொதுச்சந்தை எப்போது புனரமைப்புப் பெறும்?

## கேள்வி எழுப்புகின்றனர் மக்கள்

முல்லைத்தீவு மாவட்டம் கரைதுரைப்பற்று பிரதேச சபைககுட்பட்ட முள்ளியவளை பொதுச் சந்தையைப் புனரமைத்துத் தருமாறு அப்பிரதேச மக்களும் சமூக ஆர்வலர்களும் வேண்டுகோள் விடுக்கின்றனர். இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கடந்த 1954 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப் பொதுச் சந்தையானது இன்று வரை எந்த விதமான கட்டட திருத்தவேலைகளோ புனரமைப்பு வேலைகளோ இல்லாமல் மிகவும் பாழடைந்த கட்டடத்திலேயே இயங்கிவருகின்றது. சுமார் 25 இற்கு மேற்பட்ட வியாபாரிகளைக் கொண்ட இச்சந்தையில் சுமார் 10 இற்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தினமும் தமது தேவைகளை நிறைவேற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இப் பொதுச் சந்தையில் இரண்டு மலசலகூடங்கள் இருக்கின்ற நிலைமையில் இவை இரண்டும் மக்களின் பாவனைக்கு உதவாத வகையிலேயே காணப்படுகின்றன. அத்துடன் இங்கு கிணறு ஒன்று காணப்படுவதுடன் இக்கிணற்றிலிருந்து எந்த விதமான தேவைக்கும் நீரைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையேகாணப்படுகின்றது. ஏனெனில் மழைகாலங்களில் வழிந்தோடும் வெள்ளநீர் அனைத்தும் அக்கிணற்றையே சென்றடைகின்றது. அத்துடன் அக்கிணற்றிலிருந்து நுளம்பு பெருக்கமடைவதையும் காணக்கூடியதாக உள்ளது. அத்துடன் இங்கு வந்துபோகும் பொதுமக்களின் வாகனங்களை நிறுத்துவதற்குப் பாதுகாப்பான ஒரு வாகன தரிப்பிடம் தேவையான போதும் அவ்வாறானதொரு வசதி இங்கு இதுவரை காலமும் இல்லை. இதனால் மக்கள் தமது வாகனங்களை வீதி ஓரங்களில் நிறுத்துகின்றனர். இதனால் வீதி விபத்துக்களும் அடிக்கடி இடம்பெறுவதை காண முடிகின்றது. மேலும் இப்பிரதேச கட்டாக்காலி மாடுகளின் இரவு தங்ககமாகவே இச்சந்தை காணபடுகின்றது. இதனால் மேலும் சுகாதார சீர்கேடுகள் அதிகரிப்பதைக் காணமுடிகிறது. இச்சந்தைக் குத்தகைக்காரரிடம் இது தொடர்பாககேட்டபோது தாம் மாதாந்தம் ஒரு இலட்சத்திற்கு மேல் பிரதேசசபைக்கு குத்தகைப்பணம் கட்டுவதாகவும் மேல உள்ளகுறைபாடுகளை பலமுறை உரிய அதிகாரிகளிடம் முற்படுத்திய போதும் அவர்கள் எவரும் இத்னை கவனத்தில் எடுக்கவில்லை எனவும் மாறாக நீங்கள் தரும் குத்தகைப்பணத்திற்கு இருக்கும் வசதிகள் போதும் எனவும் வெறுப்பேற்றக் கூடிய பதிலையே கூறுவதாகவும் சந்தை குத்தகைதாரர் கூறினார்.

அத்துடன் இப்பிரதேசத்தின் சமூக ஆர்வலர்களில் ஒருவர் இது தொடர்பாக பலமுறை உரிய அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறியதாகவும் எனினும் இதுவரை எந்தவிதமான ஆக்க பூர்வமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர் கூறினார். எனவே இவற்றைக் கருத்தில்கொண்டு உரிய தரப்பினர் மக்களின் இப்பணிவான வேண்டுகொளை நிறைவேற்றிக்கொடுக்க முன்வருவார்களா? என மக்கள் கேட்கின்றனர். (125)

### சீனாவின்...

வெளியிட்டுள்ளது.

மாலைதீவு மற்றும் இலங்கையுடன் இந்த உடன்பாடு தொடர்பாக பேச்சுக்களை நடத்தி, வரைவு உடன்பாட்டைத் தயாரிப்பதற்காக, இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் கொழும்பு செல்லவுள்ளார்.

கடல்சார் பாதுகாப்பு, தகவல் பகிர்வு, இந்தியப் பெருங்கடற் பிராந்தியத்தில் தேடுதல் மற்றும் மீட்பு, பொருளாதார கடல் எல்லைகளைக் கண்காணிப்பது, கடல் எண்ணெய் மாசு, பயிற்சி மற்றும் ஒத்திகைகள் தொடர்பான ஒரு பொறிமுறையை ஏற்படுத்திக் கொள்வதற்கு வசதியாக, சிவ்சங்கர் மேனனின் பயணத்தின் போது, இந்த உடன்பாடு கையெழுத்திடப்படும்.

இந்தப் பயணத்தின் போது சிவ்சங்கர் மேனன், ஜனாதிபதி மற்றும் பாதுகாப்புச் செயலரையும் சந்தித்துப் பேசவுள்ளார். கொழும்பு மற்றும் மாலைதீவுடன் சீனாவின் தலையீடுகள் அதிகரித்துள்ளதன் பின்னணியிலேயே இந்தியா இந்த கடல்சார் ஒத்துழைப்பு உடன்பாட்டைச் செய்து கொள்ளவுள்ளது.

மாலைதீவில் சீனா 2011 இல் தூதரகம் ஒன்றை அமைத்ததுடன், அபிவிருத்தித் திட்டங்களிலும் ஈடுபாடு காட்டிவருகிறது. இது இந்தியாவுடன் அந்த நாடு கொண்டிருந்த அரசியல் மற்றும் பொருளாதார உறவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அதுபோலவே இலங்கையிலும் சீனாவின் தலையீடுகள் அதிகரித்துள்ளதால், இந்தியாவினது நலன்கள் கேள்விக்குள்ளாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

### 13 ஆவது...

எனவும், உள்நாட்டுப் பிரச்சினையையும் இராஜதந்திர உறவுகளையும் ஒன்றோடு ஒன்று கலக்கக்கூடாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். கொழும்பில் இருந்து வெளி வரும் டெய்லி மிரர் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இச் செவ்வியில் முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர். ஜெயவர்த்தன மற்றும் ஆர்.பிரேமதாசா ஆகியோரையும் கடுமையாக விமர்சித்துள்ள கோத்தாபய, நாட்டின் தேசிய பாதுகாப்புத் தொடர்பில் போதிய கவனம் செலுத்தவில்லை எனவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

அத்துடன், ஜெயவர்த்தனவிட்ட தவறினாலேயே இந்திய அமைதிகாக்கும் படை இலங்கைக்கு வந்ததாகக் குறிப்பிட்ட அவர், விடுதலைப் புலிகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் அவர்களை திருப்பி அனுப்பியதன் ஊடாக பிரேம தாசா பெரும் தவறிழைத்துவிட்டதாக தெரிவித்துள்ளார். இதுவே இலங்கையில் நீண்டகாலமாக போர் இடம்பெற்றதுக்குக் காரணம் எனக் குறிப்பிட்ட அவர், மாறாக இந்தியப் படையினரை வைத்தே விடுதலைப் புலிகளை அழித்திருக்க வேண்டும் எனக் கூறியுள்ளார். அத்துடன், தமிழ் மக்களுக்கான பிரச்சினை என்பது ஒரு அரசியல் பிரச்சினையல்ல எனவும், அது சிறுபான்மை மக்கள் எதிர்கொள்ளும் சிறிய பிரச்சினைகள் எனவும் இச்செவ்வியில் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### அரசாங்கம்...

சேர நாம் தயாராக இருந்தோம். ஆனால் அரசாங்கம் பேச்சுவார்த்தையில் பேசப்பட்டவற்றை புறக்கணித்து செயற்பட ஆரம்பித்தது. அதனால் அதில் நாம் பங்கேற்கவில்லை. தற்போது இரண்டு வருடங்கள் கழித்து மீண்டும் தெரிவுக்குழு பற்றி பேசுகிறது. அழைக்கின்ற போதெல்லாம் கையை உயர்த்திக் கொண்டு செல்வதற்கு நாம் மடையர்கள் அல்லர். நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் 31 பேர் மாத்திரம் உள்ளனர். எங்களிடம் நான்கு பேர் மாத்திரமே உள்ளனர். எப்படி நாம் எமது பிரச்சினையை தீர்த்துக் கொள்வது? இங்கு பெரும்பான்மை பிரச்சினை உள்ளது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு பேச்சுக்கள் வந்தபோது அமைச்சர் திஸ்ஸ வித்தாரண எம்மை அழைத்தார். நானும் இதில் உள்ளேன். உங்கள் உரிமைகளை பெற உதவி செய்வேன் என்று கூறி அழைத்தார். இன்று அவரையும் வெளியில் போட்டுவிட்டனர்.

அதன்பின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசுக்கும் இடையில் பாலமாக செயற்பட என்னால் முடியும் அச்சமின்றி கூட்டமைப்பை தெரிவுக்குழுவில் பங்கேற்கச் சொல்லுமாறு அமைச்சர் ஹக்கீம் இந்தியாவில் இருந்து வந்த சுஸ்மா சுவராஜ் குழுவினரிடம் கூறினார். இன்று அவரையும் வெளியில் போட்டுவிட்டனர்.

நானும் அந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் உள்ளேன். என்னுடைய நிலைப்பாடு உங்களுக்குத் தெரியும்தானே பயப்பட வேண்டாம் வாருங்கள் என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன அண்மையில் தெரிவித்தார். இன்று அவரையும் வெளியில் போட்டுவிட்டனர். ஆக நாம் எப்படி நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிற்குச் செல்வது? இது நாடாளுமன்றத் தெரிவுக்குழு அல்ல. இது ஜனாதிபதி தெரிவுக்குழு இதில் எதிர்க்கட்சியில் இருந்து எவரும் இல்லை. 13 ஆம் திருத்தத்திற்கு மேல் சென்று தீர்வு வழங்கப்படும் என்றுதான் ஜனாதிபதி கூறினார். ஆனால் 13 ஆம் திருத்தத்தில் இருந்து எதை குறைப்பது என்று விவாதிக்க தெரிவுக்குழு அமைத்துள்ளனர். எனவே அதில் நாம் ஏன் கலந்துகொள்ள வேண்டும்? என அவர் கேள்வியெழுப்பினார்.

### ‘13’ திருத்தங்கள்...

பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஜனநாயக வழியே சிறந்தது. நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அனைத்துக் கட்சிகளும் பங்குபற்றுவது அவசியமென இந்தியா தெரிவித்துள்ளது. எனது இந்திய விஜயத்தின் போது இரு நாடுகளுக்கும் இடையில் எந்தவொரு ஒப்பந்தமும் கைச்சாத்திடப்படவில்லை. ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு நான் பொறுப்பானவரல்ல. இரு நாடுகளுக்கும் இடையில் சில தகவல் பரிமாற்றங்களே இடம்பெற்றன. அவர்கள் தமது கருத்தை எமக்குத் தெரிவித்தார்கள். நாம் எங்களது கருத்தை அவர்களுக்குத் தெரிவித்தோம். இரு நட்பு நாடுகளுக்குமிடையில் இவ் வாறே கலந்துரையாடல் நடைபெற்றது.

இலங்கையில் நடைபெற்ற போரில் இந்தியாவும் தனது உயிர்களைத் தியாகம் செய்தது. வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படுவது ஜனநாயகத்திற்குக்கிடைத்த பாரிய வெற்றியாகும்.

மகிந்த சிந்தனையின்படி நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட்டுள்ளதுடன், அக்குழு பிரச்சினைக்குரிய தீர்வினை அறிவிக்கும். எனினும் எந்த திட்டமென்றாலும் அதனை பெரும்பான்மை மக்கள் ஆதரவுடனேயே நிறைவேற்றுவதென ஜனாதிபதி உறுதியளித்துள்ளார். இதனையே நாம் இந்தியாவிற்கும் தெரிவித்துள்ளோம். இதனை இந்தியாவும் வரவேற்றுள்ளது. எனவே இலங்கையுடன் நட்புறவைப் பாராட்டும் இந்தியாவிற்கும் நாம் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம் எனத் தெரிவித்தார்.

### புத்தகாயாவில்...

நன்றாக ஒருங்கிணைக்கப்பட்ட வகையில் நடத்தப்பட்டுள்ளதாக வர்ணிக்கப்படும் இந்தத் தாக்குதலில் எவரும் பலியாகவில்லை என்றும், அங்கிருக்கும் போதி மரத்துக்கும் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவித்தன.

அந்த பௌத்த ஆலய வளாகத்தில் உள்ள இரு கோயில்களில் தலா 4 குண்டுகள் வெடித்ததாக அங்கிருக்கும் இலங்கையைச் சேர்ந்த மதகுரு ஒருவர் தெரிவித்துள்ளார். ஆயினும் இலங்கையர்கள் எவரும் இந்தக் குண்டு வெடிப்புக்களில் பாதிக்கப்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார். ஒரு திபெத்தியரும், பர்மா மதகுரு ஒருவரும் இந்தக் தாக்குதலில் காயமடைந்துள்ளனர்.

குண்டு வெடிப்புக்கள் நேற்று அதிகாலை 5.45 மணிக்கு நடந்ததாகவும், இப்படியான தாக்குதல்களுக்கான மிரட்டல்கள் ஏற்கனவே வந்திருந்ததாகவும், ஆயினும் இந்தத் தாக்குதல்களின் பின்னணியில் யார் இருக்கிறார்கள் என்று இதுவரை தெளிவாகவில்லை என்றும் இலங்கையைச் சேர்ந்த அந்த மதகுரு பி.பி.சி.க்கு தெரிவித்தார். இலங்கை, ஜப்பான், பர்மா ஆகிய இடங்களில் இருந்து வருடாந்தம் புத்தகாயாவுக்கு அதிகமாக யாத்திரிகர்கள் வருவது வழக்கம்.

அந்த நிலையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அங்கு தொடர்பு கொண்டு நிலைமை குறித்து விசாரித்ததாகவும், தனது அதிர்ச்சியை அவர் வெளியிட்டதாகவும் அங்கிருக்கும் மதகுரு தெரிவித்தார். இந்தத் தாக்குதலை அடுத்து இந்தியாவில் சென்னை உட்பட 8 முக்கிய இடங்களில் பௌத்த வழிபாட்டிடங்களுக்கான பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக இந்திய உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

### சுன்னாகம்...

நகரமத்தி ஜே/198 கிராம அலுவலர் அலுவல கத்தில் நேற்றைய தினம் முற்பகல் 10.00 மணியளவில் குறித்த வீடுகளின் உரிமையாளர்களுக்கும், சுன்னாகம் இராணுவ பொறுப்பதிகாரிக்கும் இடையே இடம்பெற்ற சந்திப்பின்போதே இராணுவ அதிகாரி மேற்கண்டவாறு தெரிவித்தார். சுன்னாகம் நகரப்பகுதியில் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ள வீடுகளின் உரிமையாளர்கள் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு காணி உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் அலுவலகத்திற்கு வருகைதருமாறு சுன்னாகம் நகர் மத்தி கிராம அலுவலர் அறிவித்துள்ளார். சுன்னாகம் நகர மத்தியில் காங்கேசன்துறை வீதியில் சுமார் 14 வீடுகளில் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### அதிகாரப் பகிர்வின்...

முயன்று வருகிறது எனவே உறுதியான எந்த நிலைப்பாடுமில்லாத இந்த அரசாங்கத்தை நம்பி எப்படி நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் கலந்துகொள்வது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இலங்கையின் தேசிய பிரச்சினையினை தீர்ப்பதற்காகவே இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூலம் மாகாணசபை முறைமை கொண்டுவரப்பட்டது. இந்த முறைமையில் காணப்படுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்து முன்னோக்கிப் போகவேண்டுமே தவிர அதனை வலுவிழக்கச் செய்யக்கூடாது. இரு நாடுகள் சேர்ந்து உருவாக்கிய ஒப்பந்தமொன்றினை ஒரு நாடு தன்னிச்சையாக நீக்கமுடியாது. நீக்கவும் கூடாது. அதில் திருததங்களை அல்லது மாற்றங்களைக் கொண்டுவர வேண்டுமென்றால் இரு நாடுகளும் பேச்சுவார்த்தைகளை நடத்தியே இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும்.

13 ஆம் திருத்தத்தில் உள்ள அதிகாரங்களை அப்படியே நடைமுறைப்படுத்த வேண்டும் என இந்தியா உறுதியாகக் கூறியுள்ளது. ஆனால் இந்த அரசாங்கம் இந்த விடயத்தில் என்ன செய்யப்போகின்றது என்பது தெரியவில்லை. ‘13’ விடயத்தில் இந்த அரசாங்கம் தன்னிச்சையாக முடிவெடுத்தால் அது இலங்கை - இந்திய உறவில் விரிசலையே தோற்றுவிக்கும்.

அதிகாரப்பகிர்வின் மூலமே தேசிய பிரச்சினைக்கு தீர்வினை எட்டமுடியும் மாறாக அதிகார பகிர்வால் நாடு ஒரு போதும் பிரியப் போவதில்லை. மாறாக நாடு ஐக்கியப்படும் என்பதை இந்த அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும். நாடுகள் பிரிந்த மற்றும் இணைந்த வரலாறுகளை எடுத்துப்பார்த்தால் இது நன்கு புரியும்.

2009 ஆம் ஆண்டிலிருந்து 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று தீர்வை வழங்குவதாகக் கூறிய அரசாங்கம் இன்று அதற்கு மாறான ஒரு கருத்தினை கூறிவருகிறது. எனவே தேசிய பிரச்சினையினை தீர்ப்பதில் இந்த அரசாங்கம் உறுதியான நிலைபாட்டை கொண்டிருக்கவில்லை என்பது தெட்டத்தெளிவாக தென்படுகின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

# சர்வதேசத்தை அங்கீகரிக்கிறதா பொதுநலவாய நாடுகள் அமைப்பு

## கேட்கிறார் மங்கள சமரவீர

பொதுநலவாய நாடுகள் அமைப்பு சர்வாதிகாரத்தை அங்கீகரிக்கின்றதா என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர கேள்வி எழுப்பியுள்ளார். இலங்கையில் பொதுநலவாய நாடுகள் கொள்கைகளும் கோட்பாடுகளும் பின்பற்றப்படுவதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சர்வதிகார முறைமையிலான ஆட்சியை நோக்கி நாடு நகர்ந்து கொண்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான ஓர் பின்னணியில் எதிர்வரும் நவம்பர் மாதம் கொழும்பில் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வு நடைபெற்றால் அது சர்வாதிகாரத்தை பொதுநலவாய நாடுகள் அமைப்பு அங்கீகரிப்பதாகவே அர்த்தப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நடைமுறைச் சாத்தியமான மாற்றங்களையே பொதுநலவாய நாடுகள் அமைப்பு இலங்கையிடமிருந்து எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படாத நிலைமை நீடிப்பதுடன் ஜனநாயக விழுமியங்கள் பேணிப் பாதுகாக்கப்படுவதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விடயங்கள் குறித்து பொதுநலவாய நாடுகள் அமைப்பு கவனம் செலுத்த வேண்டுமென அந்த அமைப்பின் பொதுச செயலாளர் கமலேஷ் சர்மாவிற்கு, மங்கள சமரவீர கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

நீதித்துறை சார் நியமனங்களும், இடமாற்றங்களும் அலரி மாளிகையின் உத்தரவின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவித்துள்ளார். ஊடகவியலாளர்கள் ஆபத்துக்களை சந்திக்கும் மிக மோசமான நாடுகளின் பட்டியலில் இலங்கை நான்காம் இடத்தை வகிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

சீன உதவியுடன் இணையத் தளங்கள் முடக்கப்படுவதுடன் உளவு பார்க்கப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். கிறிஸ்தவ மத வழிபாட்டுத் தலங்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவதாகவும் தாக்குதல் நடத்துவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் ஒரு சில பரிந்துரைகளை அமுல்படுத்த கால அவகாசம் அவசியம் என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது என்ற போதிலும், பரிந்துரைகளை அமுல்படுத்துவதில் அரசாங்கத்திற்கு காணப்படும் அர்ப்பணிப்பு சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது என மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

# மின்கம்பம் சேதம்; அதிகாரிகள் அசமந்தம்



(யாழ்ப்பாணம்)

இடைக்காடு மகாவித்தியாலயத்தில் இருந்து முனியப்பர் கோயில் செல்லும் உள் வீதியில் பாரிய மின்சாரக்கம்பம் கடந்த மூன்று நாட்களாக வாகனம் ஒன்றால் சேதமாக்கப்பட்டு முறிந்து விழும் நிலையில் உள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மின்சார சபையினருக்கு தெரிவித்தும் உரிய அதிகாரிகள் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இப்பாதையூடாக பயணிக்கும் மக்கள் அச்சத்துடன் பயணங்களை மேற்கொள்வதுடன் எந்த நேரத்திலும் மின் கம்பம் விழும் தறுவாயில் உள்ளது. எனவே உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (15)

# வீடுடைத்து கொள்ளை பல்கலை மாணவன் கைது

வீடு உடைத்து கொள்ளையிட்ட சம்பவம் ஒன்றுடன் தொடர்புபட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் பேராதனை பல்கலைக்கழக பொருளியல் பீட மாணவன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பேராதனை பொலிஸ் குழுவொன்றிற்கு கிடைக்கப் பெற்ற தகவலின்படி இம்மாணவன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடம் மேற்கொண்ட விசாரணைகளின்போது பேராதனை பிரதேசத்தில் இவ் வருடம் இடம்பெற்ற 8 கொள்ளைச் சம்பவங்கள் மற்றும் கடந்த வருடம் இடம்பெற்ற 9 கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக தெரியவந்துள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளவர் வலப்பன்ன பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதான இளைஞன் என பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் கண்டி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பேராதனை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரம்

## வலியுறுத்துகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

வடக்கு மாகாண சபை உட்பட நாட்டின் அனைத்து மாகாண சபைகளுக்கும் காணி மற்றும் பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

திவயின சிங்களப் பத்திரிகையின் ஞாயிறு வார இதழுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க வழங்கியுள்ள பேட்டியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

13 ஆவது திருத்தச் சட்டத்தை திருத்த முனையும் அரசின் செயற்பாட்டை ஆதரிக்க முடியாது. அதில் எந்தவித திருத்தங்களும் செய்யக்கூடாது. மேலும் அதில் கூறப்பட்டுள்ளது போன்று மாகாண சபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்.

அதன் மூலம் நாடு பிரிவினையை நோக்கித் தள்ளப்படும், தனி நாட்டை உருவாக்கி விடும் என்றெல்லாம் இனவாதிகள் மேற்கொள்ளும் பிரசாரத்தில் துளியும் உண்மையில்லை.

அரசாங்கம் அரசியலமைப்பில் திருத்தம் செய்வதாயின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்குத் தான் திருத்தச் சட்டம் கொண்டு வரவேண்டும். அதனை ஒழிப்பதாக ஜனாதிபதி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதியளித்துள்ளார்.

அதை விட்டுவிட்டு இனவாதிகளைத் திருப்திப்படுத்த அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடாது என்றும் திஸ்ஸ அத்தநாயக்க தனது பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளார்.

# இயற்கை அனர்த்தத்தால் வவுனியா விவசாயிகள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

வவுனியா வடக்கு பிரதேச விவசாயிகள் தொடர்ச்சியாக ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர்.

வவுனியா வடக்கு நெடுங்கேணி, கனகராயன்குளம், புளியங்குளம் ஆகிய பிரதேச மக்கள் தொடச்சியாக இரண்டு ஆண்டுகளில் ஒரு ஆண்டு வறட்சி மற்றைய ஆண்டு வெள்ளம் காரணமாகவும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள னர்.

இதனால் பயிர்ச் செய்கைகளுக்காக வங்கிகளிடம் கடன், அடைவுக்கடன், போன்றவற்றை மீள் செலுத்தமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டதோடு வங்கிகளில் வைக்கப்பட்ட நகைகளுக்கு கூட வட்டி செலுத்தமுடியாத நிலையில் உள்ளனர்.

வங்கிகள் குறிப்பாக மக்கள் வங்கி, இலங்கை வங்கி போன்ற அரச வங்கிகள் குறுகிய கால எல்லைக்குள் ஏல விற்பனைக்கு விடுவதினால் இப்பிரதேச மக்கள் போர்ச் சூழலில் அனைத்து உடமைகளையும் இழந்த நிலையில் தற்போது நகைகளையும் இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர். (40)

# சைக்கிள் பாதுகாப்பு ஊழியர் விசாரணைக்காக அழைப்பு

மருதனார்மடம் சந்தை சைக்கிள் பாதுகாப்பில் விடப்பட்ட புதிய சைக்கிள் காணாமற் போனமை சம்பந்தமாக சுன்னாகம் பொலிஸாரினால் சைக்கிள் பாதுகாப்பு கடமை ஊழியர் விசாரணைக்காக நேற்றுப் பகல் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மருதனார்மடம் சைக்கிள் பாதுகாப்பில் விடப்பட்ட புத்தம் புதிய சைக்கிள் ஒன்று காணாமற் போயுள்ளது. சைக்கிள் பாதுகாப்பில் நின்ற ஊழியரிடம் சைக்கிளை பாதுகாப்பில் விட்டுவிட்டு டிக்கெட் தரும்படி கேட்டபோது டிக்கெட் வழங்காது சைக்கிள் பாதுகாப்பாக இருக்கும் எனக் கூறி, குறிப்பிட்ட நபரை அனுப்பியுள்ளார்.

உரியவர் சந்தையில் தனது தேவைகளை பூர்த்தி செய்து கொண்டு வந்து சைக்கிள் பாதுகாப்பில் சைக்கிளை பார்த்த போது சைக்கிள் களவாடப்பட்டதைக் கண்டுள்ளார். சைக்கிள் பாதுகாப்பு ஊழியரிடம் சைக்கிள் காணாமல் போனது பற்றி தெரிவித்தபோது வேண்டா வெறுப்பாக செயற்பட்டதுடன் உரிய பதிலையும் கூறாது இருந்துள்ளார்.

இந்நிலையில் சைக்கிளை திருட்டுக் கொடுத்தவர், சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணையை மேற்கொண்டதன் அடிப்படையில் குறிப்பிட்ட சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தின் ஊழியர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

# திருநெல்வேலிச் சந்தையில் பணப்பைகள் அபகரிப்பு

## திண்டாட்டத்தில் வியாபாரிகள்

திருநெல்வேலி சந்தை வியாபாரிகளின் பணப்பைகள் தொடர்ந்து திருட்டுப் போகும் சம்பவங்களினால் வியாபாரிகள் தமது வியாபாரத்தைப் பார்ப்பதா அன்றி தமது பணப்பைகளை பாதுகாப்பதா என்று தெரியாது பெரும் திண்டாட்டமான நிலைமையில் காணப்படுகின்றார்கள்.

கடந்த மூன்று மாத காலத்தில் சுமார் பத்துக்கும் மேற்பட்ட வியாபாரிகளின் பணப்பைகள் யாருக்கும் தெரியாத வகையில் மிகவும் நுட்பமாக திருடப்பட்டுள்ளன.

கடந்தவாரம் சந்தையில் வியாபாரம் செய்யும் ஒருவரின் பணப்பை 3500 ரூபா பணத்துடன் திருடப்பட்டதுடன் மீண்டும் நேற்றுப் பகல் மற்றுமொரு வியாபாரியின் பணப்பை 15 ஆயிரம் ரூபா பணத்துடன் திருடப்பட்டுள்ளது.

இத்தகைய திருட்டுச் சம்பவங்கள் தொடர் கதையாக இருக்கின்றபோதிலும் பொலிஸ் நிலையம் சென்று முறையிடுவதில் வியாபாரிகள் காட்டும் அக்கறையின்மை திருடர்களுக்கு மேலும் ஊக்கமளிப்பதாக அமைந்து வருகின்றமையும் குறிப்பிடக் கூடியதாகும்.

பொலிஸ் நிலையம் சென்றால் பொலிஸாரின் பல்வேறு கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும் மற்றும் கால தாமதம் ஏற்படும் எனக் கூறி வியாபாரிகள் பின்னடிப்பதாகவும் சந்தையில் வியாபாரம் செய்யும் சிலர் தெரிவித்தனர்.

# நெடுந்தீவு சேவையில் மீண்டும் குமுதினி

நெடுந்தீவு போக்குவரத்து சேவையில் ஈடுபட்டு பழுதடைந்த நிலையில் காணப்பட்ட குமுதினிப் படகு மீண்டும் நெடுந்தீவுக்கான போக்குவரத்துச் சேவையில் கடந்த 5 ஆம் திகதி முதல் இணைக்கப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினால் சேவையில் விடப்படும் குமுதினிப் படகு கடந்த மாதம் பழுதடைந்ததைத் தொடர்ந்து அதனுடைய சேவை இடை நிறுத்தப்பட்டு இருந்தது.

இதனால் நெடுந்தீவுக்கான போக்குவரத்தில் ஒரு நெருக்கடியான நிலைமை காணப்பட்டது. ஏற்கனவே வடதாரகை கப்பல் சேவை கடற்படையினரின் துரிதமான முயற்சி காரணமாக கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது. இந் நிலையில் குமுதினிப்படகு பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து கடற்படையினரின் துரித நடவடிக்கைகள் காரணமாக திருத்தம் செய்யப்பட்டு சேவையில் மீண்டும் இணைக்கப்பட்டுள்ளதாக கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது நெடுந்தீவுக்கான கப்பல் சேவைகள் அதிகரித்துள்ளமையால் நெடுந்தீவு மக்களின் போக்வரத்து கஷ்டம் நீக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 யூலை 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.